# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 107 மாசி 29ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 13 மார்ச் 2018 வள்ளுவர் ஆண்டு 2049


## சாதாரணதர பரீட்சை பெறுபேறுகள் இந்தவாரம்

யாழ்ப்பாணம், மார்ச் 13
ஜி.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் இந்த வாரம் வெளியாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது.
இந்த முறை பரீட்சைக்கு சுமார் 6 இலட்சத்து 80 » 06

## ஜெனிவா செல்லவிடாத வேலைப்பளு

கிளிநொச்சி, மார்ச், 13
நான் வேலைப் பளு காரணமாக ஜெனிவா செல்லவில்லை. எமது உறுப்பினர்கள் அனைத்து விடயங்களையும் அங்கு எடுத்துரைப்பர் என்று தெரிவித்தார் வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.
கிளிநொச்சி உருத்திரபுரம் சிவநகர் பகுதியில் மூத்தோர்சங்கக்கட்ட » 06



# இன அழிப்புக்கு நீதி கோரி ஜெனிவாவில் நடைபவனி

ஜெனிவா, மார்ச் 13
தாயகத்தில் நடந்த தமிழ் இன அழிப்புக்கு நீதி வழங்க வேண்டும் எனக் கோரி ஜெனிவாவில் நேற்றுப் பெரும் நடைபவனி ஒன்று நடத்தப்பட்டது.
ஜெனிவா தொடருந்து நிலையத்துக்கு அருகில் உள்ள பூங்காவில் இருந்து ஆரம்பமான நடைபவனி » 06

# பட்டுப்பாதை உருவாக்கம் பயத்தை ஏற்படுத்தக்கூடாது

### ஜப்பானில் கூறினார் மைத்திரி

கொழும்பு, மார்ச் 13
சீனாவின் பட்டுப்பாதைத்திட்டம் பன்னாட்டுச் சமூகத்துக்கு அச்சுறுத்தலாக அமையக் கூடாது என்று தெரிவித்துள்ளார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன.
ஜப்பான் ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியில் அவர் இவ் » 06

# மாரப்பன, மலிக், சுவாமியை கட்சியை விட்டு விரட்டுங்கள்

### வசந்த சேனநாயக்க உடும்புப்பிடி

கொழும்பு, மார்ச் 13
தேசியப் பட்டியல் ஊடாகத் தெரிவாகி அமைச்சுப் பதவிகளை வகிக்கும் திலக் மாரப்பன, மலிக் சமரவிக்கிரம, டி.எம். சுவாமிநாதன் ஆகியோரை வைத்துக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது. அவர்களைக் கட்சியை விட்டு விரட்ட » 06

see more news in
newuthayan.com

# தாமதிக்கும் தந்திரத்தால் ஏமாற்றுகிறது இலங்கை

### வாக்குறுதிகளைத் தட்டிக்கழிக்கிறது என்று போர்க்குற்ற நிபுணர் ராப் சுட்டிக்காட்டு

ஜெனிவா, மார்ச் 13

இலங்கை தாமதிக்கும் தந்திரத்தைக் கடைப்பிடித்து பன்னாட்டுச் சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளைத் தட்டிக்கழிக்கின்றது.
இவ்வாறு அமெரிக்காவின் முன்னாள் போர்க்குற்ற நிபுணர் ஸ்ரீபன் ராப் தெரிவித்தார்.
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு ஆதரவு வழங்கிய நாடுகள் இலங்கையைப் பொறுப்புக்கூற வைப்பதில் கடுமையான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 37ஆவது கூட்டத் தொடர் இடம்பெற்று வருகின் » 06

## கண்டியைக் காட்டி அரசு தன்வேலையைமுடிக்கிறது

### கண்டுபிடித்தார் பீரிஸ்

கொழும்பு, மார்ச் 13
நாட்டின் கவனத்தைக் கண்டியின் பக்கம் திருப்பிவிட்டு பலவந்தமாகக் காணாமல் போவதிலிருந்து அனைவரையும் பாதுகாக்கும் சட்டவரைவை நாடாளுமன்றில் நிறைவேற்றியது. அதைப் போன்று புதிய அரசமைப்பையும் நிறை » 06

## முகநூல் நிறுவனப் பதிலே தடையைத் தீர்மானிக்கும்

கொழும்பு, மார்ச் 13
இனக் குரோதக் கருத்துக்கள் அகற்றப்படும் என்று முகநூல் நிறுவனம் உறுதிமொழி வழங்கினால் சமூக ஊடகங்கள் மீதான தடை நீக்கப்படும் என்று முக்கிய அமைச்சர் ஒருவர் தெரிவித்தார் என்று பி.பி.சி. சிங்கள சேவைச் செய்தி வெளியிட்டுள்ளது.
போலி முகநூல் கணக்குகள் மற்றும் இனக் குரோதக் கருத்துக்கள் சிலவற்றை அகற்ற வேண்டும் » 06

## முகநூல் குழு ஒன்றுதான் வன்முறைக்குக் காரணம்

### நீதி அமைச்சர் கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 13
முகநூலை தவறாகப் பயன்படுத்தும் ஒரு குழுவாலேயே கண்டியில் அழிவு ஏற்படுத்தப்பட்டது என்று கூறியுள்ளார் நீதி அமைச்சர் தலதா அத்துகோரள.
பலாங்கொடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறுதெரிவித்தார். » 06

## ராணுவத்துக்கு காணி வழங்க கடும் எதிர்ப்பு

முல்லைத்தீவு, மார்ச், 13
முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பிரதேசங்களில் மக்களின் காணிகளில் உள்ள இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேற வேண்டும் என்று மக்களும், மக்கள் பிரதிநிதிகளும் வலியுறுத்தினர்.
புதுக்குடியிருப்புபிரதேசஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று » 06

## சிறுமியை வன்புணர்ந்தோருக்கு கடூழியச் சிறைத் தண்டனைகள்

### யாழ். மேல் நீதிமன்றில் நேற்றுத் தீர்ப்புகள்

#### 15 ஆண்டுகள் கடூழியச் சிறை

யாழ்ப்பாணம், மார்ச் 13
16 வயதுக்குட்பட்ட சிறுமியைக் கடத்தி வன்புணர்வுக்குட்படுத்திய இளைஞனுக்கு 15 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்தது » 06

#### 10 ஆண்டுகள் கடூழியச் சிறை

யாழ்ப்பாணம், மார்ச் 13
யாழ்ப்பாணத்தில் 16 வயதுக்குட்பட்ட சிறுமி ஒருவரை வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் குற்றவாளியாகக் காணப்பட்டவ » 06

## முகநூல் தடை நீடித்தால் இளையோர் போராடுவர்

### எச்சரிக்கிறது மகிந்த அணி

கொழும்பு, மார்ச் 13
முகநூல் மீதான தடையை எதிர்த்து ஆயிரக்கணக்கான இளையோருடன் வீதியில் இறங்கிப் போராடத் தயாராக இருக்கின்றோம் என்று எச்சரித்துள்ளது மகிந்த அணி.
மகிந்த அணி ஏற்பாடு செய்த செய்தியாளர் சந்திப்பு கொழும்பில் நேற்று இடம் பெற்றது. அதில் கருத்துத் தெரிவித்த மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவே இவ்வாறு கூறினார்.
அவர் தெரிவித்ததாவது:
கண்டிப் பிரதேசத்தில் ஏற்பட்ட முறுகல் நிலை தற்போது முடிவுக்கு வந்துள்ளது. ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டுள்ளது. நாளை மறுதினத்துடன் (நாளை) அவசர காலச் சட்டமும் நீக்கப்பட உள்ளது. ஆனால் முகநூல் மீதான தடை இன்னமும் நீக்கப்படவில்லை. » 06



## வீழ்ந்து நொறுங்கியது வானூர்தி 50 பேர் தொடர்பில் தகவலில்லை

» 06

## முஸ்லிம் மீதான தாக்குதல் ஐ.நாவில் நெருக்கடி தரும்

### ஜயம்பதி விக்ரமரத்ன சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 13
நல்லிணக்க நகர்வுகளில் பன்னாட்டுச் சமூகம் அழுத்தங்களைப் பிரயோகிக்கும் நிலையில் முஸ்லிம்கள் மீதான அடக்குமுறைச் செயற்பாடுகள் மேலும் நெருக்கடியை ஏற்படுத்தும். ஜெனிவா அமர்வில் அவற்றுக்கான பிரதிபலிப்புகள் வெளிப்படும்.
இவ்வாறு ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது
ஆட்சி மாற்றத்தின் பின்னர் இலங்கை அர » 06



# மாடுகள் கடத்தப்படுவதை நிறுத்தக் கோரி ஆர்ப்பாட்டம்

**யாழ்ப்பாணம், 13**

**புங்குடுதீவில் இனந்தெரியாதோரால் மாடுகள் கடத்தப்படுவதை நிறுத்தக்கோரியும் அவர்களை இனங்கண்டு உரிய தண்டனை வழங்கக் கோரியும் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.**

ஊர்காவற்றுறை சந்தியில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இங்கிருந்து பேரணியாக நடந்து சென்று ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்துக்கு முன்பாகவும் போராட்டம் நடத்தப்பட்டது.

இதேவேளை நேற்று அதிகாலை மாடுகளைக் கடத்திச் சென்ற வாகனம் ஒன்றை பொலிஸாரின் உதவியுடன் பொது மக்கள் மடக்கிப் பிடித்து மாடுகளை மீட்டனர் எனவும் வாகன சாரதியைப் பொலிஸார் கைது செய்தனர் எனவும்தெரிவிக்கப்பட்டது. (ந.ரி4.37)

## தொடருந்தில் மோதி ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு,மார்ச் 13

வெயங்கொட மஹலேகொடையில் தொடருந்தில் மோதி ஒருவர் உயிரிழந்தார்.

இந்த விபத்து நேற்று இடம்பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பிலிலிருந்து கண்டி நோக்கிப் பயணித்த கடுகதி தொடருந்துடன் மோதிலேயே இந்த விபத்து ஏற்பட்டது. உயிரிழந்தவர் 55 வயதான நபரெனவும் யார் என அடையாளம் காணப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ந.ரி4)

## மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

திருகோணமலை, மார்ச் 13

மூதூர், கிளிவெட்டியில் நேற்று மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்தார். நிகழ்வொன்றில் ஒளிப்படம் எடுப்பதற்கு மின்இணைப்பை ஏற்படுத்தும்போது அவர் மின்சாரத் தாக்குதலுக்கு இலக்கானார் என்று தெரிவிக்கப்பட்டது. பாரதிபுரத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-ரி5)

## ஒரு சிலரின் செயலால் அனைவருக்கும் களங்கம்

*தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு*

கொழும்பு.மார்ச் 13

ஒரு சிலரின் செயல்களால் முழு உலகிலும் சிங்கள இனம் குற்றச்சாட்டை எதிர்நோக்கியுள்ளது. இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வெல்லம்பிட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற சமய நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது;

அண்மை நாட்களாக நாட்டில் நடந்த வன்முறைச்சம்பவங்களால் உலகில் ஏனைய நாடுகளுடன் இலங்கையை ஒப்பிட்டு பார்க்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. அது மாத்திரமல்ல தெற்காசியாவில் வாழும் ஏனைய பௌத்த மக்களுக்கு இது பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

வன்முறை அழிவு தொடர்பான செய்தி மிக விரைவில் உலகம் முழுவதும் பரவியுள்ளது.

கொழும்புக்கு அடுத்து அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வரும் நகரம் கண்டி. சுற்றுலாப் பயணிகளாக வரும் அரேபியர் அதிகளவில் கண்டிக்கு பயணம் மேற்கொள்கின்றனர். அண்மையில் கண்டியில் ஏற்பட்ட நிலைமைகள் சுற்றுலா தொழிற்றுறைக்கும் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. வன்முறை தொடர்பான குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கும் செயற்பாடுகளை துரிதப்படுத்த வேண்டும். சம்பவங்களை பரவச்செய்த நபர்கள் தொடர்பிலும் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். இந்த நெருக்கடியான நிலைமை கண்டியுடன் முடிவடைந்து விட்டது. கண்டியில் ஆரம்பித்த வன்முறை நாடு முழுவதும் பரவுமோ என்ற அச்சம் பலருக்கு இருந்தது. ஆனால் அப்படியான நிலைமை ஏற்படவில்லை. அதனைத் தடுத்து நிறுத்த எம்மால் முடிந்தது - என்றார். (ந,ரி4)



## கொட்டகலையில் மகளிர் தின நிகழ்வு

ஹற்றன்,மார்ச் 13

கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயத்தின் மண்டபத்தில் மகளிர் தின நிகழ்வு நேற்று நடைபெற்றது.

நிகழ்வு ஹற்றன் றோட்டரிக் கழகத்தின் ஏற்பாட்டில் வத்தளை றோட்டரிக் கழக உறுப்பினர் ஆர்.ராஜலிங்கம் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும், பதக்கங்களும் வழங்கப்பட்டதோடு விருந்தினர்களாகக் கலந்து கொண்டவர்களுக்கு நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டன. (ந.ரி4)

## போசணை விழிப்புணர்வு அட்டாளைச்சேனையில்

*பிரதேச செயலாளர் ரீ.ஜே.அதிசராஜ் தெரிவிப்பு*

மட்டக்களப்பு.மார்ச் 13

சுதேச மருத்துவ அமைச்சினால் தேசிய ரீதியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற "போசணை விழிப்புணர்வுக் கருத்தரங்கு" அட்டாளைச்சேனை தள ஆயுர்வேத மருத்துவமனையில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் ரீ.ஜே.அதிசராஜ் தெரிவித்தார்.

இது தொடர்பாக நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது;

"போசாக்கு மற்றும் தொற்றா நோய்" என்ற தொனிப்பொருளில் முதியவர்களுக்காக இன்று நடைபெறவுள்ள விழிப்புணர்வுக் கருத்தரங்கில் அட்டாளைச்சேனை பிரதேசத்திலுள்ள ஆண், பெண் இருபாலாரும் கலந்துகொண்டு பயன்பெறவுள்ளனர்.

இதில் அட்டாளைச்சேனை தள ஆயுர்வேத மருத்துவமனையின் மருத்துவ அத்தியட்சகர் மருத்துவர் கே.எம்.அஸ்லம், மருத்துவர்களான ஐ.எல்.அப்துல் ஹை, பர்வீன் முகைடீன், எஸ்.எம்.றிசாத், எல்.பஸ்மினா, எம்.எஸ்.சிஹானா, ஏ.ஆர்.எப்.ஆசிக்கா, எம்.ரீ.அமிறா உள்ளிட்ட மருத்துவர்களின் பங்குபற்றுதலுடன் சிறப்பு மருத்துவ சேவையும் இதில் இடம்பெறவுள்ளது - என்றார். (ந.ரி4.48)

## விபத்தில் முதியவர் உயிரிழப்பு

சிலாபம்.மார்ச்.13

சிலாபம் - கொழும்பு பிரதான வீதியின் கொஸ்வாடிய பகுதியில் நடந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

கொஸ்வாடிய பகுதியைச் சேர்ந்த 66 வயதுடைய ஒருவரே உயிரிழந்தார். மோட்டார் சைக்கிள் ஒன்று அதே திசையில் பயணித்த சைக்கிள் ஒன்றுடன் மோதியே விபத்து ஏற்பட்டது ஏ்னறு பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மாரவில பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ந-ரி2)



*கிண்ணியா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலயத்தில் வகுப்பறைக் கண்காட்சி 'அல்குர் ஆனும் அறிவியலும்' எனும் தொனிப் பொருளில் இன்று நடைபெற்றது. கண்காட்சியை கலைப் பிரிவு மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். (ந,ரி4,40)*

## துப்பாக்கி வைத்திருந்த இருவர் கைது

மாத்தறை.மார்ச்.13

சட்டவிரோதமாக துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களை வைத்திருந்த இருவர் வெலிகமை, மிதிகம பிரதேசத்தில் நேற்றுக் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. மிதிகம பகுதியைச் சேர்ந்த 28 மற்றும் 31 வயதுடையவர்களே கைது செய்யப்பட்டனர்.

ஒழுங்குபடுத்தப்பட்ட குற்றங்கள் ஒழிப்புப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலை அடுத்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து, ரி56 ரக துப்பாக்கி, கைக்குண்டு ஒன்று, மூன்று போலி தேசிய அடையாள அட்டைகள் மற்றும் 14 கிராம் 500 மில்லிகிராம் ஹெரோயின் என்பன கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மாத்தறை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ந-ரி2)

# யானைப் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்படுவதில் பாகுபாடு

## பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் சுட்டிக்காட்டு

வவுனியா வடக்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. அதிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

நாடுமுழுவதும் மக்கள் குடியிருப்புகளையும், வாழ்வாதார நிலங்களையும் சுற்றி யானைப் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்படுகின்றன. ஆனால் தமிழர் பிரதேசங்களில் குடியிருப்புகளுக்கு மட்டுமே பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்படுகின்றன. பொகஸ்வேவா கிராமம் உட்பட ஏனைய சிங்களக் கிராமங்களுக்கு கிராமம் முழுவதுமாக பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. வாழ்வாதார நிலங்களுக்கு அமைக்கப்படுவதில்லை. அதனால் மக்கள் வாழ்வாதாரங்களை இழந்து துன்பப்படுகின்றனர். ஏன் இந்தப் பாகுபாடு என்று கூட்டத்தில் கேள்வி எழுப்பினார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ப.சத்தியலிங்கம்.

இந்த ஆண்டு யானைப் பாதுகாப்பு வேலிக்காக நிதி ஒதுக்கப்படவில்லை. வேண்டுமானால் அதற்குரிய உபகரணங்களை பிரதேச செயலகம் ஊடாக வழங்க முடியும். உரிய அமைச்சுடன் தொடர்பு கொண்டு யானைப் பாதுகாப்பு வேலி அமைப்பது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்தப் பிரச்சினை தொடர்பில் முடிவெடுக்கப்பட்டது.

அதேவேளை, கனகராயன்குளத்தில் வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கட்டடத்தில் போரின் பின்னர் பொலிஸார் நிலை கொண்டிருந்தனர். பின்னர் பொலிஸ் நிலையம் அமைப்பதற்கு 4 ஏக்கர் நிலம் 2016ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. ஆனால் இன்றுவரை நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கட்டடத்தில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குடியிருக்கின்றார். அருகில் உள்ள அபிவிருத்திச் சங்கக் கட்டடம் பொலிஸாரின் விளையாட்டுத் திடலாகவுள்ளது. இவற்றை உடனடியாகப் பொலிஸார் விடுவிக்க வேண்டும் என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வவுனியா மாவட்டம் உட்பட நெடுங்கேணியில் காணி வழங்கல் பிரச்சினை இதுவரை தீர்க்கப்படாதுள்ளதால் பிரதேசத்தில் எவருக்கேனும் காணி வழங்குவதானால் பிரதேச காணி பயன்பாட்டுக் குழுவின் தீர்மானத்தின் பின்னர் மாகாண காணி அமைச்சின் அனுமதி பெற்று வழங்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவில் மக்கள் காணிகளில் வனவளத் திணைக்களம் எல்லையிட்டுள்ளது என்று கூறப்படுவதால் வனவளத் திணைக்களத்தினர், பிரதேச செயலர், நில அளவைத் திணைக்களத்தினர் ஒரு மாதத்துக்குள் அதை ஆராய்ந்து மக்களின் காணிகள் என்று உறுதிப்படுத்தப்படுபவற்றை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. (ற-105)

## சண்டிலிப்பாயில் வீதிகளை சீரமைக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 13

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட இடங்களில் ஒரே வீதிகளே மீளச் சீரமைக்கப்படுகின்றன. ஒரு தடவை கூடச் சீரமைக்காத வீதிகள் உள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டது.

சண்டிலிப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இணைத்தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தலைமையில் நேற்று நடைபெற்றது. அதிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

1998ஆம் ஆண்டுக்குப் பின்னர் சீரமைக்கப்படாத பல வீதிகள் உள்ளன. ஆனால் ஏற்கனவே சீரமைக்கப்பட்ட வீதிகளே மீளச் சீரமைக்கப்படுகின்றன. இந்த வீதிகளைச் சீரமைத்துத் தர வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது. அதிகமானவர்களால் வீதிச் சீரமைப்புப் பற்றிச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அந்த வீதிகள் எந்தத் திணைக்களத்துக்குச் சொந்தமானவை என்று ஆராய்ந்து தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று இணைத்தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் தெரிவித்தார். (ற-8)

## சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 197 பேருக்கு வீட்டுத் திட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 13

தேசிய வீடமைப்பு அதிகார சபையால் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் ஊடாக வழங்கப்படவுள்ள வீட்டுத் திட்டத்துக்கான முன்மொழிவு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

தேசிய வீடமைப்பு அதிகார சபையால் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் ஊடாக 197 பயனாளிகளுக்கான மாதிரி வீட்டுத் திட்டம் முன்மொழியப்பட்டது. இந்தத் திட்டத்துக்கு 98.5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவில் மாதிரிக் கிராமம் ஒன்றை அமைப்பதற்கான திட்டம் உருவாக்கப்பட்டு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நேற்று அது சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கு எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கபடாததால் இந்தத் திட்டத்துக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

ஆனைக்கோட்டை, உயரப்புலம், மானிப்பாய் போன்ற பிரதேசங்களை உள்ளடக்கி இந்த மாதிரிக் கிராம வீட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. அதில் போரால் பாதிக்கப்பட்டவர்கள், பெண் தலைமைத்துவ குடும்பத்தினர் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது என பிரதேச செயலர் தெரிவித்தார். (ற-8)

## வவுனியாவில் இந்த ஆண்டு 50 மாதிரி வீட்டுத்திட்டங்கள்

வவுனியா, மார்ச்.13

வவுனியா, மாவட்ட வீடமைப்பு அதிகார சபையால் 50 மாதிரிக் கிராமங்கள் இந்த ஆண்டு உருவாக்கப்பட உள்ளன என்று வீடமைப்பு அதிகார சபையின் வவுனியா மாவட்டப் பணிப்பாளர் தெரிவித்தார்.

வவுனியா பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

ஆரம்பத்தில் 40 மாதிரிக் கிராமங்களே அமைப்பதற்கான அனுமதி கிடைத்தது. வவுனியாவுக்கு வந்த தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைவரிடம், மக்கள் பிரதிநிதிகள் விடுத்த வேண்டுகோளுக்கமைய மேலும் 10 மாதிரிக் கிராமங்கள் அதிகரிக்கப்பட்டன. மொத்தமாக 50 கிராமங்கள் உருவாக்கப்பட உள்ளன.

பிரதேச செயலாளர் காணியை ஒதுக்கீடு செய்து அதற்கான பத்திரங்கள் உள்ள பயனாளிகள் அவர்களுக்கான திட்டத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் - என்றார். (றரி2.ரி)

## 4,500 வீடுகள் வவுனியாவில் தேவை

வவுனியா, மார்ச் 13

வவுனியா பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 4 ஆயிரத்து 500 வீடுகளும், மலசலகூடங்களும் தேவையாகவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று பிரதேச செயலக மண்டபத்தில் இணைத்தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தலைமையில் நேற்று நடைபெற்றது. அதிலேயே உதவித் திட்டப் பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதுவரையும் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டங்களின் முன்னேற்றம், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்களால் அபிவிருத்திக்காக வழங்கப்பட்ட நிதி விவரங்கள் என்பவற்றையும் அவர் சமர்ப்பித்தார். (ற)

## மணல் அகழ்வைத் தடுக்க பொலிஸ் காவலரண்கள்

### அரியாலையில் அமைப்பது என தீர்மானம்

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ்ப்பாணம், அரியாலையில் நடக்கும் சட்டவிரோத மண் கடத்தலைத் தடுக்க அங்கு ஒன்றுக்கு மேற்பட்ட பொலிஸ் காவலரண்கள் அமைக்கப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

நல்லூர் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிரதேச செயலர் திருமதி அன்ரன் யோகநாயகம் தலைமையில் நேற்று நடைபெற்றது. அதிலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

அரியாலையில் நடக்கும் மண் அகழ்வைக் கட்டுப்படுத்த பொலிஸார் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்தப் பிரதேசங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட பொலிஸ் காவலரண்கள் அமைக்கப்பட வேண்டும் என்று தீர்மானித்துள்ளோம். பிரதேச செயலகத்தின் முன்மொழிவாக இது கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றது. மாற்றுக் கருத்து இருந்தால் தெரிவியுங்கள் என்று கூட்டத்தில் கோரப்பட்டது.

"எமது பிரதேசங்களில் மண் கடத்தல் தாராளமாக நடக்கின்றது. அந்த பகுதிகளில் பொலிஸார் ரோந்தில் ஈடுபடுகின்றனர். அப்படியும் மண் கடத்தப்படுகின்றது என்றால் கடத்தல்காரகளிடம் பொலிஸார் இலஞ்சம் வாங்குகின்றார்களோ என்ற சந்தேகம் எழுகின்றது. பொலிஸார் இந்த விடயத்தில் அக்கறையுடன் செயற்பட வேண்டும். பொலிஸ் காவலரண் அமைப்பதில் எந்த ஆட்சேபனையும் இல்லை. ஆனால் கடமைக்கு வருவோர் நேர்மையுடன் செயற்பட்டு மணல் கடத்தலைத் தடுக்க வேண்டும். எமது பிரதேசத்தில் ஊடுருவியுள்ள போதைப் பொருள் பாவனையையும் தடுக்க வேண்டும்." அந்தப் பிரதேசத்தைப் பிரதிநிதுவப்படுத்துவோர் கூட்டத்தில் குறிப்பிட்டனர்.

பொலிஸ் காவலரண்கள் அமைக்க ஆட்சேபனை தெரிவிக்கப்படாமையால் அங்கு காவலரண்கள் அமைப்பது எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ற-8)

## சாவற்கட்டில் விரைவில் பதனிடும் தொழிற்சாலை

யாழ்ப்பாணம், மார்ச் 13

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட சாவற்கட்டில் கருவாடு பதனிடல் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்படவுள்ளது. அதற்கான திட்ட முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று பிரதேச செயலர் தெரிவித்தார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இணைத்தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தலைமையில் நேற்று நடைபெற்றது. அதிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

எமது பிரதேசத்தில் கைத்தொழிலை ஊக்குவிக்கும் வகையில் பல திட்டங்களைச் செயற்படுத்தியுள்ளோம். சாவற்கட்டில் கருவாடு பதனிடும் தொழிற்சாலை ஒன்றை அமைக்க 5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. கட்டடங்கள் அமைக்கப்பட்டு, பதனிடும் உபகரணங்களை நிறுவ வேண்டும். இந்தத் திட்டத்தை அங்கீகரிக்க வேண்டும் என்று பிரதேச செயலர் தெரிவித்தார்.

கருவாடு பதனிடும் தொழிற்சாலை அமைக்கும் திட்டத்துக்கு கூட்டத்தில் ஏகமனதாக அங்கீகாரம் வழங்கப்பட்டது. (ற-8)

### மணல் பிரச்சினை தீர்க்கப்படாததால்

## கள்ள மணலைப் பெற்றே கட்டுமானம் முடித்தேன்

### வடக்கு எதிர்க்கட்சித் தலைவர் தவராசா கூட்டத்தில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள மணல் பிரச்சினையால் நான் கூட மணல் கடத்தல்காரர்களிடம் மண் பெற்று வீட்டுக் கட்டுமானப் பணியைச் செய்தேன் என்று தெரிவித்தார் வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா. நல்லூர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. அதில் அரியாலையில் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் பேசப்பட்டது. அப்போதே சி.தவராசா இவ்வாறு கூறினார்.

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள மண் பிரச்சினைகளை தீர்க்க அரச தலைவர் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அபிவிருத்திப் பணிகளுக்கு மண் முக்கியம், அதிகாரிகள் இணைந்து தீர்க்கமான முடிவை எடுங்கள் என்று கூறியிருந்தார்.

அரச தலைவர் கூறி நீண்ட காலமாகியும் இன்றுவரை மண் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. அதிகாரிகளின் அசமந்தப் போக்கையே காட்டுகின்றது. ஒரு பொருளுக்கு தட்டுப்பாடு அல்லது கிராக்கி ஏற்படும் போது அதற்கான விலையும் அதிகரிக்கின்றது. மக்களுக்குப் பொருத்தமான வகையில் மணல் வழங்கினால் விலை குறைவதுடன் மக்களின் தேவைகளும் பூர்த்தியாகும். மண் கடத்தலும் குறைய வாய்ப்புள்ளது. இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்க்கமான முடிவை எடுக்காததால் எனது வீட்டின் கட்டுமானப் பணிகளுக்குக் கூட மணல் கடத்தல்காரர்களி டம் அதிக விலை கொடுத்து மண்ணைப் பெறவேண்டி யுள்ளது. இங்கு பொலிஸார் இருந்தாலும் இதை நான் சொல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. இந்தப் பிரச்சினைக்கு உரிய தீர்வைப் பெற வழிவகை செய்ய வேண்டும். என்று அவர் குறிப்பிட்டார். (ற-8)

# மகளிர் தின நிகழ்வு

சாவகச்சேரி, மார்ச் 13
தென்மராட்சிப் பிரதேச சமுர்த்திச் சங்கங்களின் மகளிர் தின நிகழ்வு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடை பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலர் தேவந்தினி பாபு தலைமையில் நடை பெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பின் மாவட்டப் பணிப்பாளர் ரஜனி சந்திரசேகரன் கலந்து கொள்ளவுள்ளார். நிகழ்வில் பிரதேசத்தின் நான்கு சமுர்த்தி வலயங்களி லிருந்து தெரிவு செய்யப்பட்ட நான்கு பெண்கள் சமுர்த்தி மேம்பாட்டுக்கு வழங்கிய சேவைகளுக்காக மதிப்ப ளிக்கப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

# முல்லைத்தீவில் வடிசாலை அமைக்கப்பட வேண்டும்

## சிவமோகன் எம்.பி. தெரிவித்தார்

முல்லைத்தீவு, மார்ச் 13
முல்லைத்தீவு மாவட்டத்தில் வடிசாலை ஒன்று அமைக்கப்படவேண்டிய தேவை கட்டாயமாகக் காணப்படுகின்றது. புதுக்குடியிருப்பில் விடுதலைப்புலிகளின் காலத்தில் வடிசாலை ஒன்று சிறப்பாக இயங்கிவந்தது. அது மதுபோதைக்காக பாவிக்கப்படவில்லை. அப்போது அதில் இருந்து வடித்தெடுக்கப்பட்ட அற்கோலில் இருந்து தான் மருத்துவமனைகளில் சத்திரசிகிச்சைகளுக்கு தேவையான ஸ்பிறிற் எடுத்தோம் அதுமட்டுமல்ல வினாகிரி எடுக்கப்பட்டது. வெல்லம் எடுக்கப்பட்டது இவற்றை நல்லவிடயங்களுக்காக நாங்கள் பாவிக்கும்போது அவை நல்லவிடயமாகவே இருக்கும். கெட்டவிடயங்களுக்கு பாவிக்கப்படும் போது தான் அவை கெட்டவையாக காட்டப்படுகின்றன.



வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் இவ்வாறு தெரிவித்தார்.

ஐயனார் கோவிலடி ஒட்டுசுட்டான் வீதி 10ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு பகுதியில் அமையப்பெற்ற முல்லைத்தீவு மாவட்ட பனைதென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கங்களின் சமாச கட்டடத் திறப்பு நிகழ்வு தலைவர் பிரான்சிஸ் விஜயச்சந்திரன் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் கலந்துகொண்டு கட்டடத்தையும் திறந்து வைத்து உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று வன்னியில் தினசரி உற்பத்தி செய்யப்படும் பெருந்தொகையான கள் நிலத்தில் ஊற்றப்படுகின்றது. இதன் மூலம் இதையே வாழ்வாதாரமாக நம்பி வாழும் குடும்பங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. கடந்த 2017ஆம் ஆண்டு கள் அடைப்பு நிலையத்துக்கான ஆண்டு வரி முன்னர் இரண்டு இலட்சமாக இருந்தது. அது பத்து இலட்சமாக மாற்றப்பட்டுள்ளது.

கித்துள் மரத்தில் இருந்து இறக்கப்படும் கள் அதிகப்படியாக வெல்ல உற்பத்திக்கு பாவிக்கப்படுவதாகவும் பனையில் இருந்து உற்பத்தி செய்யப்படும் கள்ளில் இருந்து அதிகப்படியாக மது போதைக்கு பாவிக்கப்படுவதாக ஆய்வின் போது அரசு தெரிவித்துள்ளது. இதனால் பனை, தென்னை கள்ளுக்கான வரியை நீக்கமுடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

'தற்போது போத்தலில் அடைக்கப்படும் கள் என்பது வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஸ்பிறிட் இதற்குள் சில வாசனைகள் சேர்த்து அதில் பல கலவைகளை கலந்து கள் என்ற போர்வையில் பொய்யாக விற்கின்றார்கள். இப்படிப்பட்ட இடங்களுக்கு அரசு விதித்திருக்கும் வரிகள் பொருந்தும் ஆனால் சாதாரண மக்கள் இயற்கைகள் உற்பத்திக்கு அரசு விதித்திருக்கும் இந்த வரி தடையாக இருக்கின்றது. இந்த வரி அதிகரிப்பு வன்னிப் பிரதேசத்தில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்று நாடாளுமன்றத்தில் எடுத்துக் கூறியுள்ளேன்.

தேசிய கட்சிகள் என்றும் தமிழர்களின் உரிமைகளுக்காக போராடப்போவதில்லை. கூட்டமைப்பு ஒன்றே தமிழர்களின் உரிமையை எங்கும் கொண்டு செல்லும் என்பதை அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும். தமிழ்தேசியக்கூட்டமைப்பு ஆசனத்துக்காக வரவில்லை - என்றார்.

நிகழ்வில் விருந்தினர்கள், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் உள்ளிட்டவர்களுடன் பனை தென்னைவள அபிவிருத்தி சங்கங்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர். (எ-ரி3)

### கொழும்பு சுகாதார அமைச்சில்

# தாதிய கல்விப் பணிப்பாளராக ரஜீலாதேவி பொறுப்பேற்கிறார்

யாழ்ப்பாணம், மார்ச் 13
யாழ்ப்பாணம் தாதியர் கல்லூரி அதிபராகக் கடமையாற்றிவந்த செல்வி. ரஜீலாதேவி வல்லிபுரநாதன் தாதியக் கல்விப் பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்றுள்ளார். அவர் கொழும்பு சுகாதார அமைச்சில் நாளை கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார்.

ரஜீலாதேவி வல்லிபுரநாதன், தாதிய உத்தியோகத்தராக1984 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இணைந்துகொண்டார்.

1984 தொடக்கம் 1991 ஆண்டுவரை வவுனியா ஆதார வைத்தியசாலையிலும், 1992 வரை தாதிய உயர் கற்கைக் கல்லூரியில் இணைந்து கொண்டார். 1992 தொடக்கம் 1993 வரை கொழும்பு தாதியக் கல்லூரி தாதிய போதனாசிரியராகவும் 1993 தொடக்கம் 2002 ஆம் ஆண்டுவரை யாழ்ப்பாணம் தாதியக் கல்லூரியில் தாதிய போதனாசிரியராகவும் பணிபுரிந்தார். 2004 யாழ்ப்பாணம் தாதியக் கல்லூரி பதில் அதிபராகவும், 2008 வரை வவுனியா தாதியக் கல்லூரியின் பதில் அதிபராகவும் 2010 வரை யாழ்ப்பாணம் தாதியக் கல்லூரியின் மூத்த போதனாசிரியராகவும் 2010 டிசெம்பரிலிருந்து தற்போதுவரை யாழ்ப்பாணத்திலுள்ள தாதியக் கல்லூரியின் அதிபராகவும் கடமையாற்றிவந்தார். (4)

# பொம்மை வெளியில் குழப்பம்

யாழ்ப்பாணம், மார்ச்,13
யாழ்ப்பாணம் பொம்மை வெளிப் பகுதியில் நேற்றுச் சிறுகுழப்பம் ஏற்பட்டது.

பொம்மை வெளிப் பகுதியில் உள்ள பள்ளிவாசல் ஒன்றின் அருகே முச்சக்கர வண்டியை நிறுவத்துவதாலேயே அந்தக் குழப்பம் ஏற்பட்டது. பொலிஸார், மற்றும் கிராமத்தின் மூத்தவர்களால் குழப்பம் சுமுகமாகத் தீர்க்கப்பட்டது.

இரு தரப்பினருக்கு இடையில் நேற்றுக் காலை ஏற்பட்ட அந்தக் குழப்ப நிலை இரவு 8.30 மணியளவில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. பிரச்சினை பேசித் தீர்க்கப்பட வேண்டுமே தவிர அதை வளர்த்து பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடாது என்று பொலிஸார் அறிவுரைகளை வழங்கியிருந்தனர். (21)

# நேற்றைய சீரற்ற காலநிலையால் மீனின் விலை அதிகரித்தது

யாழ்ப்பாணம்,மார்ச்.13
சீரற்ற காலநிலை மற்றும் கடல் கொந்தளிப்பால் அனேகமான மீனவர்கள் நேற்று ஆழ்கடல் மீன்பிடியை தவிர்த்திருந்தனர். காற்றுடன் கூடிய மழை மற்றும் கடல் கொந்தளிப்பால் யாழ்ப்பாணக் குடாநாடு மற்றும் தீவுப்பகுதி, வடமராட்சி போன்ற பிரதேசங்களில் மீனவர்கள் நேற்று ஆழ்கடல் மீன்பிடிப்பை தவிர்த்தனர். அதிகமானோர் கரைவலை மூலமே மீன்பிடியில் ஈடுபட்டனர்.

இதன் காரணத்தால் நேற்று கடலுணவின் வருகை குறைந்தும், விலை அதிகரித்தும் காணப்பட்டது.

பாசையூர், குருநகர், கொட்டடி, நாவாந்துறை, கல்வியங்காடு மீன் சந்தைகளில் கடலுணவுகளில் விலை அதிகரித்துக் காணப்பட்டன.

அத்துடன் வடமராட்சிப் பிரதேசத்தில் இருந்து யாழ்ப்பாண நகருக்கு எடுத்து வரப்பட்ட கடலுணவுகளின் விலையும் அதிகரித்துக் காணப்பட்டது. (எ-17)

# சோலை வரி மதிப்பீடு

அளவெட்டி ,மார்ச்.13
வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் அளவெட்டி மல்லாகம் கிராமங்க ளுக்கான 2018ஆம் ஆண்டுக்கான சோலைவரி மதிப்பீடு மல்லாகம் உப அலுவலகத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (63)

# சைவசமய பரிசில் நாள்

யாழ்ப்பாணம், மார்ச் 13
தென்மராட்சி கல்வி வலயத்தின் சைவசமய பரிசில் நாள் நிகழ்வு யாழ்ப்பாணம் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

சு.சுந்தரசிவம் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் கலந்துகொள்ளவுள்ளார் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (எ)

# யாழ்.பாரவூர்தி சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணப் பாரவூர்தி சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு நேற்றையதினம் கோண்டாவில் பகுதியில் உள்ள சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் புதிய தலைவராக எஸ். ஜெயக்குமார் தெரிவு செய்யப்பட்டார். சங்கத்தின் உப தலைவராக சி.அழகானந்தமும் செயலாளராக க.செல்வச்சந்திரன், பொருளாளராக ம.ஜெயகாந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

சங்கத்தின்நிர்வாக உறுப்பினர்க ளாக ரவிச்சந்திரன், இளங்கநிலன், தவராசா, இராசேந்திரன், ஆனந்தரூபன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (8)

### யாழ்ப்பாண மாநகர சபைக்கான

# விகிதாசாரப் பட்டியல் உறுப்பினர்களின் பெயர் விவரங்கள் கையளிக்கப்பட்டன

யாழ்ப்பாணம், மார்ச் 13
யாழ்ப்பாணம் மாநகர சபைக்கான விகிதாசாரப் பட்டியல் உறுப்பினர்களின் பெயர் விவரங்களை சிறி லங்கா சுதந்திரக் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகள் அனைத்தும் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கையளித்துள்ளன.

பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலின்போது யாழ்ப்பாணம் மாநகரசபைக்கான 27 வட்டாரங்களுக்கான உறுப்பினர்கள் நேரடியாகத் தேர்வு செய்யப்பட்டிருந்தனர். விகிதாசார உறுப்பினர்களின் பெயர்களைத் தற்போது கட்சிகள் பரிந்துரைத்துள்ளன. இதில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் ந.லோகதயாளன் மற்றும் பெண் உறுப்பினரான பி.நளினா ஆகியோரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று ஈ.பி.டி.பி கட்சியின் சார்பில் ப.யோகேஸ்வரி , ச.அனுசியா , நா.ஜெயந்தினி , மு.றெமீடியஸ் , கு.செல்வவடிவேல் , கா.வேலும்மயிலும் (ஜெகன்) , கி.டேனியன் , து.இளங்கோ (றீகன்) ஆகியோரும் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் சி.குலேந்திர்ராசா , வி.விஜயதர்சினி ஆகியோரின் பெயர்களும் சிபார்சு செய்யப்பட்டுள்ளன. இதேபோன்று அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சார்பில் வி.மணிவண்ணன் , த.அஜந்தா , சி.சுகந்தினி , தி.சுபாசினி ஆகியோரின் பெயர்களும் சிபார்சு செய்யப்பட்டுள்ளன.

உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றிபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் நாளைமறுதினம் சத்தியப்பிரமாணம் செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-105)

# மதிப்பளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 12
யாழ்ப்பாண மாவட்ட பாரவூர்திகள் உரிமையாளர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் நீண்டகால சேவையாற்றிய பணியாளர்கள் மற்றும் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பிள்ளைகளை மதிப்பளிக்கும் நிகழ்வு கோண்டாவிலில் அமைந்துள்ள சங்கத்தின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் சங்கத் தலைவர் எஸ்.ஜெயக்குமார் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் பொ.வாகீசன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

சங்கத்தில் இணைந்து 15 ஆண்டுகள் சேவையாற்றிய பணியாளர்கள் மதிப்பளிக்கப்பட்டதுடன் கடந்த வருடம் புலமைப் பரிசில் பரீட்சையில்சித்தியடைந்த பாரவூர்தி உரிமையாளர்களின் பிள்ளைகளும் பரிசில்கள் வழங்கி வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர்.

நிகழ்வில் பாரவூர்தி சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்கள், பாரவூர்தி உரிமையாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ-8)



## புகையிலை அறுவடை ஆரம்பம்

வடமராட்சி, மார்ச் 13

வடமராட்சிப் பிரதேசத்தில் புகையிலை அறுவடை ஆரம்பமாகியுள்ளது எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடுப்பகுதிவரை புகையிலை அறுவடை நீடிக்கும்.

குடாநாட்டில் வடமராட்சி பிரதேசத்தில் அதிகளவு பரப்பளவில் புகையிலைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தமுறை புகையிலை விளைச்சல் திருப்திகரமாக இருந்ததாக புகையிலை செய்கையாளர்கள் தெரிவித்தனர்

பிரதேசத்தில் அறுவடை செய்யப்படும் புகையிலை செடி ஒன்று 180 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இதேவேளை வலிகாமம் பிரதேசத்தில் அறுவடை செய்யப்படும் புகையிலையையும் வடமராட்சி பிரதேச புகையிலை வர்த்தகர்கள் கொள்வனவு செய்துவருகின்றனர். வலிகாமம் பிரதேசத்தில் புகையிலை செடி ஒன்று 110 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

அறுவடை செய்யப்பட்ட புகையிலையை கொள்வனவு செய்த புகையிலை வர்த்தகர்களும் உற்பத்தியாளர்களான சில விவசாயிகளும் அவற்றை உலர்த்தி புகையிட்டு பதனிடும் பொருட்டு சுவர்களில் வெயிலில் காய போட்டுவருகின்றனர்.

புகையிலை பயிர் வடமராட்சியின் பிரதேச விவசாயிகளின் 'பணப் பயிர்' என்பது குறிப்பி டத்தக்கது. (எ-173)

# கிராம சக்தித் திட்டத்தின் கீழ் செயற்பாட்டு குழுக்கள் தெரிவு

தென்மராட்சி மார்ச் 13

**தென்மராட்சிப் பிரதேசத்தில் கிராம சக்தி திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 3 கிராம அலுவலர் பிரிவுகளில் செயற்பாட்டுக் குழுக்களைத் தெரிவு செய்யும் பணிகள் பிரதேச செயலக திட்டமிடல் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.**



இந்தத் திட்டத்தில் மிக வறுமை நிலைக் கிராமங்களாக மந்துவில் கிழக்கு, வரணி வடக்கு கிராம அலுவலர் பிரிவுகளிலும் உற்பத்திக் கிராமமாகத் தெரிவு செய்யப்பட்ட கைதடி தெற்கு கிராம அலுவலர் பிரிவிலும் குழுக்கள் அமைக்கும் பணிகள் கடந்த வாரம் இடம்பெற்றன.

மந்துவில் கிழக்குப் பிரிவுக்கான குழுக்கள் தெரிவு மந்துவில் கிழக்கு பாலர் பராமரிப்பு நிலையத்திலும் வரணி வடக்குப் பிரிவுக்கான குழுக்கள் தெரிவு வரணி வடக்கு பொது நோக்கு மண்டபத்திலும் கைதடி தெற்குப் பிரிவுக்கான குழுக்கள் தெரிவு கைதடி மின்னொளி சனசமூக நிலையத்திலும் நடைபெற்றன. குழுக்கள் தெரிவுகளில் பிரதேச செயலர் தேவந்தினி பாபு, உதவித் திட்டமிடல் பணிப்பாளர் செ.சுபச்செல்வன், பிரிவுக் கிராம அலுவலர், சமுர்த்தி அலுவலர் பொருளாதார அபிவிருத்தி அலுவலர் மற்றும் பிரதேச திட்டமிடல் அலகினர் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர். பிரிவில் வதியும் மக்களில் பெண்களைத் தலைவர் பொருளாளராகக் கொண்ட தலா 7 பேர் அடங்கிய குழுக்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களில் இருவர் வீதம் தெரிவு செய்யப்பட்டு கொத்தணிக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

குழுக்களின் அங்கத்தவர்கள் கட்டாய சேமிப்புக்கு உட்படுத்தப்படுவர். அவர்கள் நாளொன்றுக்கு 5ரூபா செலுத்த வேண்டும். கட்டாய சேமிப்பில் சேரும் நிதியில் அங்கத்தவர்களுக்கு கடன் வழங்கப்பட்வுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## யாழ்ப்பாண தமிழ்ச்சங்கத்துக்கு புதிய நிர்வாகம்

யாழ்ப்பாணம் மார்ச் 13

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் பொதுக்கூட்டம் நல்லை ஆதீனக் கலாமண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. கூட்டத்தில் சங்கத்துக்கான புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டது.

இதன்படி பெருந்தலைவராக பேராசிரியர் அ.சண்முகதாஸ், தலைவராக ச.லலீசன், செயலாளராக இ.சர்வேஸ்வரா, நிதிச்செயலாளராக பேராசிரியர் தி.வேல்நம்பி, உபதலைவர்களாக பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ், கலாநிதி ஆறு திரு முருகன், அருட்பணி ஜெறோ செல்வநாயகம், இரா. செல்வவடிவேல், உபசெயலாளர்களாக ந.செல்வ அம்பிகை, கு.றஜீபன் இவர்களுடன் கலாநிதி ஜெ.இராசநாயகம், கலாநிதி சுகந்தி ஸ்ரீமுரளிதரன், சாந்தினி அருளானந்தம், கலாநிதி செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம், சி.ராஜ்குமார் த.கருணாகரன். பொ.அரவிந்தன், வேல். நந்தகுமார், ந.கணேசமூர்த்தி, பா.பால கணேசன் அ.பௌநந்தி, ந. ஐங்கரன், சி.சிவஸ்கந்த சிறி, லோ.துஷிகரன் கு.பாலஷண்முகன், நா.வை. மகேந்திரராசா (குமரிவேந்தன்) ரதி சந்திரநாதன், கௌரி முகுந்தன், தனுசியா யசிதரன் செல்வதி அம்மா விஜய தர்சினி ஆகியோரை உள்ளடக்கிய 21பேர் கொண்ட செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## இரு வீடுகளின் மேல் கல் வீச்சு

சாவகச்சேரி கற்குளிப் பகுதியில் இரு வீடுகளுக்கு நள்ளிரவு வேளையில் இனந்தெரியாதோரால் கல் வீசித் தாக்குதல் நடந்தது.

இந்தச் சம்பவம் நேற்று நள்ளிரவு 1 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இப் பகுதியில் உள்ள கிராம அலுவலரின் வீட்டுக்கு அருகில் உள்ள வீட்டுக் கும் வெளிக் கதவுகளுக்கும் கற்களை வீசித் தாக்கிவிட்டு தப்பியோடியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக பொலிஸாருக்கு முறை யிட்டதாகவும் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து பார்த்துவிட்டுச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## கதிரைவேற்பிள்ளையின் குரு பூசை தினத்தை முன்னிட்டு கட்டுரை, மனனப் போட்டிகள்

வடமராட்சி மார்ச் 13

சைவத்தமிழ் அறிஞர் சதாவதானி கதிரைவேற்பிள்ளையின் 111ஆவது குரு பூசை தினத்தை முன்னிட்டு பருத்தித்துறை தம்பசிட்டி மேலைப் புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையம் பாடசாலை மாணவர்களிடையே மனனம், பேச்சு, பண்ணிசை, பொதுஅறிவு போட்டிகளை நடத்தவுள்ளது.

பாலர் கீழ்பிரிவு, பாலர் மேற்பிரிவு உட்பட தரம் 1 தொடக்கம் தரம் 11வரை பயிலும் மாணவர்களிடையே 5 பிரிவாக போட்டிகள் இடம்பெறும்.

இதுதவிர கட்டுரைப்போட்டி வடக்கு மாகாண ரீதியில் நடத்தப்படும் அதில் அனைவரும் பங்குபற்றலாம்

போட்டியாளர்கள் பாடசாலை மூலமாகவோ தனிப்பட்ட முறையிலோ விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்கள் எதிர்வரும் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

போட்டிகள் யாவும் அடுத்தமாதம் 7ஆம் திகதி சனிக்கிழமையும் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் இடம்பெறும். வெற்றி பெறுபவர்களுக்கான பரிசளிப்பும் மதிப்பளிப்பும் அடுத்த மாதம் 21ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் சதாவதானி 111ஆவது ஆண்டு நிறைவு விழாவில் வைத்து வழங்கப்படும். (எ-173)

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டங்கள்

வடமராட்சி மார்ச் 13

வடமராட்சி தென்மேற்கு கரவெட்டி பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கும் வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் இன்று பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளன.


கூட்டங்கள் சிறுவர் விவகார பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தமிழ்தேசியக்கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம் ஏ. சுமந்திரன் சுதந்திரக்கட்சியின் யாழ்ப்பாண மாவட்டத்துக்கான நியமன நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இரமநாதன் ஆகியோரின் இணைத்தலைமைகளில் நடைபெறவுள்ளன. (173)

## 5 பிள்ளைகளின் தந்தை நெஞ்சுவலியால் சாவு

தேங்காய் பிடுங்க மரத்தில் ஏறிய ஐந்து பிள்ளைகளின் தந்தை நெஞ்சுவலியால் சாவடைந்தார் இந்தச் சம்பவம் நேற்று முன்தினம்காலைவரணி இயற்றாலையில் இடம் பெற்றுள்ளது. வளவுக்குள் நின்ற தென்னைமரத்தில் ஏறி தேங்காய் பிடுங்கிய போது நெஞ்சுவலி ஏற்பட்டுள்ளதாக தெரிவித்து ஓலைகளைக் கட்டிப் பிடித்துள்ளார். இதனையடுத்து அயலவர்கள் ஓடிவந்து மரத்தில் ஏறி கீழே இறக்கி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். எனினும் அங்கு அவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. இதே இடத்தைச் சேர்ந்த அப்பையா சிவகுமார் (வயது 42) என்பவரே சாவடைந்தவராவார். சாவு தொடர்பாக கொடி காமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-9)



சாவகச்சேரி சோலை அம்மன் கோவில் பகுதியில் விடுதலைப் புலிகளின் சீருடை, மற்றும் வெடிபொருள்களின் பாகங்கள் சில நேற்று மீட்கப்பட்டன. அந்தப் பகுதியில் குடிதண்ணீருக்கான குழாய்கள் பொருத்தும் பணிகள் இடம்பெறும் போதே குறித்த பொருள்கள் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (21.9)



நேற்றுக்காலை மழையுடன் வீசிய கடும் காற்றினால் சாவகச்சேரி நகரசபை பொது விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த நான்கு தகரப் பந்தல்கள் சரிந்து வீழ்ந்தன. (எ-9)

## தென்மராட்சியில் தெரிவுசெய்யப்பட்ட மீனவர்களுக்கான
# மீன்பிடி வலைகள் பிரதேச செயலகத்துக்கு வந்துள்ளன

சாவகச்சேரி, மார்ச் 13

தென்மராட்சி பிரதேசத்தில் மீன்பிடி வலைகள் பெறுவதற்காகத் தெரிவு செய்யப்பட்டவர்களில் ஒரு தொகுதியினருக்கான மீன்பிடி வலைகள் கடந்த 9ஆம் திகதி பிரதேச செயலகத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. அவை இந்த வாரம் பயனாளிகளுக்கு விநியோகிக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த வருடம் மீள்குடியமர்வு மற்றும் புனர்வாழ்வு அமைச்சால் வழங்கப்படும் மீன்பிடி வலைகள் வழங்க 75 பேர் தெரிவு செய்யப்பட்டனர். அவர்களுக்கான வலைகளே தற்போது வந்துள்ளன. இதேவேளை கடந்த வருடம் மீன்பிடிப் படகின் வெளியிணைப்பு இயந்திரத்திற்கு விண்ணப்பித்து தெரிவு செய்யப்பட்ட 12 பேரில் ஒரு தொகுதியினருக்கு அண்மையில் வெளியிணைப்பு இயந்திரங்கள் யாழ்ப்பாண மாவட்டச் செயலரால் பிரதேச செயலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (9)

## ராணுவத்துக்கு...

நடைபெற்றது. அதில் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பகுதிகளில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மக்களுடைய காணிகளை மீட்பது தொடர்பாகவும், படையினரை அங்கிருந்து அகற்றுவது தொடர்பாகவுமே அதிகம் விவாதிக்கப்பட்டது.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் படையினர் நிலைகொண்டுள்ள அவர்களுடைய கட்டுப்பாட்டில் உள்ள காணிகளின் அளவுகளை அவர்கள் பிரதேச செயலரிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்க வேண்டும் என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் புவனேஸ்வரன் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பில் படையினருக்கு காணி வழங்குவதில்லை என்றே மக்களும், மக்கள் பிரதிநிதிகளும் தமது கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர். மக்களுக்குச் சொந்தமான காணிகளை விட்டு படையினர் செல்ல வேண்டும் என்பதிலும் உறுதியாக இருந்தனர். இந்த விடயம் தொடர்பில் அடுத்த கூட்டத்தில் இறுக்கமான முடிவுகள் எட்டப்படும் என்று இணைத்தலைவர்களில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குட்பட்ட வேணாவில், புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் மருத்துவமனைக் காணி உள்ளிட்ட காணிகளில் படையினர் முகாமிட்டு நிலை கொண்டுள்ளனர். அவற்றில் பல ஏக்கர் காணிகள் மக்களுடையவை. இந்தக் காணிகளை விடுவிக்க வேண்டும் என்று அந்தக் காணி உரிமையாளர்கள் கடந்த காலங்களில் பெரும் போராட்டங்களில் ஈடுபட்டிருந்தனர்.

கால அவகாசம் வழங்கப்பட்டபோதும், அந்தக் காணிகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை. அவற்றை விட்டு இராணுவத்தினர் வெளியேற வேண்டும் என்று மக்கள் வலியுறுத்தி வருகின்றனர். (ஐ-21.ரி3)

## கண்டியைக்...

வேற்றிக் கொள்ள அரசு முற்படுகின் றது.

இவ்வாறு கூறியுள்ளார் முன்னாள் அயலுறவுத் துறை அமைச்சரும் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக் கட்சியின் தலைவருமான ஜி.எல். பீரிஸ்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் அலுவலகத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

பலவந்தமாகக் காணாமல்போவதிலிருந்து அனைவரையும் பாதுகாக்கும் சட்டத்துக்கு மகாநாயக்க தேரர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர். இரண்டு தடவைகள் நாடாளுமன்றில் சட்டவரைவை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு அவை கைவிடப்பட்டன. ஆனால், கண்டிக் கலவரத்தைப் பயன்படுத்தி நாட்டின் பார்வையை வேறு திசையில் செலுத்தி சட்டவரைவை அரசு நிறைவேற்றியுள்ளது.

தற்போது முன்னெடுக்கப்படும் புதிய அரசமைப்பு உருவாக்கத்தையும் அவ்வாறே அரசு நிறைவேற்றத் தயாராகின்றது - என்றார். (ஐ-5)

## முகநூல் குழு...

அவர் தெரிவித்ததாவது:

கண்டி வன்முறை முகநூல் குழுவொன்று இணைந்து ஏற்படுத்திய அழிவு. இப்படி கூறினால் நீங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டீர்கள். ஆனால் அதுதான் உண்மை. கடந்த சில நாள்களுக்கு முன்னர் கண்டி தீப்பற்றி எரிந்தது. சிலரது தேவை மற்றும் இருப்புக்காக இந்த முகநூல் குழு நாடு முழுவதும் பரவியுள்ளது. நாங்கள் எந்த அர்ப்பணிப்பையாவது செய்து நாட்டில் மீண்டும் அப்படியான நிலமை ஏற்பட இடமளிக்க மாட்டோம். இனங்களுக்கு இடையிலான ஐக்கியத்துக்கு மக்கள் தலைமையேற்க வேண்டும் -என்றார். (ஐ-5)

## முகநூல் தடை...

இனவாத முறுகலைத் தடுப்பதற்காக என்று கூறிக் கொண்டு அரசுக்கு எதிரான சமூக வலைத்தளங்களைக் கட்டுப்படுத்த முற்படுகின்றது.

இந்தத் தடை எவ்விதத்திலும் நடைமுறைச் சாத்தியமில்லை. தற்போது இளையோர் திருட்டுத்தனமாக முகநூல்களைப் பயன்படுத்துகின்றனர். வெறுப்புப் பரப்புரைகளைப் பரப்புவதற்கு முகநூல் பயன்படுத்தப்படுகின்றது என்று கூறி அதனைத் தடை செய்துள்ளமை வேடிக்கை. இந்தத் தடைக்கு எதிராக ஆயிரக்கணக்கான இளையோருடன் வீதியில் இறங்கிப் போராடத் தயாராக இருக்கின்றேன் - என்றார். (ஐ-5)

## ஜெனிவா...

டம் வடமாகாண முதலமைச்சரால் நேற்றுத் திறக்கப்பட்டது. நிகழ்வின் பின்னர் செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"வேலைப்பளு காரணமாக நான் ஜெனிவாவுக்குச் செல்லவில்லை. எங்கள் உறுப்பினர்கள் அனைத்து விடயங்களையும் அங்கு எடுத்துரைப்பார்கள். அனந்தி சசிதரன், சிவாஜிலிங்கம் ஆகியோர் ஜெனிவாவுக்குச் சென்றிருக்கின்றார்கள். வேறு யார் யார் செல்கின்றார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை."-என்றார். (ஐ-21,35)

## வீழ்ந்து...

காத்மண்டு, மார்ச் 13

பங்களாதேஷ் அரசுக்குச் சொந்தமான வானூர்தியொன்று நேபாளத்தின் காத்மண்டு வானூர்தி நிலையத்தில் வீழ்ந்ததில் அதிலிருந்த 50 பேர் உயிரிழந்திருக்கலாம் என்று நேற்று இரவு முதல்கட்டத் தகவல் வெளியானது. எனினும் உயிரிழப்பு உறுதிப்படுத்தப்படவில்லை.

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் இருந்து நேபாளத்தில் தலைநகர் காத்மண்டு நோக்கி 71 பேருடன் வந்த வானூர்தியே விபத்துக்கு உள்ளானது. மீட்புப் பணிகள் துரித கதியில் இடம்பெற்ற போதிலும் உயிரிழப்பு தவிர்க்கப்படவில்லை. குறைந்தது 50 பேர் உயிரிழந்திருக்கலாம் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. வானூர்தி விபத்துத் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம)

## சாதாரணதர...

ஆயிரம் மாணவர்கள் தோற்றியிருந்தனர். விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணிகள் தற்போது பூர்த்தியடைந்துள்ளன.

அதேவேளை, தஹம் பாடசாலை தொடர்பான இறுதிப் பரீட்சை இந்த மாதம் 24 மற்றும் 25 ஆம் திகதிகளில் இடம்பெறும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். இந்தப் பரீட்சைக்கு சுமார் 1 இலட்சம் பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். (ஐ)

## முஸ்லிம்...

சாக நாம் நல்லிணக்க நகர்வுகள் தொடர்பில் பல்வேறு வாக்குறுதிகளைக் கொடுத்துள்ளோம். அதில் பிரதானமானது புதிய அரசமைப்பை உருவாக்குவதாகும்.

ஜெனிவா கூட்டத்தொடரில் இலங்கைக்கு நெருக்கடியாக சில விடயங்கள் அமையும். நாம் இன்னும் முன்னெடுக்க வேண்டிய சில நடவடிக்கைகளில் முன்னேற்றங்கள் இடம்பெற வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்படும்.

அண்மைக் காலமாக நாட்டில் சிறுபான்மை மக்கள் மீதான சில அடக்குமுறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ள நிலையில் இவை எமக்கு பெரிய நெருக்கடியை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்க முடியும். இந்த சம்பவங்கள் இப்போதே பன்னாட்டு ஊடகங்களில் விமர்சிக்கப்பட்டுள்ளன.

இவை தொடர்பில் கேள்வி எழுப்பப்படலாம். அரசாக நாம் முன்னெடுக்க வேண்டிய முக்கிய நடவடிக்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். இந்த நாட்டில் சிறுபான்மை மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். இதில் ஒரு சிலர் தமது அரசியல் சாதகத்தன்மையை கருத்திற் கொண்டு இனவாத முரண்பாடுகளைத் தோற்றுவிக்க முயற்சித்து வருகின்றனர். அதற்கு அரசு ஒருபோதும் இடமளிக்கக் கூடாது.

சிங்கள மக்களுக்கு உள்ள அதே உரிமை இந்த நாட்டின் தமிழ், முஸ்லிம் மக்களுக்கும் உள்ளது. அதை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அங்கீகரிக்கவும் வேண்டும். இனவாதம் மூலம் நாட்டில் ஒருபோதும் ஐக்கியத்தை உறுதிப்படுத்த முடியாது. விரைவில் தீர்வுகள் குறித்து நாம் சிந்திக்க வேண்டிய கட்டாயம் உள்ளது - என்றார். (ஐ-5,61)

## மாரப்பன...

வேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் அயலுறவுத்துறை இராஜாங்க அமைச்சர் வசந்த சேனநாயக்க. சிங்கள மொழித் தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

தலைமைத்துவ மட்டத்திலிருந்து கட்சிக்குள் மாற்றம் இடம்பெற வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் குழுவொன்று வலியுறுத்துகின்றது. கட்சிக்குள் பல குழுக்கள் இருக்கின்றன. மாற்றம் ஒன்றை ஏற்படுத்தினாலேயே அனைவரையும் ஒன்றிணைக்க முடியும். இல்லையேல் ஒவ்வொரு குழுக்களும் வெவ்வேறு இடத்துக்குத் தள்ளப்படும் நிலை உருவாகும். மாற்றம் என்பது விரைவில் நடக்கவேண்டும். மக்களின் எதிர்பார்ப்பும் அதுவே.

தலைமை அமைச்சர் ரணில் தனது நண்பர்களுக்குத் தேசியப் பட்டியலை வழங்கி, நட்புக்காக மிக முக்கிய அமைச்சுகளையும் கையளித்துள்ளார். முதியவர்களுக்கே முக்கிய இடம் வழங்கப்பட்டுள்ளது. மக்கள் ஆணையைப் பெற்றவர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும் என்பதே எமது கருத்து.

சுவாமிநாதனால் நாட்டுக்கு என்ன பயன்?. திலக் மாரப்பன, மலிக் சமரவிக்கிர ஆகியோராலும் என்ன பயன்?. நாட்டுக்காக அல்லது கிராமத்துக்காக ஏதேனும் நடக்கின்றதா?. இவர்களால் ஐந்து வாக்குகளையேனும் பெறமுடியுமா?. இவர்களை வைத்துக் கொண்டு பயணித்தால் அழிந்துவிடுவோம்.

ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள மூத்த உறுப்பினர்களுக்கு எதிராக நான் கருத்து வெளியிடவில்லை. ஜோன் அமரதுங்க, காமினி ஜயவிக்கிர பெரேரா ஆகியோர் இருக்கின்றனர். அவர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள். அவர்கள் கட்சியில் இருக்கவேண்டும். அவர்களை வெளியேற்றக்கூடாது. கட்சிக்குள் பயணிகளாக இருப்பவர்களை விரட்டியடிக்க வேண்டும் - என்றார். (ஐ-5)

## 15 ஆண்டுகள்...

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்று.

குற்றவாளிக்கு உதவிய குற்றச்சாட்டில் அவரது நண்பருக்கு 5 ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட 2 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

2014ஆம் ஆண்டு வடமராட்சி, வல்வெட்டித்துறையில் 13 வயதுச் சிறுமி ஒருவர் கடத்திச் செல்லப்பட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார். சிறுமி வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் 22 வயதுடைய (குற்றம் நடந்தபோது) இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்களுக்கு எதிராகப் பருத்தித்துறை நீதிவான் மன்றில் சுருக்கமுறையற்ற விசாரணைகள் நடந்தன. சந்தேகநபர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். வழக்குக் கோவைகள் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் பாரப்படுத்தப்பட்டன.

முதலாவது சந்தேகநபர் மீது கடத்தல் மற்றும் வன்புணர்வுக் குற்றச்சாட்டும், இரண்டாவது சந்தேகநபர் மீது கடத்தல் குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டு சட்டமா அதிபரால் யாழ்ப்பாணம் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு விசாரணைகள் யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் நடைபெற்றுவந்தன. நேற்று வழக்குத் தீர்ப்புக்காக எடுக்கப்பட்டது.

"சந்தேகநபர்கள் இருவரும் குற்றத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர். தமது குற்றத்துக்காக தற்போது அவர்கள் மனம் வருந்துகின்றனர். அவர்கள் இருவரின் குடும்ப நிலையைக் கருத்தில்கொண்டு குறைந்தபட்ச தண்டனையை வழங்க வேண்டும் என்று கோருகின்றேன்." என்று எதிரிகள் தரப்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி கருணை விண்ணப்பம் செய்தார்.

"எதிரிகள் குற்றத்தை ஏற்றுக்கொண்டதால் அவர்களுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும். பாதிக்கப்பட்ட சிறுமிக்கு இழப்பீடு பெற்றுக்கொடுக்க மன்று உத்தரவிட வேண்டும்." எனறு அரச சட்டவாதி சுகந்தி கந்தசாமி மன்றில் விண்ணப்பம் செய்தார்.

மேல் நீதிபதி தீர்ப்பை அறிவித்தார்.

குற்றவாளிகள் இருவரும் குற்றத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர். முதலாவது எதிரி சிறுமியைக் கடத்திச் சென்று வன்புணர்ந்துள்ளார். இரு குற்றங்களுக்காகவும் எதிரிக்கு 15 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்படுகின்றது. முதலாவது எதிரி பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 5 லட்சம் ரூபா இழப்பீடு வழங்க வேண்டும். வழங்கத் தவறின் 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும். தண்டமாக 5 ஆயிரம் ரூபா செலுத்த வேண்டும். செலுத்தத் தவறின் ஒரு மாதச் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும்.

இரண்டாவது எதிரி சிறுமியைக் கடத்திச் செல்ல முதலாவது எதிரிக்குத் துணை நின்றுள்ளார். அதற்கு அவருக்கு 2 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்படுகின்றது. அந்தத் தண்டனை 5 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்படுகின்றது. 5 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்த வேண்டும். செலுத்தத் தவறின் ஒரு மாதச் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தீர்ப்பு வழங்கினார். (ஐ-37)

## பட்டுப்பாதை...

வாறு கூறியுள்ளார்.

அவர் தெரிவித்ததாவது

சீனா ஏனைய நாடுகளுக்கு அச்சுறுத்தலாக அமையாது. அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனா, தமது இராணுவ நோக்கங்களுக்காக பயன்படுத்த முடியும் என்பது தொடர்பான கரிசனையை அறிந்து வைத்திருக்கிறேன்.

இருதரப்பு உறுதிப்பாடுகளையும், உடன்படிக்கையையும் மீறுவதற்கு இலங்கை அரசு ஒருபோதும் இடமளிக்காது. இந்து பசுபிக் பிராந்தியத்தில் சுதந்திர மற்றும் திறந்த நடவடிக்கைகளை ஊக்குவிக்க, எமது நாட்டில் ஜப்பான் மேற்கொள்ளும் உட்கட்டமைப்புப் பணிகளை ஊக்குவிக்கின்றோம்- என்றார். (ஐ-5)

## இன...

ஜெனிவா முருகதாசன் திடலை நோக்கிச் சென்றது.

பல தசாப்தங்களாக இலங்கையில் தொடர்ந்து நடத்தப்படும் தமிழினப் படுகொலையை முழுமையாக ஆராய வேண்டும், ஐக்கிய நாடுகள் சபையின் 2011 மார்ச் அறிக்கைக்கு அமைய் நீதி கிடைக்கும் பொருட்டு அனைத்துலக சமூகம் பன்னாட்டு நீதிமன்றில் விசாரணை நடத்தி தமிழ் மக்களுக்கான நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தியே இந்த நடைபவனி நடத்தப்பட்டது. (ஐ)

## தாமதிக்கும்...

றது. இலங்கை விவகாரம் தொடர்பில் பக்க மாநாடுகளும் நடைபெறுகின்றன.

இலங்கையில் இடம்பெற்ற படுகொலைகளுக்கான பொறுப்புக் கூறலிலிருந்து பன்னாட்டுச் சமூகம் எவ்வாறு தோற்றுப் போனது என்னும் தொனிப் பொருளில் அமைந்த பக்க நிகழ்வு 25ஆம் இலக்க அறையில் நேற்று இடம்பெற்றது. நாடு கடந்த தமிழீழ அரசு இந்த அமர்வை ஏற்பாடு செய்திருந்தது.

இந்த அமர்வில், இலங்கையின் நிலைமாறுகால நீதிச்செயற்பாடுகளை கண்காணிக்கும் பன்னாட்டு நிபுணர் குழுவின் ஒருங்கிணைப்பாளரும் கம்போடிய கலப்பு நீதிமன்ற சட்டவாளருமாகிய ரிச்சாட் ரோஜஸும் கலந்து கொண்டிருந்தார். (ஐ-5)

## 10 ஆண்டுகள்...

ருக்கு 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்தது யாழ்ப்பாணம் மேல் நீதிமன்று.

யாழ்ப்பாணம், கொட்டடியைச் சேர்ந்த சிறுமி ஒருவர் 2013ஆம் ஆண்டு நவம்பர் முதலாம் திகதிக்கும், 2014ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் 3 தடவைகள் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார் என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

சிறுமி வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். அவருக்கு எதிரான சுருக்க முறையற்ற விசாரணை யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் நடைபெற்றது. விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். வழக்கேடுகள் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் பாரப்படுத்தப்பட்டன.

சந்தேகநபருக்கு எதிராக 3 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு சட்டமா அதிபரால் யாழ்பபாணம் மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் வழக்கு விசாரணைகள் நடைபெற்று வந்தன. நேற்று வழக்கு தீர்ப்புக்காக எடுக்கப்பட்டது.

தீர்ப்பை மேல் நீதிமன்ற நீதிபதி அறிவித்தார்.

எதிரி குற்றச்சாட்டுக்களைத் தாமாக முன்வந்து ஏற்றுள்ளார். 3 குற்றங்களுக்கும் எதிரிக்கு 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்படுகின்றது. பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 2 லட்சம் ரூபா நட்டஈடு செலுத்த வேண்டும். செலுத்தத் தவறின் 3 மாதச் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தண்டனைத் தீர்ப்பு வழங்கினார். (ஐ-37)

## முகநூல்...

என்று முகநூல் நிறுவனத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அவை அகற்றப்பட்டால் சமூக ஊடகங்கள் மீதான தடை நீக்கப்படும் என தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழு நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தது. (ஐ-5)

கேலிச்சித்திரம்




நன்றி: டெய்லிமிரர்

# முழுமையான விசாரணைகளின்பின் சதிகாரர்களின் பெயர்கள் அம்பலம்

## தண்டனையிலிருந்து தப்பவே முடியாது என்கிறார் சட்டம், ஒழுங்கு அமைச்சர்



கொழும்பு, மார்ச் 13

கண்டியில் ஏற்பட்ட இனவன்முறையின் பின்னணியைக் கண்டறிவதற்காகப் பல கோணங்களில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. அவை முடிவடைந்த பின்னர் சூத்திரதாரிகளின் பெயர், விவரங்கள் அம்பலப்படுத்தப்படும் என்றும் சட்டம், ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கண்டி உட்பட நாட்டின் சில பகுதிகளில் இடம்பெற்ற குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 230 பேர் நேற்றுவரை கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் 161 பேர் கண்டி மாவட்டத்திலும் ஏனைய 69 பேர் வெளி இடங்களிலும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கண்டி நிர்வாக மாவட்டத்துக்குப் பிறப்பிக்கப்பட்டிருந்த பொலிஸ் ஊடரங்குச் சட்டம் முற்றாக நீக்கப்பட்டுள்ளது. இன வன்முறையை அடுத்து மூடப்பட்டிருந்த பாடசாலைகளும் நேற்று முதல் மீள இயங்க ஆரம்பித்துள்ளன. முடங்கிப்போயிருந்த கண்டி மக்களின் இயல்பு வாழ்க்கையும் வழமைக்குத் திரும்பியுள்ளது.

இந்த நிலையில், கண்டி மாவட்டத்தின் தற்போதைய நிலமை தொடர்பில் மொனராகலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்றுக் கருத்து வெளியிட்ட சட்டம், ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்த தாவது:

கண்டி மாவட்டத்தில் கடந்த இரண்டு நாள்களில் எவ்வித அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லை. மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பொலிஸாரும் விழிப்பாகவே இருக்கின்றனர்.

கண்டி மாவட்டத்தில் இடம்பெற்ற இன வன்முறையின் பின்னணியில் வெளியிடங்களிலிருந்து வந்தவர்களும் தொடர்புபட்டுள்ளனர். சில அரசியல்வாதிகள் பொலிஸ் நிலையங்களுக்குச் சென்று, கைதானவர்களை விடுதலை செய்யுமாறு மிரட்டல் விடுத்துள்ளனர்.

பிரதேச அரசியல்வாதிகளும் தொடர்பு பட்டுள்ளனர் என்று தகவல் கிடைத்துள்ளது. தற்போது விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. அவை முழுமையாக முடிவடைந்த பின்னர் பின்னணியிலிருந்து செயற்பட்டவர்களின் பெயர், விவரங்கள் நாட்டுக்குப் பகிரங்கப்படுத்தப்படும்.

குரோத அரசியலை அனைவரும் கைவிடவேண்டும். குறுகிய நோக்கங்களுக்காக இத்தகைய செயற்பாடுகளில் எவரும் ஈடுபடக் கூடாது. சூத்திரதாரிகளுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். தம்மீதான குற்றச் செயல்களை மறைப்பதற்கு, அமைச்சர்கள்மீது பழிபோடுவதற்குச் சிலர் முயற்சிக்கின்றனர் - என்றார் சட்டம், ஒழுங்கு அமைச்சர்.

அதேவேளை, நாட்டை மீண்டும் இருண்ட யுகத்துக்கு அழைத்துச்செல்ல இடமளிக்க முடியாது. சட்டம் உரிய வகையில் நடைமுறைப்படுத்தப்படும், என்று நீதி அமைச்சர் தலதா அத்துகோரளவும் அறிவித்துள்ளார். (5)

# தனக்குத் தனக்கென்றால் சுளகு படக்கு படக்கு என்று அடிக்குமாம்

## மைத்திரி - ரணில் அரசு மீது நாமல் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 13

அரச தலைவர் தேர்தற் காலத்தில் சமூகவலைத் தளங்கள் ஊடாகத் தமக்கு ஆதரவான நிலைப்பாடு கிடைத்தபோது அதனைத் தூக்கி வைத்துக்கொண்டாடிய அரசு, தற்போது அவர்களுக்கு எதிராகச் சமூக வலைத் தளங்கள் மாறியதும் அதனைத் தடை செய்வதா? இவ்வாறு முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்சவின் புதல்வரும், நாடாளுமன்ற உறுப்பினருமான, நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.



அவர் தனது கீச்சகத்தில் ஆங்கிலத்திலும், தமிழிலும் வெளியிட்டுள்ள பதிவுகளிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

"தமக்குச்சாதகமானநிலைப்பாட்டில் செயற்படும்போது கொண்டாடப்பட்ட சமூக வலைத் தளங்கள், அவர்களுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொள்ளும் போது தடை செய்வதா? தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைக் கொண்டு வந்ததாக அலட்டிக் கொள்பவர்கள், வரலாற்றில் எந்த அரசும் செய்யாத அளவு பேச்சுச் சுதந்திரத்தை முடக்குகிறார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார். (5)

# வன்முறையாளர்களுக்கு எதிராக விரைவில் வழக்குத் தொடுக்கவும்

## செயன்முறையைத் துரிதப்படுத்துமாறு சட்டமா அதிபருக்கு ரணில் பணிப்பு

கொழும்பு, மார்ச் 13

கண்டியில் கலவரத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தொடுப்பதற்குரிய நடவடிக்கையைத் துரிதப் படுத்துமாறு சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரியவுக்குத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்தார்.

வன்முறைச் சம்பவம் தொடர்பான அனைத்து விசாரணைகளையும் கூடிய விரைவில் முடிவுக்குக் கொண்டு வருமாறு பாதுகாப்புத் தரப்பினருக்கும் அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

கண்டியிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் இடம்பெற்ற இன வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸாரும், புலனாய்வுத் துறையினரும் தனித்தனியே விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 230 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் 161 பேர் கண்டி மாவட்டத்திலும் ஏனைய 69 பேர் வெளி இடங்களிலும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதான சூத்திரதாரிகள் எனக் கருதப்படும்சிலர்கொழும்புக்குஅழைத்துவரப்பட்டுத்தொடர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

விசாரணைகள் முடிவடைந்த பின்னர் அவை தொடர்பான அறிக்கைகள் இன்னும் சில நாள்களில் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்குக் கையளிக்கப்படவுள்ளன.

சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபர் ஆகியோருடன் இது சம்பந்தமாகத் தலைமை அமைச்சர் இந்த வாரம் பேச்சு நடத்தவுள்ளார் என்றும், அடுத்தக்கட்ட நடவடிக்கைகள்சம்பந்தமாகஇதன் போது தீவிரமாக ஆராயப்படும் என்றும் தலைமை அமைச்சர் அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, வன்முறைக்கான காரணம் பற்றியும், எதிர்காலத்தில் அத்தகையதொரு சம்பவம் இடம்பெறாமல் இருப்பதற்குரிய வழிவகைகளை ஆராய்வதற்காகவும் அரச தலைவர் விசாரணை ஆணைக்குழுவொன்றும் அமைக்கப்படவுள்ளது. ஜப்பான் பயணத்தைமுடித்துக்கொண்டு நாடு திரும்பிய பின்னர் உறுப்பினர்கள் விவரத்தை அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன அறிவிக்கவுள்ளார். (5)

# அரசைக் கவிழ்ப்பேன்

## ரத்னதேரர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 13

இரசாயன உரம் மற்றும் விவசாய இரசாயனப் பொருள்களை அரசு கைவிடவேண்டும். அதனைச் செய்ய மறுத்தால் அரசைக் கவிழ்ப்பதற்கு தயங்கப் போவதில்லையென அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

பதுளைப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மீண்டும் இரசாயனங்களைக் கொண்டுவருவதற்கு அரசு செயற்பட்டு வருகின்றது. சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் உரம் மற்றும் விவசாய இரசாயனப் பொருள்களை மீண்டும் கொண்டு வருதற்கான தீர்மானத்தைக் கைவிடாவிடின் அரசைக் கவிழ்ப்பதற்குப் பின்நிற்கப் போவதில்லை என்று கூறினார். (5)

# அரபுநாடுகளுடன் பகைமை உருவாகும் அபாயம்

## எச்சரிக்கிறார் கரு

கொழும்பு, மார்ச் 13

மத்திய கிழக்கு நாடுகளுடன் பகைமை ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாகச் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இனவாத அடிப்படையில் இலங்கையில் தாக்குதல்கள் முன்னெடுக்கப்பட்டால், மத்திய கிழக்கு நாடுகளில் இலங்கையர்களுக்கு வழங்கப்படும் தொழில் வாய்ப்புக்கள் முடக்கப்படக்கூடும். கண்டியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் சில நாடுகளை வருத்தமடையச் செய்தது. பெரும் எண்ணிக்கையிலான இலங்கையர்கள் மத்திய கிழக்கு நாடுகளில் பணியாற்றி வருகின்றனர்.

இந்த இலங்கைப் பணியாளர்கள் நாட்டுக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டால் நாட்டில் பெரியளவு பிரச்சினைகள் ஏற்படக் கூடும். பொருளாதாரம் பாதிக்கப்படக் கூடும்.

இனவாதம், மதவாதம் உலகின் எந்தவொரு தரப்புக்கும் நன்மை ஏற்படுத்தியதில்லை. கடும்போக்குவாதங்களைக் கைவிட்டு அனைவரும் சமாதான வழிகளில் சகோதரத்துவத்துடன் வாழ்வதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும் - என்றார். (5)

# மகாநாயக்க தேரர்களை அரசு மதிக்கவில்லை

## கோத்தா தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 13

மகாநாயக்க தேரர்களின் ஆலோசனைகளைக் கேட்காமல் இந்த அரசு செயற்படுகின்றது. காணாமல் ஆக்கப்படுதலைக் குற்றமாக அறிவிக்கும் சட்டவரைவை நிறைவேற்றவேண்டாம் என்று அவர்கள் கேட்டிருந்தபோதும், அரசு அதனை மீறி நிறைவேற்றியுள்ளது. இவ்வாறு முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் ஆலோசனைகளைப் பின்பற்று வதே இன்றைய நிலைக்கான காரணமாகும். அவர்களின் ஆலோசனைகளைக் கேட்காது. மகாநாயக்க தேரர்களின் ஆலோசனை அறிவுறுத்தல்களையே கேட்கவேண்டும்.

அரசு மத விழுமியங்களை உதாசீனம் செய்துள்ளது. நெருக்கடியான சூழ்நிலைகளின் போது மதத் தலைவர்களை பாதுகாப்பு அமைச்சுக்கு அழைத்து அவர்களின் ஆலோசனை பெற்றுக்கொள்ளும் முறைமை நான் பதவி வகித்த காலத்தில் பின்பற்றப்பட்டது. அரசமைப்பில் மட்டும் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை அளிப்பதில் எவ்வித பயனும் கிடையாது - என்றார். (5)

# கூட்டு அரசு மீதும் நம்பிக்கையில்லை

## நவநீதம்பிள்ளை விசனம்

கொழும்பு, மார்ச் 13

கூட்டு அரசின் தற்போதைய செயற்பாடுகள் அந்த அரசு மீதான நம்பிக்கையை குறையச் செய்துள்ளதாக ஐ.நா. மனித உரிமைகள் சபையின் முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.



கொழும்பு ஆங்கில ஊடகத்துக்கு வழங்கிய செவ்வி யிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கண்டியில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைகளை மதக் கலவரம் என்று எடுத்துக் கொள்ள முடியாது. கிளர்ச்சி மற்றும் போர் அனுபவங்களைக் கொண்ட ஒரு சமூகத்தில் மிருகத்தனமான செயற்பாடு. கண்டியில் இடம்பெற்ற கலவரங்கள் தொடர்பில் குற்றவாளிகள் தண்டிக்கப்படாவிட்டால் நாளை ஏனையவர்கள் சட்டத்தைத் தமது கைகளில் எடுக்கத் தயங்கமாட்டார்கள்.

மைத்திரி ரணில் தலைமையிலான கூட்டு அரசு, ஐக்கிய நாடுகள் சபைக்கு உறுதி வழங்கியது. அந்த உறுதிமொழிகளை முழுமையாக நிறைவேற்றும் என்று நம்பிக்கை வைத்திருந்தோம். எனினும் அரசின் தற்போதைய செயற்பாடுகள் நம்பிக்கையைக் குறையச் செய்துள்ளன. ஐ.நாவுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றாமல் இலங்கையால் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப முடியாது - என்றார். (5)

# தலையைச் சொறிந்து தண்டனை பெறவிருந்தவரின் தலை தப்பியது

கொழும்பு, மார்ச் 13

மாத்தளையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்தது ஒரு தனியார் பேருந்து. அதன் சாரதி சட்டதிட்டங்களையும், வீதி ஒழுங்குகளையும் கடைப்பிடித்து அதில் பயணம் செய்தவர்கள் வாய்திறந்து பாராட்டும் அளவுக்கு அந்தப் பேருந்தைச் செலுத்தியுள்ளார்.

கம்பகா நகரை அண்மித்தபோது அந்தப் பேருந்தைப் பொலிஸ் அதிகாரியொருவர் நிறுத்தியுள்ளார். அந்தச் சாரதி எந்தத் தவறுமே செய்யவில்லை என்பதைப் பிரயாணிகளும் உணர்ந்திருந்ததால், சிறந்த சாரதியைத் தெரிவு செய்யும் ஒரு நிகழ்ச்சிக்காகவே பேருந்து நிறுத்தப்பட்டது என்று அபிப்பிராயங்களைப் பரிமாறிக் கொண்டிருக்க, அந்தச் சாரதியும் திரும்பிப் பேருந்துக்கு வந்தார்.

என்ன நடந்தது எனப் பிரயாணிகள் ஆவலுடன் கேட்க, அலைபேசியில் உரையாடிக் கொண்டு வாகனத்தைச் செலுத்தினேன் என்பதற்காகவே தன்னை அந்தப் பொலிஸ் அதிகாரி நிறுத்தியதாகவும், அதற்கு அந்தச் சாரதி தன்னிடம் அலைபேசியே கிடையாது எனவும் தான் தலையைச்சொறிந்ததையே அந்தப்பொலிஸ்அதிகாரிஅலைபேசியில் கதைத்ததாகஎண்ணிவிட்டார் என்றும் கூறியுள்ளார். (5)

# சமூக ஊடகங்களை குறைகூறி பயனில்லை

## அமெரிக்க தூதுவர்

கொழும்பு, மார்ச் 13

குரோதம் நிறைந்த மனிதர்களினாலேயே பிரச்சினைகள் எழுகின்றனவே தவிர, சமூக ஊடக வலையமைப்புக்களினால் அல்ல என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் தெரிவித்துள்ளார்.

சமூக ஊடங்கள் மீதான தடை தொடர்பில் தனது கீச்சகப் பதிவிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

'குரோதம் நிறைந்த நபர்கள் பல்வேறு புதிய வழிகளில் வன்முறைகளைத் தூண்டி வருகின்றனர். சமூக ஊடகங்களைக் குறை கூறுவதில் பயனில்லை' என்று அவர் தெரிவித்துள்ளார். (5)



# முத்துராஜவெல குப்பை விவகாரம்: இடைக்காலத் தடையுத்தரவு நீடிப்பு

கொழும்பு, மார்ச் 13

முத்துராஜவெல சரணாலயப்பகுதியில்குப்பைகளைக் கொட்டுவதற்குவிதிக்கப்பட்டிருந்த இடைக்காலத் தடையுத்தரவை, ஜுலை 16ஆம் திகதி வரை நீடித்து, உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்தது.

கொழும்பு மாநகர சபைக் குட்பட்ட பகுதிகளில் சேகரிக்கப்படும்குப்பைகளை முத்துராஜவெல சரணாலயப் பகுதியில் கொட்டுவதற்குத் தடையுத்தரவு பிறப்பிக்குமாறும் கோரி, முத்துர்ராஜவெல் சரணாலயத்தை அண்மித்து வசிக்கும் 35 குடியிருப்பாளர்களால், உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனு, நீதியரசர் பிரியசாத் டெப், நீதியரசர்களான புவனேஹ அலுவிஹார, விஜித் கே மலல்கொட ஆகியோரடங்கிய குழாம் முன்னிலையில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டபோது, மனுவை ஜூலை 16ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கத் தீர்மானிக்கப்பட்டதுடன், கொழும்பு மாநகர சபைக்குப் பிறப்பிக்கப்பட்டிருந்த இடைக்காலத் தடையுத்தரவுநீடிக்கப்பட்டது.

பிரதிவாதிகளின் இந்த நடவடிக்கையால், முத்துராஜவெல சரணாலயத்தை அண்மித்துள்ள குடும்பங்கள் பாதிக்கப்படும் எனவும் மனுதாரார்களால் தெரிவிக்கப்பட்டிருந்ததுடன், கமநல அபிவிருத்தி அலுவலகத் தகவல்களின் அடிப்படையில், 635 ஏக்கர் நெற்செய்கைநிலமும் 7 ஆயிரம் ஏக்கர் சதுப்பு நிலமும் காணப்படுவதாக, மனுதாரார்களால்குறிப்பிடப்பட்டிருந்தது.

குறித்த பகுதியில் குப்பைகள் கொட்டுவதற்கு, பிரதேச வாசிகள், சூழலியலாளர்கள் மற்றும் மதத் தலைவர்களால், கடும் எதிர்ப்பும் தெரிவிக்கப்பட்டு வந்ததுடன், குப்பைகொட்டும் நடவடிக்கையின் காரணமாக, நீர்கொழும்பு வலயம் மற்றும் முத்துராஜவெல நீரேந்துப் பகுதிகளுக்குப் பாரிய பாதிப்பு ஏற்படும் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது. (5)

# கப்பம் கோரிய விவகாரம்

## பிரசன்னவுக்கும் மனைவிக்கும் எதிரான வழக்கில் சாட்சிய விசாரணை ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 13

மேல் மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கம்பகா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரசன்ன ரணதுங்க, அவருடைய மனைவி உள்பட மூவருக்கு எதிரான வழக்கின் சாட்சிய விசாரணை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று ஆரம்பமானது.

பிரசன்ன ரணதுங்க, மேல் மாகாண முதலமைச்சராக இருந்தபோது, மீதொட்டமுல்லையிலுள்ள 2.5 ஏக்கர் காணி தொடர்பில், வர்த்தகர் ஒருவரிடம் 64 மில்லியன் ரூபா கப்பம் கோரினார் என்று பிரசன்ன ரணதுங்க, அவருடைய மனைவி மயூரின் ரணதுங்க, நரேஜ் பரீக் ஆகியோருக்கு எதிராக, சட்டமா அதிபரால் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

2015ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6ஆம் திகதிக்கும் 2015 ஜூன் மாதம் 2ஆம் திகதிக்கும் இடையிலான காலப்பகுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் இந்தச் சம்பவம் தொடர்பில் 15 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டதுடன், 65 சாட்சியங்கள் அறிவிக்கப்பட்டன.

பாதிக்கப்பட்ட நபரால் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய வழக்குத் தொடரப்பட்டு, பிரசன்னவும் அவருடைய மனைவியும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

வழக்கின் சாட்சிய விசாரணைக்கான தினமாக நேற்றைய தினம் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், மூன்றாவது பிரதிவாதியான நரேஜ் பரீக் இல்லாமல் சாட்சிய விசாரணையை முன்னெடுப்பதாக அறிவிக்கப்பட்டது.

நீதிபதி லலித் ஏக்கநாயக்க முன்னிலையில் 15 குற்றச்சாட்டுகளும் வாசிக்கப்பட்டன. அதன்பின்னர், 1ஆம் 2ஆம் பிரதிவாதிகள், தாம் நிரபராதிகள் என்று அறிவித்ததுடன், 3ஆவது பிரதிவாதியின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி தமது சேவை பெறுநர் நிரபராதி என்று அறிவித்தார்.

வழக்கின் முதலாவது சாட்சியாளரான கிரிஸ்டியன் ஜெராட் மென்டிஸ் என்பவர் சாட்சியம் வழங்க, முறைப்பாட்டாளர் சார்பில் முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் துசித் முதலிகே சாட்சியத்தை நெறிப்படுத்தினார்.

இலத்திரனியல் உபகரணங்களை இறக்குமதி செய்யும் தொழிலில் 1993ஆம் ஆண்டு முதல் தான் ஈடுபட்டுவருவதாகக் கூறிய சாட்சியாளர், 3ஆவது பிரதிவாதியின் தொடர்பின் அடிப்படையிலேயே மீதொட்டமுல்லை காணியை விலைக்கு வாங்கத் தீர்மானித்திருந்தாகச் சாட்சியமளித்தார்.

காணியைப் பெற்றதன் பின்னர், அதை தோண்டியபோதே அது சேற்றுநிலம் என்று தெரியவந்ததாகக் குறிப்பிட்ட சாட்சியாளர், அந்தக் காணிக்காக பல சந்தர்ப்பங்களில் பணத்தை வழங்கியதாகவும் சாட்சியமளித்தார். 1ஆம், 2ஆம் பிரதிவாதிகள் சார்பில் அரச தலைவர் சட்டத்தரணி அனில் சில்வா முன்னிலையாகியிருந்தார்.

வழக்கு நாளை மறுதினம் வியாழக்கிழமை வரையில் ஒத்திவைக்கப்பட்டது. (5)

# 15ஆம் திகதி கூடுகிறது பொலிஸ் ஆணைக்குழு

கொழும்பு, மார்ச் 13

அம்பாறை மற்றும் கண்டி கலவரத்தின்போது பொலிஸார் செயற்பட்ட விதம் தொடர்பில் விசாரணை நடத்தவுள்ள தேசிய பொலிஸ் ஆணைக்குழு, அது தொடர்பில் ஆராய்வதற்காக நாளை மறுதினம் வியாழக்கிழமை கூடவுள்ளது.

வன்முறைகள் வெடித்த பகுதிகளுக்கு நேரில் பயணம் மேற்கொள்ளவுள்ள பொலிஸ் ஆணைக்குழு வின் அதிகாரிகள், பாதிக்கப்பட்ட மக்களிடம் கலந்துரையாடி, சாட்சியங்களைப் பதிவு செய்யவுள்ளனர்.

அம்பாறை மற்றும் கண்டி வன்முறைகளின்போது சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதற்குப் பொலிஸார் தவறிவிட்டனர் என்றும், பக்கச்சார்பான முறையிலேயே அவர்கள் நடந்து கொண்டனர் என்றும் பாதிக்கப்பட்ட மக்களும், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் குற்றஞ்சுமத்தியுள்ளனர். மனித உரிமை அமைப்புகளும் பொலிஸார் மீது விமர்சனங்களை முன்வைத்துள்ளன.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே பொலிஸாருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பொலிஸ் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளது. அதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கையே நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ளது. (5)

# சட்டத்தைப் பாகுபாடின்றி நடைமுறைப்படுத்துங்கள்

## இலங்கைக்கு அறிவுரை கூறினார் ஐ.நா. உதவிச் செயலர்



கொழும்பு, மார்ச் 13

இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளை ஐ.நாவின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலர் ஜெப்ரி பெல்ட்மன் கண்டித்துள்ளார். சட்டத்தின் ஆட்சியைப் பாகுபாடின்றி நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக்கான பயணத்தை மேற்கொண்டுள்ள அவர், முஸ்லிம்களின் பள்ளிவாசல்கள், வணிகநிலையங்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து நேற்றுமுன்தினம் கருத்துவெளியிட்டார். வன்முறைகளில் ஈடுபட்ட, வெறுப்புணர்வுக் கருத்துக்களை வெளியிட்ட குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்துமாறும், அவர் அரசிடம் கோரியுள்ளார்.

இலங்கையில் முஸ்லிம் அரசியல் தலைவர்கள், ஐ.நாவின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலர் பெல்ட்மனைச் சந்தித்தபோது, சட்டம் ஒழுங்கு மீறப்பட்டதையும், முஸ்லிம்கள் மற்றும் அவர்களின் வாணிபங்களைக் குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதல்களையும் கண்டித்தார் என்று ஐ.நா. அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதுபோன்ற சம்பவங்கள் மீள நிகழாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அரசின் பொறுப்பு என்றும், சட்டத்தின் ஆட்சியைப் பாகுபாடு இன்றி நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (5)

# உதவி வழங்குபவர்கள் தொடர்பு கொள்ளவும்

## முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

கொழும்பு, மார்ச் 13

அம்பாறையிலும் மற்றும் கண்டி மாவட்டத்திலும் வன்முறையால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள பள்ளிவாசல்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் யாவும் அரசால் மறு சீரமைக்கப்பட்டது. அதேவேளையில் அவசரமான உதவிகளை முஸ்லிம் சமயப் பண்பாட்டலுவல்கள் ஊடாகவும் மேற்கொள்ள முடியும். அவ்வாறு உதவிகளைச் செய்ய விரும்புபவர்களைத் தொடர்புகொள்ளுமாறு முஸ்லிம் சமயப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.ஆர்.எம்.மலீக் கேட்டுக் கொண்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வன்முறையால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பொருளாகவும் பணமாகவும் சேகரித்து வழங்கும் மனிதாபிமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவை தனிப்பட்ட ரீதியாகவும், ஊர் ஜமாஅத் ரீதியாகவும், நிறுவனங்கள் ரீதியாகவும் வழங்கப்படுகின்றன.

ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட அடிப்படையில் பாதிக்கப்பட்ட எல்லா இடங்களையும் சென்றடைய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். முஸ்லிம் சமய கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்களம் முழுமையான மதிப்பீடுகளை மேற்கொண்டு வருகின்றது. பாதிக்கப்பட்ட அந்தந்தப் பிரதேச செயலகம் ஊடாகத் தகவல்களைத் திரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றோம். பொதுவாகப் பாதிக்கப்பட்ட எல்லா முஸ்லிம் மக்களும் மனம் நோகாமல் உதவிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஒரு வார காலமாக உணவு வசதியின்றி வீடுகளிலும், ஏதிலி நிலையங்களிலும் முஸ்லிம்கள் முடங்கி வாழ்கின்றனர். பெரும்பான்மையான முஸ்லிம்கள் தொழிலை இழந்துள்ளனர். அன்றாடம் கடைகளுக்குச் சென்று கூலித்தொழில் செய்து வந்தவர்களின் வாழ்க்கை முற்றாக அடிபட்டு நிர்க்கதியாகியுள்ளனர். வீடு வாசல்களை இழந்து வேறு இடங்களிலும் குடுபத்தவர்கள் வீடுகளிலும் பலர் வசிக்கின்றனர். இந்த மக்களுக்கான உதவிகளை முஸ்லிம் சமயம் கலாசாரத் திணைக்களத்தின் நிதியத்தின் ஊடாக முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளோம்.

மனிதாபிமான உதவிகளைப் புரிய விரும்புபவர்கள் ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவன ரீதியாகச் செயற்படவுள்ள சகாய நிதியத்துக்கு உதவிகளை வழங்கி வைக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம் - என்றார். மேலதிக விபரங்களுக்கு 011 266 9997 என்ற இலக்கத்துக்குத் தொடர்பு கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)

# இளவயது மணங்கள் இலங்கையில் குறைவு

## ஐ.நா. அறிக்கை

இலங்கையில் இளவயதுத்திருமணங்கள் குறைவடைந்துள்ளதாக ஐக்கிய நாடுகளுக்கான சிறுவர் நிதியம் அறிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது.

ஏனைய தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் இளவயதுத் திருமணங்கள் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றன. இலங்கை உட்பட 7 நாடுகளில் இளவயது திருமணங்கள் குறைவடைந்துள்ளன. பன்னாட்டு ரீதியாகக் கடந்த 10 ஆண்டுகள் காலப் பகுதியினுள் இளவயதுத்திருமணங்கள் 15 சதவீதத்தால் குறைவடைந்துள்ளன. கடந்த 2014ஆம் ஆண்டு 16 ஆயிரம் முதல் 24 ஆயிரம் வரையிலான 18 வயதைக் கொண்ட இளையோர் திருமண பந்தத்தில் இணைந்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (5)

# கண்டியில் 3பேர் கைது

## துப்பாக்கி, கைக்குண்டு அவர்களிடமிருந்து மீட்பு

கொழும்பு, மார்ச் 13

கண்டியில் துப்பாக்கி மற்றும் கைக்குண்டுகளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் மூவரும் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

நிட்டம்புவ மற்றும் கம்பகாப் பகுதியைச் சேர்ந்த 28 தொடக்கம் 38 வயது மதிக்கத்தக்கவர்களெனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட இவர்கள், பல கொலைகளுடன் தொடர்புடையவர்கள் என்று விசாரணையில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் குறிப்பிடுகின்றனர். (5)

## மகிந்த தலைமையில்

# பொதுஎதிரணித்தலைவர்கள் கொழும்பில் இன்று பேச்சு

ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை, உள்ளூராட்சி சபைகளுக்கான உறுப்பினர்கள் தேர்வு குறித்த அரசிதழ் அறிவிப்பு உள்பட சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக மகிந்த அணியான பொது எதிரணியிலுள்ள கட்சித் தலைவர்கள் கொழும்பில் மகிந்த தலைமையில் அவரது இல்லத்தில் இன்று மாலை கூடவுள்ளனர்.

ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கடந்த வாரம் கையளிப்பதற்குத் தீர்மானித்திருந்தாலும் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் அந்த நடவடிக்கை தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது. அடுத்த நாடாளுமன்ற அமர்வின்போது பிரேரணையைக் கையளித்துவிட வேண்டும் என்பதில் பொது எதிரணி குறியாக உள்ளது. (5)

## சமூகத்தளம் முடக்க

# பாதிப்புக்கள் தொடர்பில் நீண்ட கலந்துரையாடல்

## விரைவில் தடை நீங்கும் என்கிறார் ஹர்ச



கொழும்பு, மார்ச் 13

சமூகவலைத் தளங்கள் முடக்கப்பட்டதால் ஏற்பட்ட பொருளாதாரப்பாதிப்புக்குறித்துத்தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவின் தலைவரும், அரச தலைவரின் செயலருமான ஒஸ்ரின் பெர்னான்டோவுடன் நீண்ட நேரம் கலந்துரையாடல் இடம்பெற்றது. விரைவில் நல்ல முடிவு கிடைக்கும். இவ்வாறு பிரதி அமைச்சர் ஹர்ச டி சில்வா தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றதாகவும், பிரதி அமைச்சர் ஹர்ச தனது கீச்சகத்தில் பதிவு செய்துள்ளார்.

இதேவேளை, இந்தத் தடை நீக்கம் பற்றி என்னால் எதுவும் கூறமுடியாது. ஏனென்றால், தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழு, அரச தலைவரின் கீழ் உள்ளது. இந்தத் தடையால் பெருமளவு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை அறிவேன். எனினும், அதனைவிட, தேசியப் பாதுகாப்புத் தொடர்பான கரிசனைகள் முக்கியமானவை, என்று தொலைத்தொடர்பு உட்கட்டமைப்பு அமைச்சர் ஹரின் பெர்னான்டோ தெரிவித்தார். (5)

# பிணைமுறி மோசடியாளரை கலவரங்களால் மறந்துவிட்டோம்

## நினைவூட்டுகிறார் மகிந்த



கொழும்பு, மார்ச் 13

மத்திய வங்கிப் பிணைமுறி மோசடியில் தொடர்புடைய முக்கிய சந்தேகநபரான அர்ஜுன் மகேந்திரனைத் தற்பொழுது அனைவரும் மறந்துள்ளதாக முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் குறித்துப் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள் தற்பொழுது அமைதியாக இருக்கின்றனர். மகேந்திரனைக் கைது செய்யத் தற்பொழுது எந்த வித அவசரமும் இல்லாமல் உள்ளனர்.

கண்டிச் சம்பவம் மற்றும் நாட்டில் ஏற்பட்ட பதற்றமான நிலவரம் என்பவற்றால், அர்ஜுன் மகேந்திரனைப் பொறுப்பிலுள்ளவர்கள் மறந்துள்ளனர். மகேந்திரனின் நடவடிக்கைகள் குறித்து மக்கள் ஒரு போதும் மறக்க மாட்டார்கள் - என்றார். (5)

## இலங்கை ஏதிலிக்கு இழப்பீடு செலுத்திய சுவிஸ் அரசு

கொழும்பு, மார்ச் 13

சுவிஸிலிருந்து நாடு கடத்தப்பட்ட இலங்கைத் தமிழ் ஏதிலிக்கு சுவிஸ் அரசு பெருமளவு இழப்பீடு செலுத்தி இருப்பதாக, அந்த நாட்டின் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

நாடு கடத்தப்படும் இலங்கை ஏதிலிகள் இலங்கையில் கைது செய்யப்பட்டுத் துன்புறுத்தப்படுவதாக ஐ.நா. சபை தெரிவித்துள்ள போதும், அண்மைக் காலமாக இலங்கையைச் சேர்ந்த தமிழ் ஏதிலிகளின் விண்ணப்பங்களைச் சுவிஸ் அரசு நிராகரித்து வருகிறது.

இலங்கைத் தமிழ் ஏதிலியின் விண்ணப்பத்தையும் சுவிஸ் அதிகாரிகள் நிராகரித்து, அவரை நாடு கடத்தியுள்ளனர். நாடு கடத்தலின் பின்னர் இலங்கையில் கைது செய்யப்பட்டுத் துன்புறுத்தப்பட்ட நிலையில், மீண்டும் சுவிஸுக்குத் தப்பிச் சென்று வழக்குத் தாக்கல் செய்துள்ளார். அவர் துன்புறுத்தப்பட்டமையை உறுதி செய்த நீதிமன்றம், அவருக்கு இழப்பீடு வழங்குமாறு அரசுக்கு உத்தரவிட்டுள்ளது. இதன்படி அவருக்குச் சுவிஸ் அரசு பெருந்தொகையான இழப்பீட்டை வழங்கி இருப்பதாக அந்த ஊடகம் தெரிவித்துள்ளது. (5)

# கண்டியில் 4ஆயிரம் படையினர்

## விரைவில் விலக்கப்படுவர் என்கிறது பாதுகாப்புத் தரப்பு

கொழும்பு, மார்ச் 13

கண்டிக் கலவரங்களைக் கட்டுப்படுத்துவதற்காகக் கண்டி மாவட்டத்தில் களமிறக்கப்பட்ட 4 ஆயிரம் பாதுகாப்புத் தரப்பினரும் விரைவில் அங்கிருந்து விலக்கப்படுவர் என்று பாதுகாப்புத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கண்டியில் கடந்தவாரம் முஸ்லிம்களுக்கு எதிரான இனக்கலவரம் கட்டவிழ்த்து விடப்பட்டது. பொலிஸாரால் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாத சூழலில், பாதுகாப்புத் தரப்பினர் களமிறக்கப்பட்டனர். சுமார் 4 ஆயிரம் படையினர் கண்டி யில் இன்னமும் பாதுகாப்புக்காக நிறுத்தப் பட்டுள்ளனர். நிலைமை சுமுகமாகி வருவதால் அவர்கள் விரைவில் விலக்கப்படுவர் என்று இராணுவத் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்தன. (5)

## மாநகரசபை யாழ்ப்பாணம்
# கூறுவிலை கோரல்

மாநகரசபை எல்லைக்குள் உள்ள வீதிகள் அமைத்தல் புனரமைப்பு செய்வதற்கு தேவையான கீழ்வரும் மூலப்பொருள்களை விரைவாக வழங்கக்கூடிய வழங்குநர்களிடம் இருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன. இதற்கான கூறுவிலைப் படிவங்களை **20.03.2018** ஆம் திகதிவரை கொள்வனவுப் பகுதியில் பெற்று அதனைப் பூர்த்தி செய்து கடித உறையினுள் உள்ளடக்கி உறையின் இடது பக்க மூலையில் **கூறுவிலை எனக் குறிப்பிட்டு ஆணையாளர் மாநகரசபை யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு **26.03.2018** ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.


| விவரம் | | தேவைப்படும் அளவு (அண்ணளவாக) |
|---|---|---|
| 01. ½″ | அளவுள்ள கருங்கல் சல்லி | 50 Cub |
| 02. ¾″ | அளவுள்ள கருங்கல் சல்லி | 50 Cub |
| 03. 1″ | அளவுள்ள கருங்கல் சல்லி | 50 Cub |
| 04. 1½″ | அளவுள்ள கருங்கல் சல்லி | 50 Cub |
| 05. 2″ | அளவுள்ள கருங்கல் சல்லி | 50 Cub |
| 06. 4″ | அளவுள்ள கருங்கல் சல்லி | 50 Cub |
| 07. 6 - 9 | அளவுள்ள கருங்கல் | 50 Cub |
| 08. கருங்கல் டஸ்ட் | | 50 Cub |
| 09. கண்டாவளை மணல் | | 50 Cub |

**குறிப்பு:** VAT வரி செலுத்துபவராயின் VAT Number ஐ குறிப்பிடுக.

**ஆணையாளர் மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

12.03.2018 (in.6124) (13.17)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பூலோகம் 10 . 02 . 1971

பரலோகம் 13 . 03 . 2017

## அமரர் தவரட்ணம் மகிமைராஜா

அன்பாலும் பண்பாலும் அனைவரையும் அரவணைத்த
எம் அன்புத் தெய்வமே!.
மண்ணில் வாழும்வரை உங்கள் அன்புத் திருவுருவம்
எம்மனதை விட்டு என்றும் நீங்காது.

**இல.58, அம்மன்வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

என்றும் பிரிவால் வாடும் மனைவி, பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர்கள்.

(CS/14713)(11,17)

## வேலை வாய்ப்பு

ஆவரங்காலில் உள்ள போட்டோ கொப்பி கடைக்கு A/L படித்த, கொம்பியூட்டர் வேலை தெரிந்த பெண்வேலையாள்தேவை. அருகில் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்பு - 077 526 2620**

வான் (Townace, Naoh) வகையானது
## தேவை

நல்ல நிலையிலுள்ள மேற்படி வகையான வான் விற்பனைக்கு இருப்பின் தொடர்புகளுக்கு

**075 919 9759**

(cs.14714)(13.17)

## ES Printers

பனர் பிரிண்ட் (Banner) 35/=

# 357, Kasthuriyar Road, Jaffna.

## ஸ்ரீ பரமானந்தா சிறுவர் முதியோர் இல்ல பணியாளர் வெற்றிடங்கள்

**01. ஆண் சமையலாளர்**

**தகைமை -**

- 45 வயது தொடக்கம் 60 வயதுக்குட்பட்டவர்கள்
- சமையல் வேலை, சிற்றுண்டி வேலைகளில் முன் அனுபவம் உள்ளவராக இருத்தல் வேண்டும்
- உடல் ஆரோக்கியமுள்ளவராக இருக்க வேண்டும்.
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**02) பேருந்து சாரதி -**

**தகைமை**

- 45 வயது தொடக்கம் 60 வயதுக்குட்பட்டவர்கள்
- சாரதி அனுமதிப்பத்திரம்
- முன்னனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும்.
- சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு:-** விண்ணப்பங்கள் 28.03.2018 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு ஸ்ரீபரமானந்தா சிறுவர் முதியோர் இல்லம். வதிரி. கரவெட்டி என்னும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

**தலைவர், தர்மகர்த்தாசபை**
**ஸ்ரீபரமானந்தா சிறுவர் முதியோர் இல்லம், வதிரி, கரவெட்டி.**

(IN/6123)(11,17)

## 30 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 20 . 10 . 1937

மறைவு 13 . 02 . 1988

## அமரர் தி.சி.சண்முகலிங்கம்
(இணுவில் கிழக்கு)

திதி: அபரபக்க ஏகாதசி (13.03.2018)

புண்ணியப் பதியென புவனி போற்றும் இணுவையில்
எண்ணிய சேவையை மக்களுக்காய் நாளும் இயம்பிய
வண்ண மிகு குடும்பத்தலைமையாய் வலம் வந்த - அளவிலா
பண்பு மிகு எம் அருமை தந்தையே! பாசமிகு எந்தையே!

தோற்றங்கள் மாறிப் போகும் மனித வாழ்வில்
மாற்றங்கள் வந்து போகும் மறுபடி மாறும் விதியாய்
கூற்றுவன் வருகையால் உங்கள் பிரிவதால்
ஆற்றிலே வெள்ளமாய் கண்கள் கண்ணீர் சொரிந்தனவே

அந்த நாள் சோகம் நாளும் மனமதை நெருடினாலும்
சிந்தை நிறைத்து உங்கள் சீரிய கனவுகளை - யாம்
சந்தன மரமாய் தேய்ந்து கல்வியில் தடம் பதித்தோம்
எந்தையே! நீங்கள் இல்லையே! எல்லாம் இருந்தும்.

*உங்கள் ஆத்மா சாந்தியடைய சிவகாமியம்மனைப் பிரார்த்திக்கின்றோம்*

**'சுகந்தம்' இணுவில் கிழக்கு, இணுவில்.**

**அன்பான மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரன், பேர்த்திகள், சுற்றத்தார்கள்.**

(CS.14685)(13 .17)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.தாதியக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றிய

## ரஜுலாதேவி வல்லிபுரநாதன்



அவர்கள் **26.02.2018 தொடக்கம் சுகாதார அமைச்சில் தாதியக் கல்விப்பணிப்பாளராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.**

**இவர் முதலாவது தமிழ் தாதியக் கல்விப் பணிப்பாளர்** எனும் உயர் பதவியைப் பெற்று எமது தமிழ் மண்ணுக்கும், எமது கல்லூரிக்கும் பெருமை சேர்த்தமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவருக்கு சகல வழிகளிலும் இறையருள்பெருக எல்லாம் வல்ல பரம்பொருளைப் பிரார்த்திக்கின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர்:

**கல்விசார், கல்விசாரா உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், தாதிய மாணவர்கள்.**

தாதியக் கல்லூரி, யாழ்ப்பாணம்

(CS/14710)(11.17)

## மரண அறிவித்தல்



## குசேலராசா தனுஷன்

தோற்றம் 12.03.19977 — மறைவு 12.03.2018

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை 4ஆம் குறுக்கு த் தெருவை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குசேலராசா தனுஷன் நேற்று (12.03.2018) திங்கட் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் குசேலராசா - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், சிந்துஜா (லண்டன்), மதிவதனி, தர்ஷன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அறிவழகன் (லண்டன்) அவர்களின் மைத்துனரும், கௌசல்யா, அபிஷேக் (லண்டன்) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (13.03.2018) செவ்வாய்க்கிழமை நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**4 ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை.**

தகவல்: **குடும்பத்தினர்.** 077 639 3451

(cs.14709)13.17)

உதயன்

விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111

# மூன்று ஆழ்கடல் படகுகள் அடுத்த மாதம் பணிக்கு

## தலா 10 மில்லியனில் அமைக்கப்பட்டவை

**யாழ்ப்பாணம், மார்ச் 13**

**ஆழ் கடலில் ஒரு மாதம் வரையில் தங்கிநின்று மீன்பிடிக்கக்கூடிய 3 ஆழ்கடல் படகுகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதன் மூலமாக ஒரு தடவையில் சுமார் 20 இலட்சம் ரூபா வரையில் இலாபமீட்ட முடியும். அவை ஒரு மாதத்தில் பயன்பாட்டுக்கு விடப்படும் என்று யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஜெ.சுதாகரன் தெரிவித்தார்.**



ஆளியவளை, உடுத்துறை, வத்திராயன் ஆகிய இடங்களிலுள்ள கடற்றொழில் சங்கங்களுக்கு குறித்த படகுகள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த வருடம் ஜூன் மாதம் அவை கையளிக்கப்பட்டன. சுவிஸ் லேபறன்ஸ் அசிஸ்டன் நிறுவன அனுசரணையில் தலா10 மில்லியன் ரூபாவில் 45அடி நீளமான படகுகள் அமைக்கப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் கடற்றொழில் பரிசோதகர் ராஜேந்திரன் தெரிவிக்கையில் 'கஷ்டப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்களை ஊக்குவிக்கும் முகமாகவும் ஆழ்கடல் மீன்பிடியை ஊக்குவிக்கும் முகமாகவும் குறித்த படகுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. குறித்த பிரதேசத்தில் பெரும்பான்மையான மக்களுக்குத் தொழில் செய்யும் வசதி இல்லாத காரணத்தாலும் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்களை முன்னேற்றப்பாதைக்குக் கொண்டு செல்லவும் அவர்களின் வாழ்வெழுச்சிக்கும் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் படகு வழங்குவதற்கு முன் ஒவ்வொரு சங்கங்களில் இருந்தும் ஆறு பேரைத் தெரிவு செய்து அவர்களுக்கு ஆழ்கடல் மீன்படி பற்றி பயிற்சி வழங்கப்பட்டது. அந்த ஆறு பேரும் மாறி மாறிச்சென்று தொழிலில் ஈடுபடுவார்கள். ஆழ்கடல் மீன்பிடியானது குறைந்தது 20 நாள் அல்லது 25 நாள்கள் கடலிலேயே தங்கி மீன்பிடிப்பதே. அதற்குரிய பொருள்களை எடுத்துச் சென்றுதான் தொழிலில் ஈடுபட முடியும். இன்னும் ஒரு மாதத்தில் குறித்த படகுகள் ஆழ்கடலில் தொழிலில் ஈடுபடும் என்று எதிர் பார்க்கப்படுகிறது என்றும் தெரிவித்தார்.

'மருதங்கேணி பிரதேச செயலர் குறித்த மூன்று சங்கங்களுக்கும் தலா 15 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா கடனாக வழங்கியிருந்தார்.

கடந்தவருட கூட்டுறவு நிதி மூலமாகக் குறித்த கடன் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதியை வைத்து அவர்கள் படகுகளில் ஆழ்கடல் தொழிலுக்கான ஏனைய பொருள்களைக் கொள்வனவு செய்யவே வழங்கப்பட்டது' என்று உடுத்துறைப் பிரதேச மீனவ சங்கத் தலைவர் தெரிவித்தார்.

'அந்த பகுதி மக்களுக்கு இது ஒரு புதிய அனுபவமாக காணப்படுகின்றது. அத்தோடு அந்தப் பகுதிகளில் துறைமுக வசதி இல்லாத காரணத்தால் படகுகள் தற்காலி கமாக காரைநகரில் தரித்து விடப்பட்டுள் ளன.

குறித்த பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் பின்தங்கிய கிராமங்களைச் சேர்ந்தவர்கள். ஆழ்கடல் படகு கிடைத்தது. அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்களின் முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும்' என்று வத்திராயன் சங்கத்தலைவர் தெரிவித்தார். (எ-4)



# தடம்புரண்டது ஹைஎஸ்

## நால்வருக்கு காயம்

பரந்தன் மார்ச் 13

பரந்தனில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த ஹைஎஸ் வாகனம் பரந்தன்-பூநகரி வீதியில் நேற்றுக் காலை தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியது.

வாகனத்தில் பயணித்த சாரதி உட்பட நான்கு பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்து அதிக வேகத்தால் இடம்பெற்றுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-35)




பெண்ணொருவரின் பிரசவத்துக்கு உதவி

# மனித நேயத்துடன் செயற்பட்ட காவலர் மதிப்பளிக்கப்பட்டார்

யாழ்ப்பாணம் மார்ச் 13

கர்ப்பிணிப் பெண்ணைக் காப்பாற்றி பாதுகாப்பான பிரசவத்துக்கு உதவிபுரிந்த இலங்கை காவல்துறையைச் சேர்ந்த ஒருவர் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் கடந்த 8ஆம் திகதி கிளிநொச்சியில் நடைபெற்ற பன்னாட்டு மகளிர் தின விழாவில் மதிப்பளிக்கப்பட்டார்.

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சுழிபுரம் பகுதியைச் சேர்ந்த கர்ப்பிணித் தாயொருவர் பிரசவத்துக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குச் சென்றுகொண்டிருந்த வேளை பயணித்த முச்சக்கர வண்டி இயந்திரக்கோளாறு ஏற்பட்டு இடைநடுவில் நின்றிருந்தது. இரவு வேளையென்பதால் பயணத்தைத் தொடரமுடியாது பரிதவித்து நின்றவர்களுக்கு அப்போது வட்டுக்கோட்டை காவல் நிலையத்தில் கடமையில் இருந்த செனவிரட்ண என்ற காவலர் உதவியிருந்தார்.

நான்கு மாதங்களுக்கு முன்னர் நடைபெற்றிருந்த இந்தச் சம்பவத்தின் போது, வட்டுக்கோட்டை காவல்நிலையத்தில் கடமையில் இருந்த செனிவிரட்ண (அமில) என்ற காவலர் வாகனத்தில் இரவுநேர வீதிக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளையில் இவ்வாறு முச்சக்கர வண்டி பழுதடைந்து நின்றவர்களை கண்டுள்ளார். உடனடியாகத் தனது வாகனத்தில் ஏற்றி யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்குக் கொண்டு சென்றார். வைத்தியசாலைக்குச் செல்லும் வழியிலேயே வாகனத்தில் குழந்தை பிறந்தது. குறித்த நேரத்தில் இவரின் உதவி கிடைத்தமையால் தாயும் சேயும் பாதுகாக்கப் பட்டனர்.

தற்போது பொலநறுவைப் பகுதியில் கடமையாற்றிவரும் குறித்த காவலரின் மனிதநேய செயற்பாட்டை மதிப்பளிக்கும் வகையில் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரனின் அறிவுறுத்தலின் பிரகாரம் காவலர் வரவழைக்கப்பட்டு மதிப்பளிக்கப்பட்டார். (எ-8)

ஐ-ரோட் திட்டத்தின் கீழ் வடக்கில் தெரிவுசெய்யப்பட்ட

# வீதிகளின் விவரங்கள் அனுப்பி வைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 13

மீள்புனரமைப்புக்காக இறுதி நிலையில் தயார் செய்யப்பட்ட ஐரோட் விவரங்களை சம்பந்தப்பட்ட உள்ளூராட்சிசபைகளுக்கு கொழும்பு பத்தரமுல்லையில் உள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபை அனுப்பி வைத்துள்ளது.

கடந்த 2016ஆம் ஆண்டு ஜூன் 15இல் வடக்கு மாகாண சபைக்கும் - வீதி அபிவிருத்தி சபைக்கும் இடையில் மீள் சீரமைப்புக்காக தெரிவு செய்யப்பட்ட 'ஐ' றோட் தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானது. அதன்படி உள்ளூராட்சி மன்றங்களால் 226 வீதிகள் சீரமைப்புக்காக பெயர் குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்பட்டன.

அவற்றிலிருந்து தெரிவு செய்யப்பட்ட வீதிகளின் விவரங்களை சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தவிசாளர் என். ஆர். சூரியாராச்சி அனுப்பி வைத்துள்ளார்.

எனினும் வடக்கில் யாழ்ப்பாண மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட வீதிகளின் மீள் சீரமைப்பு வேலைகள் எப்போது ஆரம்ப மாகும் என தலைவரால் குறிப்பிடப்படவில்லை. (எ-50)

# யாழ்ப்பாண மாவட்டத்தின் காணி நடுவர் சபைக்கு தவிசாளர் ஒருவரை நியமிக்குக

## வடக்கு மாகாண ஆளுநரால் மத்தியஸ்த ஆணைக்குழுவின் தலைவருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம் மார்ச் 13

நீதி அமைச்சு - காணி அமைச்சு ஆகியவற்றின் இணைந்த திட்டத்தின்கீழ் யாழ்ப்பாண மாவட்ட காணி நடுவர் சபை உருவாக்கப்பட்ட போதும் தவிசாளர் இன்றி காணி நடுவர் சபை செயற்படுகின்றது.

எனவே சபைக்கு தவி சாளர் ஒருவரை நியமனம்செய்ய நடுவர் ஆணைக்குழுவின் தலைவர் முன்வரவேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே கடிதம் மூலம் கோரியுள்ளார்.

காணி நடுவர் சபை தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநர் குறிப்பிடு கையில், "ஆசிய பவுண்டேஷன் நிதிப்பங்களிப்பில் நீதி அமைச்சு - காணி அமைச்சு என்பன இணைந்த வகையில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு வின் பரிந்துரைக்கு இணங்க வடக்கில் யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சியிலும் காணி சம்பந்தமான சிறப்பு நடுவர் சபை ஸ்தாபிக்கப்பட்டு யாழ்ப்பாண மாவட்டத்துக்கான காணி நடுவர் சபை யாழ்ப்பாணம் கொட்டடி நமசி வாய வித்தியாலயத்தில் பிரதி சனிக்கிழமைகளில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறுகின்றது.

எனினும் இந்தச் சபையின் சிறப்பு செயற்பாட்டுக்குப் பொருத்தமான தவிசாளர் இதுவரை நியமனம் பெறவில்லை.

எனவே காணி நடுவர் சபைக்கு தவிசாளர் ஒருவரை மத்தியஸ்த ஆணைக்குழு தலைவர் - செயலாளர் இணைந்த வகையில் ஒருவரை நியமிக்க வேண்டும்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்ட காணி நடுவர் சபையையும் விரைவில் ஆரம்பித்து காணி சம்பந்தமான பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வைக் காண முன்வரவேண்டும்" என வடக்கு ஆளுநர் ரெஜினோல்ட் குரே கேட்டுள்ளார். (எ-50)

யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்ட ரூ.80 இலட்சம் மாயமான சம்பவம்

# கைது செய்யப்பட்ட நால்வரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம், மார்ச் 13

அநுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்ட அரச வங்கியொன்றின் 80 இலட்சம் ரூபா பணம் மாயமான சம்பவத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட வங்கி ஊழியர்கள் உட்பட நான்கு பேரை எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அநுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்ட அரச வங்கியொன்றின் 80இலட்சம் ரூபா பணம் வாகனமொன்றில் இரகசியமாக எடுத்துவரப்பட்டபோது காணாமல் போனது.

திருட்டுத் தொடர்பான சந்தேகத்தில் பணத்தை எடுத்து வந்த வங்கி உத்தியோகத்தர்கள் மூவரும் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கிய பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவருமாக நான்கு பேரை யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

இவர்களை எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

(எ-8)

வடக்கு திணைக்கள வெற்றிடங்களுக்கு

# பெரும்பான்மை சமூகத்தினரை நியமிப்பது கண்டிக்கத்தக்கது

சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் தலைவர் ஆதங்கம்

கிளிநொச்சி, மார்ச் 13

**கிளிநொச்சி மாவட்டத்தில் வேலையில்லாப் பிரச்சினை பெரிய பிரச்சினையாக காணப்படுகிறது. பெருமளவுக்கு இளம் சமூகம் வேலையில்லாப் பிரச்சினையால் அதிகளவு பாதிப்புக்களுக்கு முகம் கொடுத்து வருகின்ற நிலையில் கிளிநொச்சியின் பல திணைக்களங்களில் பெரும்பான்மை சமூகத்தின் இளைஞர் யுவதிகள் நியமிக்கப்பட்டு வருகின்றனர். இது கண்டனத்துக்கும் கவலைக்கும் உரிய விடயம் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்**

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் உள்ளதாவது:

இளம் சமூகத்தின் மத்தியில் என்றுமில்லாத அளவுக்கு வேலையில்லாப் பிரச்சினை அதிகரித்துக் காணப்படுகிறது. இதனால் பெரும்பாலானவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர். ஜி.சி.ஈ சாதாரண, உயர்தர கல்வித் தகை மையுடன் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் உட்பட ஏராளமானவர்கள் தொழிலின்றி விரக்தியில் வாழ்ந்து வருகின்றனர்.



இந்த நிலையில் கிளிநொச்சியில் உள்ள பல திணைக்களங்களில் சாதாரண வேலைவாய்ப்புக்களுக்கும் தென்னிலங்கை இளைஞர் யுவதிகள் நியமிக்கப்பட்டு வருவது கிளிநொச்சி மாவட்டத்தில் வேலைவாய்ப்பின்றிக் காணப்படுகின்ற முன்னாள் போராளிகள் உள்ளிட்ட இளம் சமூகத்தினர் மத்தியில் பெரும் அதிருப்தியையும், விரக்தியையும் ஏற்படுத்தியிருக்கிறது.

குறிப்பாக நல்லாட்சி அரசின் காலத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் புகையிரத திணைக்களம், வனவளத் திணைக்களம், மின்சார சபை, வனஜீவராசிகள் திணைக்களம், நில அளவைத் திணைக்களம், பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் வருகின்ற திணைக்களங்கள் எனப் பல திணைக்களங்களின் வெற்றிடங்கள் பெரும்பான்மையின இளைஞர்கள் யுவதிகளால் நிரப்பப்பட்டு வருகின்றன.

சாதாரண அரச தொழில் வாய்ப்புகளில் மாவட்டங்களில் காணப்படுகின்ற திணைக்களங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்கின்றபோது அந்தந்த மாவட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். மாவட்ட அடிப்படையிலான முன்னுரிமை தேசிய மற்றும் மாகாண மட்டங்களிலும் கடைப்பிடிக்கப்பட வேண்டும் இல்லையெனில் பின்தங்கிய மாவட்டங்கள் தொடர்ந்தும் பாதிக்கப்படுவதைத் தவிர்க்க முடியாது.

தற்போது அதிகாரத்தில் இருக்கின்ற தமிழ் மக்களின் பிரதிநிதிகளும், தமிழ் மக்களால் கொண்டுவரப்பட்ட இந்த அரசும் இது தொடர்பில் அக்கறையின்றி இருப்பதும் வேதனைக்குரியது.

பெரும்பாலான தமிழ் இளம் சமூகத்தினர் வேலைவாய்ப்பின்றி இருக்கின்ற போது தமிழ் மக்களின் பிரதிநிதிகள் இந்த முக்கிய விடயத்தில் கவனம் செலுத்தாமையும், தமிழ் பிரதேசங்களில் பெரும்பான்மையினத்தவர்கள் வேலைவாய்ப்புகளில் நிய மிக்கப்படுகின் போது அதற்கு எதிராக நடவடிக்கையில் இறங்காமையும் வருந்தத்துக்குரியது.

இது தொடர்பில் அதிகாரத்தில் இருக்கின்றவர்கள் எமது இளம் சமூகத்தினரின் நலன் கருதியும், இனத்தின் எதிர்கால பலமான இருப்பைக் கவனத்தில் எடுத்தும் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார் -என்றுள்ளது.

(எ)

சாவகச்சேரி மருத்துவமனைக்கு

# சட்ட மருத்துவ அதிகாரி நியமிக்கப்படவில்லை

## பலரும் இக்கட்டு நிலையில்

தென்மராட்சி, மார்ச் 13

சாவகச்சேரி மருத்துவமனையில் பணியாற்றிய சட்ட மருத்துவ அதிகாரி தென்னிலங்கைக்கு இடமாற்றம் பெற்றுச் செல்வதால் பிரதேச மக்கள் உடற்கூற்றுப் பரிசோதனைக்கும் சட்ட மருத்துவ அறிக்கைக்கும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரியை எதிர்பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சாவகச்சேரி ஆதார மருத்தவ மனையில் கடந்த இரண்டு வருடங்களாக சட்ட மருத்துவ அதிகாரியாக பணியாற்றிய மருத்துவர் உயர்கல்விக்காக கடந்த 27ஆம் திகதி கொழும்பு சென்றுள்ளார்.

இந்த நிலையில் திடீரென இந்த மருத்துவர் இடமாற்றம் பெற்றுச் சென்றதால் பிரதேச மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டது.

திடீர் சாவு தொடர்பான விசாரணை மேற்கொண்டு சடலங்களை உடனுக்குடன் ஒப்படைக்கவும், விபத்து தொடர்பான அறிக்கை வழங்கலுக்கும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

பிரதேசத்தில் திடீர் சாவு ஏற்படும் வேளைகளில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரிவரும் வரை காத்திருக்கவேண்டிய நிலையும் விபத்துக்கள் மற்றும் தாக்குதல் சம்பவங்களால் காயமடைந்து விடுதிகளில் அனுமதிக்கப்பட்டுவரும் நோயாளிகளுக்கு சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கை பெறவும் நோயாளர்கள் காத்திருக்க வேண்டிய நிலை காணப்படுகிறது.

'அங்கு சட்ட மருத்துவ அதிகாரிகளுக்குப் பற்றாக்குறை உள்ளது.

புதிய அணியினர் வெளியேறிய பின்னரே அங்கு வெற்றிடத்தை நிரப்ப முடியும். அதற்குச் சில மாதங்கள் காத்திருக்கவேண்டும்' என்று யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் க.நந்தகுமாரன் தெரிவித்தார்.

(எ-9)

சிறப்புத் தேவையுடையவர்களின் விவரங்களை இலத்திரனியல் மயப்படுத்துவதற்காக

# மாகாண திறைசேரியிலிருந்து நிதி பெறுவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம்.மார்ச்.13

வடக்கு மாகாணத்தில் உள்ள சிறப்புத் தேவைக்கு உரியவர்கள் மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் முழுமையான விவரங்களை சேகரித்து இலத்திரனியல் மயமாக்கும் வேலைத்திட்டத்துக்கு கொழும்பு அமைச்சின் நிதி வழங்கல் தாமதமாவதால் தற்காலிக ஏற்பாடாக மாகாண திறைசேரியில் இருந்து நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக 60ஆவது அமைச்சர் சபைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

சிறப்புத் தேவையுடையவர்கள் மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு உதவிகள், சேவைகள் அவசியம். அதற்கு அவர்கள் பற்றிய முழுமையான விடயம் அவசியம். மாவட்ட ரீதியாக எத்தனை பேர் உள்ளனர் என்ற விவரங்கள் இருந்தாலும் அவர்களுக்கு என்ன தேவை, எந்த வகையான சிகிச்சை முறைகள் அவசியம் போன்ற விடயங்கள் தரவுகளாக இல்லை.

அவர்களுக்கான சேவைகளை வழங்குவதற்கு முழுமையான விவரங்கள் தேவை. ஆகவே இந்தத் தரவுகள் சேகரிக்கும் பணிகள் ஆரம்பிக்கபட்டுள்ளன. இதற்கான நிதியை தேசிய ஒருமைக்கும் நல்லிணக்துக்குமான அமைச்சிடம் இருந்து பெறுவதற்கு திட்ட முன்மொழிவு ஏற்கனவே அனுப்பப்பட்டது. ஆனால் நிதியை விடுவிப்பதில் கால தாமதம் ஏற்பட்டுள்ளதால் தேவையின் அவசியத்தைக் கருத்திற் கொண்டு தற்காலிக ஏற்பாடாக மாகாண திறைசேரியில் இருந்து 8 மில்லியன் ரூபாவை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

(எ-7)

### சிறுதானியப் பயிர்கள் குளிர்மையடைந்தன

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நேற்று பரவலாகப் பெய்த மழையால் சிறுதானியப் பயிர்கள் குளிர்ச்சியடைந்தன.

கடந்த சில நாள்களாக நிலவிய கடும் வறட்சியின் தாக்கத்தால் சிறுதானிய பயிர்கள் பாதிக்கப்பட்டன. பெரும்போக நெற்செய்கையின் அறுவடையின் பின்னர் அனேகமான இடங்களில் உள்ளவயல்நிலங்களில் செய்கையாளர்கள் சிறுதானிய பயிர்ச்செய்கையில் ஈடுபட்டனர். குரக்கன்,எள்ளு,பயறு,உழுந்து, கௌப்பி போன்ற சிறுதானியங்களைவிதைத்து செய்கையாளர்கள் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

(எ-17)

# முதலைகளின் வாழ்விடமாக ஸ்கந்தபுரம் வீதிப்பாலம்

கிளிநொச்சி, மார்ச் 13

கிளிநொச்சி கனகபுரம் ஊடாக ஸ்கந்தபுரம் செல்லும் பாதையில் ஸ்கந்தபுரத்தை அண்மித்துள்ள பாலத்தில் முதலைகள் பெருந்தொகையாக வாழ்ந்து வருகின்றன. ஒவ்வொரு முதலையும் தலா 8 அடி நீளத்துக்கு மேற்பட்டதாகும். இவை நீண்டகாலமாக இந்தப் பாலத்திலேயே வாழ்ந்துவருகின்றன.

வெயில் அதிகமாக உள்ள காலங்களில் முதலைக்குட்டிகள் கரையோரமாக தமது பெற்றோருடன் பாலத்துக்கு வெளியில் வந்து உயரமான பகுதிகளில் படுத்துறங்கும் காட்சி வீதியால் செல்பவர்களை பெரிதும் கவர்ந்துள்ளது. வீதியால் செல்பவர்கள் பாலத்தின் மேல் நின்று முதலை



களின் செயற்பாடுகளை இரசித்து வருகின்றனர். இதுவரையான காலங்களில் இந்த முதலைகளால் தமக்கு ஆபத்து ஏற்பட்டதில்லை என அண்மித்த பகுதியில் வாழும் மக்கள் தெரித்தனர்.

இருப்பினும் முதலைகள் பாலத்தை அண்மித்த பகுதிகளில் பாலத்தை விட்டு வெளியில் சென்று வருவதைக் காணமுடிகின்றது.

பாலம் இருக்கும் இடத்தில் இருந்து மக்கள் வாழும் பிரதேசம் சற்றுத் தூரமாகவே காணப்படுகின்றது. எனினும் இந்தப் பாலத்தை பாதுகாப்பாக வைத்திருக்க நடவடிக்கை எடுத்தல் அவசியமாகும்.

(எ-72)



## இடமாற்றலை எதிர்த்து கூரை மீது போராட்டம்!

கொழும்பு, மார்ச் 13
இடமாற்றலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வட மத்திய மாகாண சுகாதார பணிப்பாளர் காரியாலயத்தின் கூரை மீது ஏறி இருவர் நேற்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.
வடமத்திய மாகாண சபை சுகாதார திணைக்களத்தின் 4 சாரதிகளை வேறு திணைக்களத்துக்கு இட மாற்றம் செய்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக் கப்பட்டது. இந்த இடமாற்றத்தை இரத்துச் செய்யும் வரை தாம் தொடர்ந்து ஆர்ப் பாட்டத்தில் ஈடுபடுவோம் என்று அவர்கள் தெரிவித்த னர். (ற-ரி5)

## ஜப்பான் சென்றடைந்தார் அரச தலைவர் மைத்திரி

ஜப்பான், மார்ச் 13
ஜப்பான் மற்றும் இலங் கைக்கு இடையிலான நீண் டகால இருதரப்பு உறவு களை பலப்படுத்தும் நோக் குடன் நேற்று அரச தலை வர் மைத்திரிபால சிறிசேன ஜப்பானுக்குச் சென்றுள் ளார். இந்தப் பயணத்தில் ஜப்பான் நாட்டின் மன்னர் அகிஹினோ பேரரசரையும் மிசிகோ மகா ராணியை யும் அவர் சந்திக்கவுள்ளார்.
மைத்திரிக்கும் ஜப்பான் தலைமை அமைச்சர் ஷின்சோ அபேக்கும் இடை யில் இருதரப்பு பேச்சு நடை பெறவுள்ளது. இரு நாடுக ளுக்கும் இடையிலான பொருளாதார, வர்த்தக மற் றும் கலாசார உறவுகளைப் பலப்படுத்துவது தொடர்பாக அதில் ஆராயப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.
ஐயிக்கா நிறுவனத்தின் தலைவர், ஜப்பான் வர்த்தக சங்கம் மற்றும் ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக சங்கம் உள்ளிட்ட நிறு வனங்களின் பிரதிநிதிகளையும், ஜ ப்பா னில் உள்ள இலங்கை பௌத்த நிலையத்தின் தலைமை நாயக தேரர் ஆகி யோரையும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சந் திக்கவுள்ளார்.
அயலுறவுத்துறை அமைச் சர் திலக் மாரப்பன, அமைச் சர் நிமல் சிறிபால டி சில்வா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் இந் தப்பயணத்தில் இணைந்து கொண்டுள்ளனர். (ற-ரி5)

## தொடருந்து விபத்தை தடுக்கப் புதிய திட்டம்

கொழும்பு, மார்ச் 13
நாட்டில் தொடருந்து விபத் துக்கள் நாளுக்கு நாள் அதி கரிப்பதால் அவற்றைத் தடுக்கும் வேலைத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள் ளது. அதன் ஆரம்ப நிகழ்ச் சித் திட்டம் நாவிந்த தொட ருந்துக் கடவைக்கருகில் நேற்று நடைபெற்றது.
தொடருந்து விபத்துக்க ளைக்குறைப்பதற்காக பொது மக்களுக்கான தெளி வூட்டல் மற்றும் பதாகை களைப் பொருத்துதல் ஆகிய நடவடிக்கைகள் செயற்படுத் தப்பட்டன. இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகு திக்குள் 35 பேர் தொடருந்து விபத்தில் உயிரிழந்துள்ள னர் எனத் தெரிவிக்கப்பட் டது. (ற-ரி5)

## உண்டியல் திருடியவர் பொலிஸாரால் கைது

மட்டக்களப்பு, மார்ச் 13
ஏறாவூர் கொம்மாந்துறை யில் கோயில் உண்டிய லைத் திருடிய இளைஞர் ஒருவர் நேற்றுக் கைது செய் யப்பட்டார்.
கொம்மாந்துறை 10ஆம் கட்டைத் தொடருந்துப் பாதையோடுள்ள புதருக்குள் திருடிய பணத்தைக் கணக் கிட்டுக் கொண்டிருந்த போதே இளைஞர் கைது செய்யப்பட்டார் என்று தெரி விக்கப்பட்டது. கைது செய்யப் பட்டவரிடம் இருந்து 7 ஆயி ரத்து 179 ரூபா பணம் கைப் பற்றப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. கைது செய் யப்பட்டவர் வெல்லாவெளி யைச் சேர்ந்த 18 வயதான இளைஞர் எனத்தெரிவிக் கப்பட்டது.
இந்தச் சம்பவம் தொடர் பான மேலதிக விசாரணை களைப் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ற-ரி5)



# பல்கலை. ஊழியர்களின் போராட்டம் தொடர்கிறது

### இன்று தீவிரப்படுத்தப்படும் என்று எச்சரிக்கை



யாழ்ப்பாணம், மார்ச் 13
வடக்கு மாகாணம் உட்பட நாடு முழுவதும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊழி யர்கள் உட்பட பல்கலைக்க ழக மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் பணி புரி யும் தற்காலிக மற்றும் ஒப் பந்தத்தின் அடிப்படையில் பணிபுரியும் பணியாளர்கள் தொடர் பணிப் புற க்கணிப் பில் ஈடுபட்டுள்ளனர்.
நேற்று 13 ஆவது நாளாக வும் அவர்களின் போராட் டம் நடைபெற்றது. இன்று முதல் பல்கலைக்கழகத்தை முற்றாக முடக்கும் போராட் டம் முன்னெடுக்கப்படும் என்று யாழ்ப்பாணப் பல்க லைக்கழக போதனை சார ஊழியர்கள் தெரிவித்தனர். மின் விநியோகம், நீர் விநி யோகத்தைத் துண்டித்து, கதவுகளை மூடிப் போராட் டம் முன்னெடுக்கப்படும் என்று தெரிவித்தனர்.
உயர்கல்வி மற்றும் நெடுஞ் சாலைகள் அமைச்சின் செயலாளர் மற்றும் பல்க லைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலை வரால் கையெழுத்திட்டு வழங்கப்பட்ட உடன்பாட் டுக்கு இசைவாக உரிய நட வடிக்கைகளை மேற்கொள் ளாமை, மற்றும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உயர் மட்ட பதவிகள் நிரப்ப ப்படுவ தற்கான எந்தவொரு நடவ டிக்கையும் எடுக்கப்ப டாமை, அந்தப் பதவிகள் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளில் காணப்படும் சீரற்ற தன் மையை நிவர்த்தி செய்யும் படி போதனைசாரா ஊழியர் களால் வழங்கப்பட்ட அழுத் தத்தை கவனத்திற் கொள் ளாமை ஆகியவற்றுக்கு எதி ர்ப்புத் தெரிவித்தே போராட் டம் நடத்தப்படுகின்றது.
அனைத்துப் பல்கலைக்கழ கங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 24 தொழிற்சங்கங்கள் ஒருங்கி ணைந்து இந்தத் தொடர் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெ டுக்கின்றன எனத் தெரிவிக் கப்பட்டது. (றரி5)



வவுனியா வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அலுவலக வளாகத்தில் உள்ள மரம் சரிந்து வீழ்ந்ததில் அலுவலகம் சேதத்துக்குள்ளானது. நேற்றுப் பெய்த காற்றுடன் கூடிய மழையால் மரம் பாறி வீழ்ந்தது. எவருக்கும் எவ்விதபாதிப்பும் ஏற்பட வில்லை. பாறி வீழ்ந்த மரத்தை அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்ன. (ற-ரி5)

## பேருந்துடன் மோதி கார் கடும் சேதம்

கொழும்பு, மார்ச் 13
கொழும்பு - கண்டி பிரதான வீதியில் காரொன்றும் தனியார் பேருந்தொன்றும் விபத்துக்குள்ளாகின. அதில் கார் பலத்த சேதமடைந்தது. எவருக்கும் காயம் ஏற்படவில்லை. இந்த விபத்து நேற்று நடந்தது. விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மாவனெல்ல பொலி ஸார் முன்னெடுத்து ள்ளனர். (ற-ரி5)

## ஏறாவூரில் இளைஞனின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு, மார்ச் 13
ஏறாவூர் பலாச்சோ லைக் கிராமத்திலுள்ள வீடொன்றிலிருந்து இளைஞன் ஒருவரின் சடலம் நேற்றுமுன் தினம் பொலிஸாரால் மீட்கப்பட்டது. பலாச் சோலை முதலாவது குறுக்கு வீதியைச் சேர்ந்த 21 வயதான இளைஞனின் சடலமே மீட்கப்பட்டது. அவரது வீட்டு அறையிலிருந்தே சடலமாக மீட்கப்பட்டார். உயிரிழப்புக்கான காரணம் தெரியாத நிலையில் விசாரணை கள் நடைபெறுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-ரி5)

## யானை தாக்கி மாணவன் காயம்

பதுளை, மார்ச் 13
பதுளை நிகபொத்தவில் பாடசாலை மாணவர் ஒருவர் யானைத்தாக்கு தலுக்கு இலக்காகியுள் ளார். இந்தச் சம்பவம் நேற்று நடந்தது. சம்பவத்தில் படுகாயம டைந்த மாணவர் கொஸ்லாந்த மருத்துவ மனையில் சேர்க்கப்பட் டுள்ளார் எனத் தெரிவிக் கப்பட்டது. குடும்பத்து டன் மகிழு ர்ந்தில் பயணித்தபோதே யானைத் தாக்குதலுக்கு இலக்கானார். (ற-ரி5)

# வன்முறைக்கு எதிரான ஆர்ப்பாட்டத்துக்கு வெகுஜன அமைப்புக்கள் பலவும் ஆதரவு

யாழ்ப்பாணம், மார்ச் 13
கண்டி வன்செயல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்ப்பாணத்தில் இன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட வுள்ளது.
யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலை யம் முன்பாக நடத்தப்படவுள்ள ஆர்ப் பாட்டத்துக்கு வெகுஜன அமைப்புக்கள் ஆதரவு தெரிவித்துள்ளன.
சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு இந்த ஆர்ப்பாட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது. சமூக மேம்பாட்டு இணையம், பெண் விடுதலைச் சிந் தனை அமைப்பு, புதிய ஜனநாயக இளை ஞர் முன்னணி ஆகிய வெகுஜன அமைப்பு க்கள் அதற்கு ஆதரவு தெரிவிதடுள்ளன.
தமிழ் முஸ்லிம் சிங்கள மக்களுக்கி டையிலான உறவை வலுப்படுத்தி, இனங்களுக்கிடையிலான ஒற்றுமை யைக் கட்டியெழுப்புவோம் என்ற கோசத்தை முன்வைத்து இடம்பெற வுள்ள இந்த அமைதிப் போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு பொது அமைப் புக்கள், அரசியல் கட்சிகள், வெகுஜன அமைப்புக்கள், சமூக செயற்பாட்டாளர் கள் கலந்து கொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ற-ரி5)



# சீனாவின் நிரந்தர அதிபராகிற

பீஜிங், மார்ச் 13
ஒருவர் இரண்டு தடவைக்கு மேல் அதிபராக இருக்க முடியாது என்ற சட்டத்தில் திருத்தம் செய்து, பதவிக் காலத்தில் எவ்வித வரையறையையும் இல்லாது செய்ய சீன நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.
சீன அதிபரின் பதவிக்காலம் 5 ஆண்டுகள். ஒருவர் இரண்டு தடவைக்கு மேல் பதவி வகிக்க முடியாது என்றுஇதுவரைஇருந்தது. அதாவது'ஒருவர்பத்தாண்டுகள்வரை'என்பதேசீனாவின் அடிப்படைவிதி. இந்த விதியில்தற்போதுமாற்றம்செய்யப்பட்டுள்ளது. இதன்படி ஒருவர் எத்தனை தடவைகளும் அதிபராகப் பொறுப்பு வகிக்கலாம்.
சீனாவின் அதிபராக 2013ஆம் ஆண்டு பொறுப்பேற்றார்ஜிஜின்பிங். 2016ஆம்ஆண்டுசீனாவின்மிகவும் சக்தியும் செல்வாக்கும் மிக்க தலைவராக ஜின் பிங் அறிவிக்கப்பட்டார்.
நடப்பு வருடத்தில் அவர் மீண்டும் அதிபராகத் தெரிவு செய்யப்பட்டார். எதிர்வரும் 2023ஆம் ஆண்டின் பின்னர்அவர்அந்தப்பதவியில்தொடரமுடியாதுஎன்று கருதப்பட்டநிலையில்இந்தத்திருத்தம்கொண்டுவரப்பட்டுள்ளது. சீனாவின்பொருளாதாரத்தைகட்டியெழுப்புகின்றமை, அமெரிக்கா என்னும் மிகப்பெரும்



# ஈரானில் வானூர்தி விபத்து

தெக்ரோன், மார்ச் 13
ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து துருக்கிக்குச் சென்ற வானூர்தியொன்று ஈரானில் வீழ்ந்து விபத்துக்கு உள்ளானதில் அதில் பயணித்த 11பேர் உயிரிழந்தனர்.
11பேர் குறித்த வானூர்தியில் பயணம் செய்தனர். ஈரானில் நிலவியகுழப்பமானகாலநிலையை அடுத்தேவானூர்திவீழ்ந்துவிபத்துக்குள்ளானது. அதில்பயணித்த அனைவரும் உயிரிழந்தனர். ஈரானில் கடந்த மாதம் இடம்பெற்றவானூர்திவிபத்தொன்றில் 66பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# மனிதர்களின் உறுப்பு மாற்றுக்காக ஜப்பானில் பிரத்தியேகப் பன்றிகள்

டோக்கியோ, மார்ச் 13
மனிதர்களின் உறுப்பு மாற்றுக்காக ஜப்பான் விஞ்ஞானிகள் பிரத்தியேகமாகப் பன்றிகளை உருவாக்கியுள்ளனர்.
உடலுறுப்பு மாற்று அறுவைச்சிகிச்சைகளுக்கான உறுப்புக்களைப் பெறுவதற்கு தற்போது கடும் தட்டுப்பாடு நிலவுகிறது. எனவே, பன்றிகளின் உடலில் இருந்து உறுப்புகள் எடுக்கப்பட்டு அவை மனிதர்களுக்குப் பொருத்தப்பட்டு வருகின்றன. இதுவரை சுமார் 200 அறுவைச் சிகிச்சைகள் இவ்வாறு மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது இத்தகைய அறுவைச் சிகிச்சைகளுக்காக பிரத்தியேகமாகப் பன்றிகளை உருவாக்க ஆரம்பித்துள்ளது ஜப்பான்.
உயர் பாதுகாப்பில் பன்றிகள் வைத்துப் பராமரிக்கப்படுகின்றன. இதன்மூலம் சுமார் 40 வீதமான நோய்த்தொற்றுக்களைக் குறைக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



வடகொரியாவுடன் இணக்கமாவதற்கான

# ட்ரம்ப்பின் முயற்சி ஆபத்தில் முடியும்

எச்சரிக்கிறார் ஹிலாரி

வொஷிங்டன், மார்ச் 13
வடகொரியாவுடன் இணக்கமாகச் செல்வதற்காக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எடுத்துவரும்முயற்சிகள்ஆபத்தில்முடியும்என்றுதெரிவித்தார்அமெரிக்க அதிபர் தேர்தலில் ட்ரம்ப்பை எதிர்த்துப் போட்டியிட்டவரான ஹிலாரி கிளிங்டன்.




வடகொரியாவுக்கும் தென்கொரியாவுக்கும் இடையே இணக்கம் ஏற்பட்டதைத்தொடர்ந்துவடகொரியாவுக்கும் அமெரிக்காவுக்கும்இடையேஇணக்கத்தைக் கொண்டுவருவதற்கான பேச்சுக்கள் தற்போது மும்முரமாக நடைபெற்று வருகின்றன.
அமெரிக்க அதிபர் ட்ரம்ப், வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் இருவரும் எதிர்வரும் மே மாதம் நேரில் சந்திக்கவும்ஏற்பாடுகள்தீவிரமாகமேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கு கடும் எதிர்ப்புத்தெரிவித்தார்ஹிலாரிகிளிங்டன். நெதர்லாந்தில்நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயேஅவர்இவ்வாறுதெரிவித்தார்.
"அமெரிக்க அயலுறவுத்துறையில் பணியாற்றிய மூத்த அதிகாரிகள் ட்ரம்ப் நிர்வாகத்தால் வெளியேற்றப்பட்டுள்ளனர். அவர்கள் இல்லாமல், அவர்களின் ஆலோசனைகளைப் புறக்கணித்தேட்ரம்ப்தற்போதுசெயற்பட்டு வருகிறார். இது பேராபத்தில் முடியும். அணுவாயுதங்களை வைத்து மிரட்டிவரும் வடகொரியாவுடன் அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வந்துவிடக்கூடாது" என ஹிலாரி மேலும்தெரிவித்தார். (ம)



# இந்தியாவில் காட்டுத் தீ: 9 பேர் சாவு

இந்தியாவின் தேனி மாவட்டத்தில் நேற்று அதிகாலை ஏற்பட்ட காட்டுத் தீயில் சிக்கி 9 பேர் உயிரிழந்தனர். தேனிமாவட்டம் குரங்கணி என்ற பகுதியிலேயே இந்த அசம்பாவிதம் ஏற்பட்டுள்ளது. மலையேற்றப் பயிற்சிக்காகச் சென்ற குழுவொன்று காட்டுத்தீயில் சிக்கிக் கொண்டது. 27 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். அவர்களில் 17 பேர் காயங்கள் இன்றியும், 10 பேர் காயங்களுடனும் மீட்கப்பட்டனர். காயமடைந்தவர்களில் 9 பேரின் நிலை கவலைக்கிடம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி திரேசம்மா
கனகம்மா சிக்மறிங்கம்
தோற்றம் 28.10.1924
மறைவு 13.03.2017

வையத்து வாழ்வாங்கு நாம் வாழ
வழிகாட்டி - ஒளிகாட்டிச் சென்ற
கலங்கரை விளக்கே அம்மா!

அமரத்துவத்தின் ஆண்டொன்று கடந்தாலும்
எம் ஆறாத்துயரும் உங்கள் அன்புருவமும்
உள்ளத்தில் நிரந்தரமாய் உறைந்திருக்கின்றது தாயே!

உங்கள் வாழ்க்கைப் பயணத்தில்
கல்வி - விளையாட்டு - சமூகப்பணிகளில்
தன்னிகரில்லாப் பெருமகனைக் கரம்பற்றி
இல்லறத்தின் நெறிகளை - வாழ்வின் வழிகளை
மனித விழுமியங்களை எமக்குள்ளும் விதைத்து
எம்மை முழுமையாக்கினீரே! நன்றி அம்மா!

எம் அன்புப் பெற்றோர் இறை ஒளியில், நிலை வாழ்வு பெற்று
இளைப்பாற இறைஞ்சுகின்றோம்

235, பாங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்

## கிறார் ஜி ஜின் பிங்

பொறுப்பேற்
பின்மிகவும்
க ஜின் பிங்

ாகத் தெரிவு
ஆண்டின்
யாதுஎன்று
ாண்டுவரப்
கட்டியெழுப்
கப்பெரும்

சவாலைதிறம்படச்சமாளிக்கின்றமை, சீனாவின்இரா ணுவத்தை வலுப்படுத்தியுள்ளமை ஆகிய விடயங்க ளில்ஜிஜின்பிங்மக்களினதும்கட்சியின்மேலிடத்தின தும்நல்லஅபிப்பிராயத்தைவென்றுள்ளார்என்றுசீன ஊடகங்கள்பாராட்டியுள்ளன. (ம)

## அமெரிக்காவில் ஹெலி விபத்து; இருவர் சாவு

வொஷிங்டன், மார்ச்13

அமெரிக்காவில்ரூஸ்வெல்ட்தீவில்உலங்குவானூர்தியொன்றுவீழ்ந்துவிபத்துக்குஉள்ளானதில் இருவர்உயிரிழந்தனர். நியூயோர்க்நகரில்இருந்துபுறப்பட்டுச்சென்றஉலங்குவானூர்தியேஅவ் வாறுவீழ்ந்து விபத்துக்கு உள்ளானது. தீவை ஒளிப்படம் எடுப்பதற்காக 6 ஒளிப்படக்கலைஞர்கள் உலங்குவானூர்தியில்பயணம்செய்தனர். விபத்தில்இருவர்உயிரிழந்தனர். உலங்குவானூர்தி யின் செலுத்துனரும் ஏனைய நால்வரும் காயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவ மனையில் சேர்க் கப்பட்டுள்ளனர். (ம)



...கான
...ற்சி
...ும்

திபர் ட்ரம்ப்
அமெரிக்க
ஷிங்டன்.



சந்திப்பி
வித்தார்.
றையில்
காரிகள்
யேற்றப்
லாமல்.
களைப்
துசெயற்
ாபத்தில்
ங்களை
ாரியாவு
வுக்கும்
ஹிலாரி
(ம)



## ாவு

ியில் சிக்கி
யே இந்த
வொன்று
வர்களில்
ாயமடைந்
து. (ம)





# பரிசுகள் பலவிதம்
# ஒவ்வொன்றும் ஒருவிதம்
# தெரிவுகள் பலவிதம்
# புதுவருடம் புதுவிதம்



**சம்பத் வங்கியில் சம்பத் டபள் S, Ladies 1st அல்லது சிறுவர் சேமிப்பு கணக்குகளில் சேமித்து சம்பத் புதுவருட பரிசுகளை விருப்பம்போல் தெரிவு செய்திடுங்கள். சம்பத் வங்கியில் அதிக அதிகமாய் சேமித்து எமது பங்காளர் ஒருவரிடமிருந்து உங்கள் மனங்கவர் பரிசுகளை விருப்பம்போல் தெரிவுசெய்திடுங்கள்.**

இச்சலுகை 2018 மார்ச் 1ம் திகதி முதல் செல்லுபடியாகும்.

*மேலே காண்பிக்கப்பட்டுள்ளவை மாதிரி உருவங்கள் மட்டுமே. உண்மையான பொருட்களை காட்சியறைகளில் காணலாம்.

| Rs. | Abans | DAMRO | SINGER Trusted Excellence |
|---|---|---|---|
| 5,000,000 | APPLE 8 PLUS தொலைபேசி+Cooler<br>IPAD + குளிர்சாதனப்பெட்டி<br>IPAD + குளிர்சாதனப்பெட்டி+Blender<br>LG 43" FHD LED தொலைக்காட்சி + Apple 6 தொலைபேசி+ரைஸ் குக்கர்(2.5L) | Damro 24,000 BTU Inverter Premium குளிரூட்டி * + Innovex 24" LED TV * + Preethi SPICE Mixer Grinder*<br>Innovex 55" 4KTV + Innovex 250L இன்வெட்டர் குளிர்சாதனப்பெட்டி + Innovex Vacuum Cleaner<br>Samsung LED TV + பிளாஸ்டிக் ரிலாக்ஸ் கதிரை 06 pcs<br>Aroma படுக்கையறை சாதனங்கள் | SINGER Home Security System + Singer குளிரூட்டி<br>Singer குளிரூட்டி + Huawei Nova 2i + Singer Smart குளிர்சாதனப்பெட்டி<br>Singer 55" 4K TV + SONY Portable Audio System |
| 2,000,000 | குளிர்சாதனப்பெட்டி + Convection Oven + Coconut Scraper+இலத்திரனியல் கேத்தல்<br>LG-32" SMART LED தொலைக்காட்சி + Coconut Scraper + மின்விசிறி<br>APPLE 6 தொலைபேசி + மின்விசிறி + Pressure குக்கர்<br>Acer மடிக்கணனி+Oven+Beater | Damro 9,000 BTU இன்வெட்டர் குளிரூட்டி<br>Nevada Wooden Dining set - 07 Pcs + Damro ரைஸ் குக்கர் 1.8L<br>Spiro sofa - 03 seater chaise + Panasonic Hand Mixer<br>Samsung 2 கதவு டிஜிட்டல் இன்வெட்டர் குளிர்சாதனப் பெட்டி + Damro ரைஸ் குக்கர் 1.8L | Singer Smart குளிர்சாதனப்பெட்டி+Welling Electric Oven<br>Singer Gas Burner & Oven + Singer Instant Hot Water Shower<br>Singer Geo குளிர்சாதனப்பெட்டி + Huawei Y3 Smart Phone<br>Singer 9000 BTU A/C + Singer இரட்டை அடுப்பு கேஸ் குக்கர் |
| 1,000,000 | Home Theatre System+ரைஸ் குக்கர் (1.5L)<br>இலத்திரனியல் கேத்தல் + K10 தொலைபேசி + Toaster<br>சலவை இயந்திரம் + கேஸ் குக்கர்<br>LG-24" LED தொலைக்காட்சி + கேஸ் குக்கர் | Panasonic 32" TV Sound Model<br>VENUS SOFA 3 + 1 + 1<br>Damro 180L ஒற்றைக்கதவு குளிர்சாதனப்பெட்டி + Innovex இலத்திரனியல் கேத்தல் 1.7L<br>Samsung MICROWAVE + Preethi SPICE Mixer Grinder + Innovex Hair Dryer | Tefal Pedestal மின் விசிறி + Singer Notebook DUO 2 In 1<br>Huawei Y7 + Singer Mixer Grinder + Antenna with Built In Booster<br>TCL LED TV + Singer ரைஸ் குக்கர்<br>Sisil Eco குளிர்சாதனப்பெட்டி + Sisil மேசை மின்விசிறி |
| 500,000 | Oven+Toaster<br>Air Fryer<br>K4 தொலைபேசி<br>Vacuum Cleaner | Innovex 24" LED தொலைக்காட்சி<br>Innovex Domestic தையல் இயந்திரம்<br>நூலக அலுமாரி<br>Samsung MICROWAVE + Panasonic Hand Mixer + பிளாஸ்டிக் அலுமாரி | Singer Mixer Grinder OPTIMA+Singer Solo Microwave Oven<br>Singer ரைஸ் குக்கர் + Welling Electric Oven + Singer Adjustable Fan<br>Singer புல் வெட்டி + Singer ரைஸ் குக்கர் +<br>Sisil Pedestal Fan + Singer Electric Oven |
| 250,000 | Blender<br>Electric Coconut Scraper | Innovex Vacuum Cleaner<br>Preethi SPICE Mixer Grinder<br>Highback கதிரை<br>Panasonic ரைஸ் குக்கர் 3.2L | Singer இலத்திரனியல் ஜக் கேத்தல் + Regnis Electric Coconut Scraper<br>Singer Blender + Singer ரைஸ் குக்கர் + Singer Toaster<br>KDK மின் விசிறி + Singer Toaster<br>Singer Adjustable Fan + Singer ரைஸ் குக்கர் |
| 100,000 | ரைஸ் குக்கர்(1.8L)<br>இலத்திரனியல் கேத்தல்<br>Beater | Panasonic Hand Mixer<br>Innovex Hand Blender<br>Damro ரைஸ் குக்கர் 1.8L<br>Damro இலத்திரனியல் கேத்தல் 1.7L | Singer Dry Iron + Singer Professional Hair Dryer<br>ஒற்றை அடுப்பு கேஸ் குக்கர் + Singer Dry Iron<br>Singer Waffles Maker<br>Singer ரைஸ் குக்கர் |
| 50,000 | மின் அழுத்தி<br>Toaster | Innovex Hair Dryer<br>Innovex இலத்திரனியல் கேத்தல் 1.7L | Singer இலத்திரனியல் ஜக் கேத்தல்<br>Prestige Frying Pan |

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

**சம்பத் வங்கியில் சம்பத் டபள் S, Ladies 1st அல்லது சிறுவர் சேமிப்பு கணக்குகளில் அதிகமாக சேமித்து இப்புதுவருடத்தை செழிப்பாக்கிடுங்கள்.**

0112 30 30 50 www.sampath.lk Sampath Bank Fitch Ratings A+(lka)

DentsuGrant

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சமூக ஊடகங்கள் மீதான கட்டுப்பாடு நல்லதல்ல

அம்பாறைமற்றும்கண்டியில்இடம்பெற்ற இனவன்முறைகளைத் தொடர்ந்து சமூக வலைத்தளங்களைக் கட்டுப்படுத்துவது குறித்த கதையாடல்கள் எழுந்துள்ளன. வழக்கம்போலவே அதிகாரவர்க்கம் இவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும்என்றுகூறுகின்றது. முகநூலைக் கட்டுப்படுத்துவது அவசியம் என்று அமைச்சர் மகிந்த அமரவீர கடைசியாகத் தெரிவித்திருக்கிறார்.

கண்டி மாவட்டம் திகனவில் முஸ்லிம்கள் மீதான தாக்குதல் தீவிரம் அடைந்ததைத் தொடர்ந்து இலங்கை அரசு சமூக ஊடகங்களான வட்ஸ்அப், வைபர், பேஸ்புக் என்பவற்றை ஏற்கனவே முடக்கி வைத்துள்ளது. மூன்று நாள்களுக்கு மட்டுமே இந்த முடக்கம் என்று அறிவிக்கப்பட்டிருந்தபோதும், அது இன்னமும் நீக்கப்படவில்லை. இன உறவுகளைப் பாதிக்கக்கூடிய உள்ளடக்கங்கள் பல முகப்புத்தகத்தில்இருப்பதால்அவற்றைநீக்கும்வரையில்அதன் மீதான தடையை நீடிக்கவேண்டியிருக்கிறது என்று அரசு விளக்கம் சொல்லியிருக்கிறது.

வன்முறை பரவுவதற்கும், வன்முறையாளர்கள் ஒருங்கிணைவதற்கும் சமூக ஊடகங்கள் இலகுவாக வழி வகுக்கின்றனஎன்பதும், வெறுப்பூட்டும்பேச்சுக்கள்இந்தச்சமூக ஊடகங்கள் ஊடாக இலகுவாகவும் விரைவாகவும் பரவலடைகின்றன என்பதுமே இவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும்என்கிற குரல்களுக்குக்காரணம். ஆனால், சமூக ஊடகங்களைக்கட்டுப்படுத்திவிட்டால்மட்டும்இனவன்முறைகளைநிறுத்திவிட முடியுமாஎன்பதும்மிகப்பெரிய கேள்வி. இத்தகைய சமூக ஊடகங்களோ, தொழில்நுட்ப வசதிகளோஇல்லாதகாலத்திலேயே இதைவிடப்பெரும் இனக் கலவரத்தைத் திட்டமிட்டு ஒழுங்கமைத்து தமிழர்களுக்கு எதிராக அரங்கேற்றினார்கள் என்பதை எவரும் மறந்துவிடக்கூடாது. எனவே சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதால், மட்டும்எல்லாவற்றையும்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட முடியும் என்று எண்ணுவது சுத்த மடமைத்தனம்.

இதே சமூக ஊடகங்கள்தான் பொலிஸாரின் குற்ற விசாரணைக்குப்பெரும்துணையாகஇருக்கின்றனஎன்பதையும் நினைவில்கொள்ளவேண்டும். புலனாய்வு அமைப்புகள் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களின் சமூக ஊடகக் கணக்குகள் மீது வைத்திருக்கும் கழுகுக் கண்களை கொஞ்சம் சிங்களவர்களின் கணக்குகள் மீதும் திருப்பினாலே இது போன்ற வன்முறைகளைத் தடுத்துவிட முடியும்.

கண்டியில் வன்முறை பரவும் என்பது அங்கிருந்த முஸ்லிம்களுக்கே தெரிந்திருந்தபோதும், பொலிஸாருக்கும் புலனாய்வாளர்களுக்கும் அது தெரியாமல் இருந்தது என்பதுஏமாற்றும்வேலை. புலனாய்வாளர்கள்சரியாகச்செயற்பட்டு சூத்திரதாரிகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்திருந்தால், திகன வன்முறையை முற்றாகத் தடுத்திருக்க முடியும். அதனைச் செய்யாமல் விட்டுவிட்டு சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று அரசு முயற்சிப்பது அடக்குமுறைகளுக்குஎதிரானஎல்லாக்குரல்களையும் நசுக்கிவிடும் முயற்சி. குறிப்பாக அரசுக்கு எதிரான கருத்துக்களையும் கட்டுப்படுத்தும் எத்தனம்.

சமூக ஊடகங்களில் உள்ளவர்கள் அனைவரும் சரியாகச் செயற்படுகின்றனர், அவை திறம்பட இயங்குகின்றன என்றுசொல்வதற்கில்லை. தனிநபர்அவதூறுகளைப்பரப்பவும், சமூகத்தைத் தவறாக வழிநடத்தக் கூடியவர்களும் அதில் செயற்படுகின்றார்கள் என்பதை மறுப்பதற்கும் இல்லை. அந்தச்சிலதீயசக்திகளுக்காகஒட்டுமொத்தசமூக ஊடகங்களையும்கட்டுப்படுத்துவது ஏற்றுக்கொள்ளமுடியாது.

இணைய வழிக் குற்றங்களுக்கான தனிப் பிரிவோடு சேர்த்து சமூக ஊடகங்களின் செயற்பாட்டாளர்களையும் கண்காணித்து நிலமையைக் கட்டுக்குள் வைத்திருக்கும் பொறிமுறையைஉருவாக்குவதுபற்றித்தான்அரசுசிந்திக்க வேண்டுமே தவிர, சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்துவது பற்றியல்ல. முகநூலுக்கு தற்போது விதிக்கப்பட்டுள்ள தடையையும் விரைந்து விலக்க வேண்டும் அரசு.

புண் இருக்கிறது என்பதற்காகக் கால்களை, விரல்களை வெட்டி எறிந்துவிடுவதற்கு ஒப்பானது அது. அரசு அதனை ஒருபோதும் செய்யக்கூடாது.

# வேற்றுமையிலும் ஒற்றுமை காண்பதே சிறப்பு

அன்ரனிபீற்றர்

ஒரு இனக் குழுமம் என்று இனம் காணப்படுவதற்கு, மதத்தை விட மொழியே முக்கிய காரணியாக இருக்கின்றது. இதற்கு, எமது நாட்டையே உதாரணப்படுத்தமுடியும். பேரினவாதிகளாக இருந்தாலும், சிறு பான்மையினராக இருந்தாலும் மொழிசார்ந்தே, அண்மைக்காலம் வரைபிரச்சினைகள்கையாளப்படுவதைசகலரும் அறிவர். இருந்தபோதிலும், பெரும்பான்மைஇனத்தவர்கள், மத வேறுபாடுகள் தம் மத்தியில் இருந்த போதிலும், நாட்டின் ஒட்டு மொத்த முன்னேற்றத்துக்கு, மொழிரீதியிலான அல்லது ஒற்றுமையின் மூலமாகவே பங்களிப்பு வருவதையும் நாமறிவோம்.

### சிறுபான்மையினரின் ஒற்றுமை

ஆரம்பகாலங்களில்மதரீதியாகவேறுபட்டு, மொழிரீதியாக ஒன்று பட்டிருந்த இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற, வடக்குகிழக்குமற்றும்மலையகப்பிரதேசங்களிலே மொழிரீதியான, தமிழ் பேசும் மக்கள் என்ற ஒரு பற்றுணர்வும், சகோதர உறவும் பேணப்பட்டு, அண்மைக்காலம்வரை அந்த உணர்வுகள் குருதிரீதியிலான உறவுக்கு சமனானதாக மதிக்கப்பட்டு வந்தன. ஒரு இடத்தில் துன்பமென்றால், மற்ற இடங்களில் எல்லாம் அதன் வலி உணரப்பட்டது. அத்தோடு, கண்டனங்களும்எதிர்ப்புக்களும்தெரிவிக்கப்பட்டு, சிறுபான்மை இனக் குழுமத்தின் ஒற்றுமையைவலியுறுத்துவதாகஅவைஅமைந்ததை எவரும் இலகுவில் மறந்து விடமுடியாது. இதனாலே, தமிழ்மண் சூறையாடப்படும் நிலை, தமிழர் புறம் ஒதுக்கப்படும் நிலைகள் குறைவாகவே இருந்ததையும் புரிந்து கொள்ளமுடியும்.

### 1972 மற்றும் 1978ஆம் ஆண்டின் அரசமைப்புத் திட்டங்கள்

இலங்கையில்1972ஆம்ஆண்டில் ஏற்பட்ட குடியரசு அரசமைப்பு மாற்றம் மற்றும், 1978ஆம் ஆண்டில்ஏற்பட்டஇலங்கைசோஷலிசஅரசதலைவர்ஆட்சிமுறைஅரசமைப்புத்திட்டம்என்பவற்றின் விளைவாக, சிறுபான்மையினருக்கானபலபாதுகாப்பு அனுகூலங்கள் நீக்கப்பட்டு, பேரினவாத ஆட்சியில்இனங்களுக்கிடையேபிரிவினைகளை ஏற்படுத்தும், பிரதேச அபிவிருத்தி, பிரதேச வாதம் என்ற விதை தூவப்பட்டதினாலேயே, சிறுபான்மையினரின்ஒற்றுமையிலே, சுயவாதநம்பிக்கைகள் ஏற்பட்டு, காகத்தின் கூட்டிலே பிறந்து குயில்களாகப் பிரிந்து வாழும் மனப்போக்குகள் உணரப்பட்டன; அல்லது ஏற்படுத்தப்பட்டன. எம்மை மற்றவர் கட்டுப்படுத்துவதை எவரும் விரும்பாத போக்கு, அரசியல் வாக்குறுதிகள், சுய கௌரவப் பொறுப்புக்கள், சிறுபான்மைக்குள் பெரும்பான்மை ஆதிக்க முரண்பாடுகள் என்பவை இதற்குத்தூபமிட்டன. ஒற்றுமையில்வேற்றுமைகளை ஏற்படுத்தி, ஓரினமே பிரதேச வேறுபாடுகளால் பிரிந்துவாழும்தோற்றப்பாடுகளைஏற்படுத்திவிட்டன. இந்த நிலையில் இவற்றின் பலாபலன்களை நாங்களே நாள்தோறும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். எமது மண் எமக்கென்று இருந்த நிலை மாறி, எமது தொழில்களை எமது இடங்களில் மேற்கொள்ள எமக்கும் இடம் கிடைக்குமா என்று போராடும் சூழ்நிலைக்குள்ளே தள்ளப்பட்டுள்ளோம். வலுவானநிலையில்நின்று, வலுவற்ற நிலைக்கு வந்த பின்னர், எமது வாழ்வு நிலைகள், மேலும் பல்வித நெருக்குதல்களுக்கு உள்ளானவையாகவே தொடர்கின்றன.

### மாகாண சபைகளது நிர்வாகம் சீராக அமைதல்

எம்மைநாமேஆளுகின்றஅதிகாரத்தை, இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் விளைவாக மாகாணசபை ஆளுகைமுறைமையை வடக்கு கிழக்குப் பகுதிகளிலே ஏற்றுக்கொள்ளாத போதும், ஆயுதக் கெடுபிடிகள்மூலம்கொண்டுவரப்பட்டு, தற்பொழுது வடக்குக்கு, கிழக்குக்குஎன்றுதனித்தனியானமாகாண சபைகள், தேர்தல்கள்மூலமாகநிர்வகிக்கும்முறைமையின் கீழ், செயற்பட்டுக் கொண்டு இருக்கின்றன. இங்கும் பிரிவினைகள் விதைக்கப்பட்டு ஆளும் கட்சிக்கிடையிலும், எதிர்க்கட்சிக் கிடையிலும்பலபிளவுகள்ஏற்பட்டு, வலுவிழந்து, எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க பயனேதும் ஏற்படாத, ஒற்றுமையிலே வேற்றுமையுள்ள, சுய மதிப்பு உயர்வுகளை நோக்கியதாகவே, மாகாண ஆட்சி நகர்ந்து கொண்டிருக்கின்றது. கட்சிகள், கொள்கைகள், இலட்சியங்கள் ஒருபுறம் இருக்க, கிடைத்த சந்தர்ப்பத்தை முறையாகப் பயன்படுத்தி, உள்ளதை உயர்வாகப் பயன்நோக்கி, அனைவரும் பங்குகொள்ளும்வகையில்திட்டங்களை முன்னெடுக்க புரிந்துணர்வோடு ஒன்றிணையும் போது தாக்குதல்களை விட, தாக்குதல்கள் வளர வாய்ப்புக்கள் இருக்கின்றன. குற்றங்கண்டு குறை பிடித்துக் கொண்டே இருக்காமல், மாற்றுவழிகளை முன்வைத்து மாற்றங்களை ஏற்படுத்த முனைவதையே மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் கலப்புமுறை மாற்றத்தால் பெரும்பான்மையான பிரதிநிதிகளைச்சபைகளுக்குள் உள்வாங்கியுள்ளன. இதனாலே பேரினவாதக் கட்சிகளுக்குள்ளே, பலவற்றில் தனித்து ஆட்சி நிர்வாகத்தை அமைக்கமுடியாமல் கூட்டுச் சேர வேண்டியசூழ்நிலைகள் உருவாகிஇருக்கின்றன.

### தமிழர் பிரதேசங்களிலும் ஆட்சி அமைப்பதில் சவால்கள்

இதே சூழ்நிலை தமிழ்ப் பிரதேசங்களிலும் ஏற்பட்டுள்ளதை நாம் அறிவோம். பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்ற கட்சி தனித்து ஒரு சில இடங்களைத் தவிர்ந்த, ஏனைய வடக்கு, கிழக்குப் பகுதிகளில்கூட்டுச்சேர்ந்தேஆட்சிநிர்வாகத்தைகொண்டு நடத்தவேண்டியநிலைஏற்பட்டுள்ளது. கட்சிகளுக்கிடையேயும் போட்டித்தன்மை நிலவுவதால், ஒருமைப்பாட்டுக்கு வரமுடியாத நிலையே தொடர்ந்து கொண்டிருக்கின்றது. வென்றுவிட்டோம்; தெரிவு செய்யப்பட்டுவிட்டோம்; இன்னும்கட்சிகள் என்று பிரிந்து நிற்காது, ஏதோ ஒருவகையில் அதிகூடிய ஆசனங்களைப்பெற்றவர்களுக்கு ஆட்சி அமைப்பதிலே ஏனைய கட்சிகள் தனித்தோ, சேர்ந்தோ ஆதரவுதெரிவித்து, மக்கள்நலனை அனைவரும் கருத்தில் கொண்டவர்களாக, நன்மைகளை ஆதரித்தும், தீமைகளைஎதிர்த்தும்எமதுமாநகர, நகர, பிரதேசசபைகளின் முன்னேற்றமான செயற்பாடுகளுக்கு, புரிந்துணர்வோடு ஒத்துழைக்க முன்வாருங்கள்.

'வாய்ப்பேச்சைவிட, செயல்களேபேசும்' என்பதற்கிணங்க, செயல்கள்மூலம்பேசுங்கள். பேராண்மை ஆதிக்கம் எமக்குப் பின்னடைவேயே தரும். வருவாயை அதிகரிக்கும் முறையான வரிகளை, உரியவர்களிடமிருந்து உரிய காலத்துள் பெற்று, ஒழுங்கு முறைகளை நடைமுறைப்படுத்த உறுதியெடுங்கள். அழுக்குகளும், நோய்களும் இல்லா தொழிக்கப்பட உங்கள் வட்டாரங்களின் கண்காணிப்பாளர்களாக, மக்கள் உங்களைத் தெரிவு செய்துள்ளார்கள் என்பதை, மனக்கண் முன் கொண்டுவிழிப்புணர்வோடுசேவையாற்றுங்கள். ஆக, இவைகளைமுன்னெடுக்க வேண்டுமானால், வேற்றுமையிலும் ஒற்றுமைபேணுவதன் மூலமே, செயலுருவம் கொடுக்க முடியும். என்ன முன்னேற்றங்களை ஏற்படுத்துவோம் என்று மக்களுக்குஉங்கள்திட்டங்களைமுன்வைத்தீர்களோ, எதிரும் புதிருமென்றாலும், ஏணியும் ஆணியும் போல, ஏறிச் செல்லவும் இணைத்த திட்டங்களை முன்னெடுக்கவும் ஒத்துழைத்துச் செயற்பட முன்வாருங்கள். பேரினவாதத்தின் பிழையான முன்னெடுப்புகளை, மக்கள் பிரதிநிதிகள் என்ற உணர்வோடு, எதிர்த்துக்குரல்கொடுங்கள். பிளவுகளுக்கு இடம் கொடுத்தால் நசுக்கப்படுவது நாம் எல்லோருமே. மண்ணின் நலன், மக்களின் நலன் இவற்றை மனங்கொண்டு, புதிய பணிகளைப் பொறுப்பேற்று நல்லது புரிந்திட வாருங்கள் நற்பயன் காண.

# முடிவின்றி தொடரும் வவுனியா பேருந்து நிலைய விவகாரம்



மு.பாலசிங்கம்

எமது நாட்டின் உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தல் நடைபெற்று, முடிவுகள் வெளியாகி, ஆட்சிஅமைப்பதுதொடர்பாககட்சிகள்தீவிரமாகஆலோசித்துவரும்இன்றையநிலையில், வவுனியா நகர சபையில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புமுன்னிலைபெற்றுத் திகழ்வதும், சகலரும் அறிந்ததொன்றே. இந்த நிலையில் நகர சபையின் நிர்வாகப் பிரதேசத்தில் இயங்கி வந்த பழைய பஸ் நிலையத்தைஇடமாற்றம்செய்தமையால் ஏற்பட்டசிக்கல்தொடர்பாகஆராய்ந்துபார்ப்பது பொருத்தமானதாக இருக்கும்.

**காலத்தின் தேவை கருதி விரிவுபடுத்தப்பட்ட புதிய பேருந்து நிலையம்**

வவுனியா மாவட்டத்தின் முதலாவது திட்டமிடப்பட்டபுதியபேருந்துநிலையம்,மூன்று ஏக்கர் நிலப்பரப்பில், 195 மில்லியன் ரூபா நிதியீட்டத்தில், வவுனியா விவசாயப் பண்ணைக்கும் ஏ9 வீதிக்கும் அண்மையாக நகரில் இருந்து ஒரு கி.மீற்றர் தூரத்தில் அமைக்கப்பட்டு ஒரு ஆண்டாகிறது. ஒரே நேரத்தில்34 பஸ்கள் நிறுத்தக்கூடியதும் உள்ளூர் மற்றும் மாவட்ட, மாகாணங்களுக்கிடையிலான சுமார் 100 பஸ் சேவைகளை நடாத்தக் கூடியதுமாக அந்தப் புதிய பேருந்துநிலையம்கடந்தவருடம்ஜனவரி மாதம்17ஆம்திகதியன்றுதிறந்துவைக்கப்பட்டது. சம்பிரதாயபூர்வமாக அமைச்சர்கள், அரசியல் பிரமுகர்கள், அரச அதிகாரிகள்முன்னிலையில் திறந்துவைக்கப்பட்ட புதிய பேருந்து நிலையம் அன்றைய தினமேதற்காலிகமாகமூடப்படவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருந்தது.

அதேவேளை குறித்த பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு எட்டப்படுவதற்கான அறிகுறிகள் எதனையும் இன்றுவரை காண முடியவில்லை. குறித்த பேருந்து நிலையத்தை இடமாற்றியதால் நலன்களை அல்லது பயன்களை இலாபங்களைப் பெற்றவர்கள் யார்?. பொதுமக்களா? அல்லது தனியார் பஸ் உரிமையாளர்களா? இலங்கைப்போக்குவரத்துச்சபையினரா? அல்லது வியாபாரிகளா? அல்லது அதன் அயற்புறத்தில் வாழ்கின்ற குடியிருப்பாளர்களா? அல்லதுபாடசாலைகளுக்கு பஸ்சில் போய்வருகின்ற பாடசாலை மர்ணவர்களா? என்பவை போன்ற கேள்விகளுக்கானதிருப்திகரமான பதில் இதுவரை கிடைத்ததில்லை.

**பஸ் நிலையம் இடமாற்றப்பட்டதால் பயணிகளும் பொதுமக்களும் எதிர்நோக்கும் பலதரப்பட்ட சிரமங்கள்**

பஸ் நிலையத்தை இடம்மாற்றியதால் பொதுமக்கள் எதிர்நோக்கியுள்ள அல்லது அன்றாடம் அனுபவிக்கும் சொல்லொணாத்துன்பதுயரங்களைக்கண்டுகொள்வார் எவருமே இல்லை என்றே சொல்ல வேண்டும். பொது மக்கள் இவ்விடத் தெரிவினை பொருத்தமற்றதாகவே பார்க்கின்றார்கள். பொதுமக்கள் கூடுமிடங்கள், பேருந்து நிலையம் என்பவற்றில் புதிய நிலைய இடமாற்றத்திற்கு எதிராக காரசாரமாக விவாதம் இடம்பெறுவதையும், பலதரப்பட்ட கருத்துப் பரிமாற்றங்கள், விமர்சனங்கள்என்பவற்றைமேற்கொள்வதையும் அன்றாடம் காணக்கூடியதாக உள்ளது.

பழைய இடத்திலிருந்து பேருந்து நிலையத்தை இடம் மாற்றுவதில் அரச, தனியார் பேருந்துசேவையில்ஈடுபடுபவர்கள்மத்தியில்உடன்பாடோவிருப்பமோஏற்பட்டிருக்கவில்லை. ஆகையினால் இடம் மாற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், பல்வேறு காரணங்களைக் காட்டியும் பல பிரமுகர்களுக்கு விபரமான கடிதம் ஒன்றை கடந்த காலங்களில் தனியார் துறையினர் அனுப்பியிருந்ததை எவரும் மறந்திருக்க முடியாது. பேருந்துநிலையத்தைஇடம்மாற்றுவதுதொடர்பாக, அரசதனியாருக்கிடையே கருத்தொற்றுமை இல்லாமையினால், காலத்திற்குக்காலம் முரண்பாடுகளும் குழப்பமான நிலைமைகளும், அதன் காரணமாக இரண்டு தரப்பினரும் பொது மக்களது நலன்களைப் புறந்தள்ளி மாறி மாறி பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டமை கடந்த கால நிகழ்வுகளாகும்.

வவுனியா பஸ் நிலைய விவகாரத்தால் இ.போ.சபையினர்மேற்கொள்ளும்பணிப்புறக்கணிப்புகள்வடமாகாணத்தில்உள்ள எழு டிப்போக்களும் தழுவியதாக கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டதால், மாகாண மட்டத்தில் அவை ஏற்படுத்திய பாதிப்புக்களையும் நாம் மனதில் கொள்ள வேண்டும். பஸ்கள் சேவையில் ஈடுபடாத நிலையில்அவர்களைச்சமாதானப்படுத்தி சமரசம் செய்வதற்காக அரச அதிகாரிகள் மக்கள் பிரதி நிதிகளை உள்ளடக்கிய கலந்துரையாடல்கள், கூட்டங்கள் இருதரப்பினருடனும் கடந்த காலங்களில் நடைபெற்றுள்ளன. இதில் எடுக்கப்பட்ட முடிவுகள் பொதுமக்களின் அன்றாடப் போக்குவரத்துத் தொடர்பான தேவைகள் , வசதிகள் மற்றும் அவர்கள் எதிர்கொள்ளக்கூடிய அசௌகரியங்களைக் கருத்தில் கொண்டதாக இருக்கவில்லை.

வவுனியா நகர மையம் அல்லது பழைய பஸ்நிலையத்தைச் சுற்றியுள்ள பிரதேசம் பொதுமக்களுக்சேவைவழங்குகின்றஅல்லது பொதுமக்கள் நலன் பெறுகின்ற நிறுவனங்கள் பலதும் செறிந்து செயற்பட்டு வருகின்றன. இவற்றில் பல ஆயிரக்கணக்கானவர்கள் பணியாற்றி வருகின்றனர். இவர்கள் அனைவருக்கும் இலகுவாகப் பயணம் பண்ணுவதற்கு பொருத்தமான இடம் வவுனியா நகரமும் பழைய பஸ் தரிப்புநிலையம் மட்டுமேஎன்பதேயதார்த்தமாகும்.

**பஸ் நிலையம் இடமாற்றப்பட்டதால் நகர சபையின் வருமானத்திலும் பாதிப்பு**

அத்துடன் பழைய பஸ் நிலையத்தைச் சுற்றிவவுனியாநகரசபைக்குவருடாந்தம் வரியாகவும், மாதாந்தம்வாடகையாகவும் 130க்கும் மேற்பட்ட விற்பனை நிலையங்கள் பெருந் தொகைப் பணத்தை செலுத்தி வருகின்றன. பேருந்து நிலையம் இடமாற்றப்பட்டமையால்குறித்தவிற்பனைநிலையங்களைச்சேர்ந்தஏனையபணியாளர்களும் பெரிதும் பாதிப்புக்கு உட்பட நேர்ந்துள்ளது. புகையிரதப் பயணிகள் அல்லது பழைய பஸ்நிலையத்தைச் சுற்றியிருக்கின்ற திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் சேவைகளைப் பெற வருபவர்கள் நிலையம் இடமாற்றப்பட்டதனால் மேலதிக பணம் செலுத்தி பயணித்தே தங்கள், தேவைகளைநிறைவுசெய்யும்நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே பயணிகளின் நீண்டகாலநலன்களைமுன்நிறுத்தி பஸ் நிலையம் தொடர்பான நிரந்தரமான முடிவை விரைவாகக் காண வேண்டிய பொறுப்புசம்பந்தப்பட்டவர்கள்அனைவர்க்கும் குறிப்பாக, தெரிவாகியுள்ள நகர சபை உறுப்பினர்களுக்கும் உண்டு. இரண்டு தரப்பினரையும் ஒரே வளாகத்தில் வைத்துச் சேவைகளை நடாத்துவதற்கான முடிவுகளை எடுப்பதைத்தவிர்ப்பது, முரண்பாடுகள் குழப்பங்கள் அற்ற பஸ் சேவைகள் தொடர்ந்து நடைபெறுவதற்கு உதவும்.

வெளி மாகாணங்களுக்கான சேவைகள் தவிர்ந்த அனைத்துச்சேவைகளில் ஈடுபடுகின்ற இ.போ.சபையினர் பழைய நிலையங்களுக்குள் வந்து செல்வதற்கும் தனியார்சேவையில்ஈடுபடுகின்றவர்கள்தங்களது பழைய இடங்களுக்குவந்துசெல்லும் வகையிலும் நடைமுறைகளைக் கொண்டுவருவது சகலருக்கும் ஆறுதலைதரக்கூடியதாக அமையலாம்.

> பஸ் நிலையத்தை இடம் மாற்றியதால் பொதுமக்கள் எதிர்நோக்கியுள்ள அல்லது அன்றாடம் அனுபவிக்கும் சொல்லொணாத் துன்ப துயரங்களைக் கண்டு கொள்வார் எவருமே இல்லை என்றே சொல்ல வேண்டும்.

## ஆசிரியருக்கான கடிதம்

### பயணிகளின் தலைவிதி மாறாதா?

தனியார் மினிபஸ் சேவையும், அரசபஸ் சேவையும் கீரியும் பாம்பும் போன்ற நிலையில் நடத்தப்படும் வரை அவற்றில் பயணிக்கின்ற பயணிகளின் நிலை ஆபத்தானதாகவே இருக்கும். சில தினங்களுக்கு முன்னர், யாழ்ப்பாணத்திலிருந்து மல்லாகம் நோக்கி மினிபஸ்ஸொன்றில் பயணித்துக்கொண்டிருந்தேன். மருதனார்மடத்தில்மினிபஸ்தரித்துநின்றபோதுஅரசபஸ்சொன்று அதை வேமாகக் கடந்து சென்றது. இதைக் கண்டதும் மினிபஸ் சாரதி வேகமாக அதைப் பின் தொடர்ந்தார். அரசபஸ் சுன்னாகம் வாழைக்குலைச் சந்தைக்குச் செல்கின்ற குறுகிய வீதியூடாகத் திரும்பி பஸ் நிலையம் செல்வதைக் கண்டதும், மினிபஸ் சாரதி தாம் அதனை முந்திக் கொண்டு பஸ்நிலையம்செல்லும்விதத்தில்மீன்சந்தைக்குச்செல்கின்றவீதியூடாகவேகமாகமினிபஸ்ஸைச் செலுத்தி சுன்னாகம் பஸ் நிலையத்தை சென்றடைந்தார்.

அதன் பின்னரும் போட்டி தொடர்ந்தது. மினிபஸ் சாரதி அரச பஸ்ஸை மோதாமல் இருப்பதற்காக மிகக் கடுமையாக அடிக்கடி 'பிரேக்' போட்டார். இதனால் பயணிகளில் சிலர் பஸ்ஸினுள் தூக்கி எறியப்பட்டனர். வயதான அம்மா ஒருவர் கீழே விழுந்து கிடந்தார். சக பயணிகளில் சிலர் அவரைத் தூக்கி ஆசனத்தில் அமரவைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இத்தகைய செயற்பாடுகள் நியாயமற்றவை. பணத்தையும் கொடுத்து துன்பத்தையும் அனுபவிக்க வேண்டியதுதான் எம்மவர்களது தலைவிதியா? இது மாறவே மாறாதா?

கா.மஞ்சுளாதேவி, மல்லாகம்.

### மனம் கொள்வார்களா?

அரசவேலைவாய்ப்பொன்றுக்கானஎழுத்துப்பரீட்சைக்காககொழும்பு செல்ல வேண்டியிருந்தது. இரவு பயணித்து, மறுநாள் பகல் பரீட்சைக்குத் தோற்றிய பின்னர் அன்று மாலையே திரும்பும் திட்டத்துடன் கொழும்புக்குச்சென்றஎனக்கு,ஒருபகல்பொழுதுபயன்படுத்துவதற்கான அறையொன்று வாடகைக்குத் தேவைப்பட்டது. வெள்ளவத்தையில் தற்காலிக பிரயாணிகளின் தங்குமிடமொன்றில் குளியலறை, கழிவறை வசதிகள் மிகத் தரம் குறைந்த நிலையிலிருந்ததொரு அறையை ஒரு பகல் வேளைக்கு மட்டும் ரூபா ஆயிரத்து முந்நூறு செலுத்திப் பெற்றுத் தங்கும் நிலை ஏற்பட்டது. பொது நிறுவனங்களோ பொதுமக்கள்நலனோன்புஅடிப்படையில்செயற்படும்அமைப்புக்களோ முன்வந்துஇத்தகையகுறுகியகாலத்தேவைஉடையஎம்மவர்களுக்கு ஓரளவு அடிப்படை வசதி வாய்ப்புக்களுடன் தலைநகர் கொழும்பில் தங்கிச் செல்ல சலுகை அடிப்படையில் வசதி ஏற்படுத்திக் கொடுக்க முயலக் கூடாதா?

ஆ.பரஞ்சோதி, யாழ்ப்பாணம்.



# குடாநாட்டில் தொடங்கியது

# வேகப் புறாக்களின் பந்தயம்

## பல நூற்றாண்டு பழமையான விளையாட்டு புத்துயிர்ப்பு

பபுகயா. பெயரே புரியாத மாதிரி இருந்தாலும் இது ஒரு சுத்தத் தமிழ்ப் பெயரின் சுருக்கம். பந்தயப் புறாக்கள் கழகம் யாழ்ப்பாணம் என்பதன் முதல் எழுத்துச் சுருக்கமே அந்தப் பெயர். யாழ்ப்பாணத்தில் இப்போதுதான் அறிமுகமாகியிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் இருந்து 13ஆம் நூற்றாண்டில் காணாமற்போய்விட்ட மன்னராட்சிக்குப் பின்னர் மீண்டும் புறாக்களை முன்னணி அரங்குக்குக் கொண்டு வரும் பணியை ஆரம்பித்திருக்கிறது பபுகயா. வேகமாகப் பறப்பதில் உலகப் புகழ்பெற்ற 'ஹோமர்' இனப் புறாக்களுக்கு இடையே பந்தயங்களை நடத்துவதன் மூலம் புறா வளர்ப்புக்குப் புத்துயிர் ஊட்டுவதற்கான முயற்சியில் இறங்கியிருக்கிறது இந்தக் கழகம்.

இந்த மாதத்தின் முதல் வாரத்தில் அது தனது முதலாவது பந்தயத்தை நடத்தி முடித்திருக்கிறது. யாழ்ப்பாணத்தில் உள்ள பல பகுதிகளில் இருந்தும் கலந்துகொண்ட பந்தயப் புறாக்களை 100 கிலோ மீற்றர் (வவுனியா நகர் வரையான வான் தூரம்) தொலைவுக்கு எடுத்துச் சென்று அங்கிருந்து அவற்றைத் திறந்து விட்டதும், யாழ்ப்பாணத்தில் உள்ள அவற்றின் கூடுகளைத் தேடி அவை வேகமாகப் பறந்து வருவதுதான் போட்டி. எந்தப் புறா குறுகிய நேரத்தில் அதிக தூரத்தைக் கடக்கிறதோ அதுவே அதிவேகமான புறாவாக வெற்றி பெறுகிறது.

"புறாப் பந்தயங்கள் உலகின் பல நாடுகளிலும் பல நூற்றாண்டுகளாக நடக்கின்றன. இரண்டாம் உலகப் போர் வரையில் போர்க்களங்களில் தகவல்களைக் காவிச் செல்லும் பணியில் புறாக்கள் ஈடுபடுத்தப்பட்டன. அதன் பின்னர் தபால் சேவையிலும் புறாக்கள் பயன்படுத்தப்பட்டன.

தொழில்நுட்பம் வளர வளர இந்தத் துறைகளில் இருந்து புறாக்கள் விலக்கப்பட்டன. அதன் பின்னர் வேகப் புறாப் பந்தயங்கள் மேற்கு நாடுகளில் புகழ் பெற ஆரம்பித்தன. இப்போது சீனா, இந்தியா, இந்தோனேசியா, தாய்லாந்து என்று பல ஆசிய நாடுகளிலும் இந்தப் பந்தயங்கள் நடக்கின்றன. பல நாடுகளிலும் புறாப் பந்தயங்கள் பல மில்லியன் டொலர் பரிசுப் பணம் குவியும் விளையாட்டு" என்கிறார் பபுகயாவைச் சேர்ந்தவரான அன்ரன்.

2012ஆம் ஆண்டிலிருந்து அன்ரன், ஹோமர் இனப் புறாக்களை வளர்த்து வருகிறார். பெல்ஜியம் நாட்டில் இருந்து தருவிக்கப்பட்ட, புறாக்களுடன் அவர் ஹோமர்களை வளர்க்க ஆரம்பித்தபோது, யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல இலங்கையிலும் வண்ணப் புறாக்களின் மீதே மோகம் அதிகமாக இருந்தது.

"ஆனால், ஒரு சில வருடங்களிலேயே நிலைமை மாறிவிட்டது. 'கண்டி ரேஸிங் பிஜின் கிளப்' ஆரம்பிக்கப்பட்டது. அவர்கள் புறாப் பந்தயங்களை நடத்தத் தொடங்கினார்கள். அதைத் தொடர்ந்து ஹோமர் இனப் புறாக்களை வளர்க்கும் ஆர்வம் சடுதியாக உயர்ந்தது.

இருந்தாலும் அதேயளவு வேகம் வடக்கில் இருப்பதாக இப்போதும் சொல்ல முடியாது. ஆனால், நிலைமை முன்னரிலும் பார்க்க முன்னேற்றகரமானது" என்கிறார் அன்ரன்.

யாழ்ப்பாணத்திலும் வடக்கின் ஏனைய சில மாவட்டங்களிலும் கடந்த சில வருடங்களாக பந்தயப் புறாக்களான 'ரேஸிங் ஹோமர்'களை வளர்ப்பவர்களின் எண்ணிக்கை பெருகி வருவதாகவும் அவர் கூறினார்.

"இதற்கு முன்னரும் யாழ்ப்பாணத்தில் நல்ல பரம்பரையைச் சேர்ந்த ஹோமர் புறாக்கள் வளர்க்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக புறாக்களை வளர்ப்பதிலும், இனம் பெருக்குவதிலும் ஆர்வம் காட்டியவரான மருத்துவ நிபுணர் கே. சுரேஸ்குமாரிடம் நல்ல புறாக்கள் இருந்திருக்கின்றன" என்றார் அன்ரன்.

புறா வளர்ப்பு மனதுக்கு அமைதியையும் மகிழ்ச்சியையும் தருவது. அதிலும் பல நூறு கிலோ மீற்றர்கள் தொலைவில் கொண்டு சென்று விடுகின்றபோதும் ஹோமர் புறாக்கள், எம்மைத் தேடி வருகின்றன என்கின்றபோது அவற்றின் மீதான அன்பே தனிதான் என்று சிலாகிக்கிறார்கள் பபுகயாவின் உறுப்பினர்கள்.

பபுகயா நடத்திய 100 கிலோ மீற்றர் வான் தூரப் பந்தயத்தில் (தரை வழியே இது சுமார் 140, 150 கிலோ மீற்றர் தூரம்) முதலாம் இடத்தைத் தட்டிச் சென்ற எம். அஜித்குமாரின் புறாக்கள் கொழும்பில் இருந்துகூட அவரது கூடுகளுக்குத் திரும்பி வந்துள்ளன.

புறாக்களை வளர்ப்பது தரித்திரம் என்று சிலர் தவறாகக் கூறுகின்றார்கள். பறவைகளின் மீது அன்பு வைப்பவர்கள் அவற்றுடன் அன்னியோன்னியமாகி விடுவார்கள், அதனைத் தவிர்க்கவேண்டும் என்பதற்காகவே பெரியோர்கள் அப்படிச் சொல்வது வழமை என்கிறார் என். கே.சர்மா. ஆலயக் குருக்களான இவரும் பந்தயப் புறாக்கள் மற்றும் வானில் நீண்ட நேரம் பறந்துகொண்டே இருக்கக்கூடிய புறாக்களை அதிகம் வளர்த்து வருகின்றார்.

புறாக்களைத் தரித்திரம் என்று கூறுவதற்கு அறிவியல் ரீதியான பின்னணிக் காரணமும் உண்டு என்று விளக்குகிறார் மருத்துவ நிபுணர் கே.சுரேஸ்குமார்.

"புறாக்களை வளர்த்து அவை பறந்து போய்விட்டால் தரித்திரம். எனவே அவற்றை வளர்க்கக்கூடாது என்று சொல்வார்கள். அதற்குக் காரணம் முன்னைய காலங்களில் விவசாயம்தான் முதன்மைத் தொழில். எனவே வீடுகளில் நெல் எப்போதும் இருக்கும். புறாக்களுக்கும் நெல்தான் உணவு. வீடுகளில் தங்கியிருக்கும் புறாக்கள் அங்கிருந்து பறந்து செல்கின்றன என்றால் அவற்றுக்கு அங்கு உணவு கிடைப்பதில்லை என்பதே பொருள். அதாவது வறட்சி காரணமாகவோ, வெள்ளம் காரணமாகவோ வேளாண்மை அழிந்து போகும்போது வீடுகளில் நெல் இருப்பு இல்லாமல் போகும்.

எனவே புறாக்களும் அங்கிருந்து உணவு கிடைக்கும் வேறு இடங்களுக்குச் சென்றுவிடும். நெல் இன்றி வறுமைக்குள் வீழும் அந்த நிலையை அப்பாவிப் புறாக்களின் மீது சுமத்திவிட்டதனால் புறாப் பறந்துபோனால் தரித்திரம் என்று சொல்லிவிட்டார்கள்" என்றார் மருத்துவர்.

பபுகயாவின் முதலாவது பந்தயத்தில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு யாழ். நகர் ரில்கோ சிற்றி ஹோட்டலில் நடைபெற்றது. அதில் மருத்துவர் சுரேஸ்குமாரே பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கி வைத்தார். குருநகரைச் சேர்ந்த எம்.அஜித்குமாரின் இரு புறாக்கள் ஒரு மணி 40 நிமிடங்களில் பந்தயத் தூரத்தைக் கடந்து முதல் பரிசைத் தட்டிச் சென்றன. சங்கானையைச் சேர்ந்தவரான ரி.நிதர்சனின் புறா மூன்றாம் இடத்தையும், வல்வெட்டித்துறை

(23ஆம் பக்கம் பார்க்க)




பந்தயத்தில் முதல் மற்றும் இரண்டாம் பரிசுகளைப் பெற்ற புறாக்களின் உரிமையாளர் எம்.அஜித்குமார் வெற்றிக் கிண்ணத்தை மருத்துவ நிபுணர் கே.சுரேஸ்குமாரிடம் இருந்து பெற்றுக்கொள்கிறார். பபுகயாவைச் சேர்ந்த என்.கே.சர்மாவும் உடன் இருக்கிறார்.



பந்தயத்தில் மூன்றாம் இடம்பெற்ற புறாவின் உரிமையாளர் ரி.நிதர்சன் பரிசைப் பெற்றுக்கொள்கிறார்.





# ES Printers

357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

021 492 7471
021 492 7472

esprintersjaffna@gmail.com

New Market, 1st Floor,
Chavakachcheri
021 492 7432



சகல நிறுவனங்களுக்குமான பட்டியலேடு (Bill Book) காபன் பிரதி மற்றும் காபன் பிரதி அற்ற, வர்ண மற்றும் கறுப்பு வெள்ளை நிறத்தில், விரும்பிய அளவுகளில் குறித்த நேரத்தில் குறைந்த விலையில் தரமாக செய்துதரப்படும்.

மக் பிரிண்ட் (MUG) 450/=








அனைத்தும் தனித்துவமான கணினி வடிவமைப்புடன்

Poster | Notice | Lable | Wedding Card | Bag Print | Award | Frame Item | Batch
Vehicle Brand | T-Shirt | Cap | ID Card | Key Tag | Book Mark | Pen Print
Book Printing | Woodent Print

2018ஆம் ஆண்டுக்கான பஞ்சாங்கம் உட்பட அனைத்து கலண்டர் வகைகளும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.



பனர் பிரிண்ட் (Banner), வியாபார மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கான பெயர் பலகைகள் (Name Board), மக் பிரிண்ட், ரீ-சேட், புத்தகங்கள், கையேடு (Handbills), நோட்டிஸ் (Notice) மற்றும் அனைத்து ஒவ்செற்,டிஜிற்றல் அச்சக வேலைகள்

digital printing

பனர் பிரிண்ட் (Banner)



# ஏழாம் ஆண்டு நினைவலைகளில்...



அமரர்

## மனோன்மணி அம்பலவாணர்


தோற்றம் 22.10.1938 மறைவு 28.02.2011

ஏழு ஆண்டுகள் சென்றதுவோ? ஏங்கி நிற்கின்றோம்
ஏதும் அறியாமல் உங்கள் அமுது இட்ட கை
அடங்கிவிட்டதுவோ! ஆறவில்லை....
எங்கள் மனம், எங்கு பார்த்தாலும் உங்கள்
நினைவலைகள் நிலா போல் குளிர்மையாக நீங்காமல்
எங்கள் மனதில் நிலைத்து நிற்கின்றது...

651/13, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

திரு.திருமதி
சுகுமாரன் நிதர்சினி
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 11 | 09 |
| 01 | 03 |
| 1950 | 2018 |

## முருகேசு சாந்தநிகேதன் (சாந்தி)

டச்சுவீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், கொக்குவில், நெதர்லான்டினை (Netherland) வசிப்பிடமாகவும்கொண்ட முருகேசு சாந்தநிகேதன் (சாந்தி) 09.03.2018 வெள்ளிக்கிழமை நெதர்லான்டில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - நாகலட்சுமி தம்பதிகளின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - அருளம்மா தம்பதிகளின் மருமகனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும், பரமேஸ்வரன், துரைராசசிங்கம், ஜெதாம்பிகை (பிரான்ஸ்), விஜயலட்சுமி, கேமச்சந்திரன் (ஒஸ்ரீர் - நெதர்லாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற முத்துலிங்கம் மற்றும் யோகலிங்கம் (சுவிஸ்), ராசலிங்கம் (குருணாகல்), காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், பஞ்சலிங்கம் மற்றும் பாஸ்கரன் (பிரான்ஸ்), கருணாகரன், சுவர்ணலட்சுமி, பரமேஸ்வரி தேவமாலா (நெதர்லாந்து) ஆகியோரின் அன்பு மைத்துனரும், பராசக்தி, மகிளரட்ணம், இந்திரா, ரதி ஆகியோரின் சகலனும், சாந்தசொரூபி (நோர்வே), கவிதா (லண்டன்), காலஞ்சென்ற சவிதா மற்றும் றூபன்(லண்டன்), விஜிதா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கேதுறங்கன், மோகனதாஸ், பிறேமானந்தன், சுமதி ஆகியோரின் அன்பு மாமனும், ஜெயசுபன், சாஜினி, கௌசிக், ஜெருசா, கனிபன், கஜிபன், சபிஜா, நவிதா ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.03.2018) புதன்கிழமை நெதர்லான்டில் நடைபெற்று பூதவுடல் நெதர்லான்டில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

No.15, அம்மன் வீதி,
கொக்குவில்கிழக்கு, கொக்குவில். (CS/14717)(11,17)

தகவல்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மனோசாந்தா கெங்காதரன்



உடுப்பிட்டியைப் . பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோசாந்தா கெங்காதரன் நேற்று (12.03.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இ.கெங்காதரனின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான Dr. கார்த்திகேசு அழகம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற கா. மனோறஞ்சன் மற்றும். கா. மனோஸ்சாந்தன் (UK) ஆகியோரின் அன்புச் சகோதரியும் வண்ணார்பண்ணை காலஞ்சென்றவர்களான R.இராசையா இரத்தினம்மா தம்பதியரின் அன்புமருமகளும் டக்ஷ்ணன், துஷிக்கா ஆகியோரின் அன்புமிக்க தாயாரும் அஜந்தினியின் அன்புமாமியும் வருணஜா, கேஷிகன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2018) செவ்வாய்க்கிழமை உடுப்பிட்டி சந்தை வீதியிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் வல்லை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன், மகள்

## திருமதி செல்லம்மா திருநாவுக்கரசு .
(கண்மணி)




ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி கிழக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கண்மணி என அன்பாக அழைக்கப்படும் திருமதி செல்லம்மா திருநாவுக்கரசு நேற்று (12.03.2018) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா திருநாவுக்கரசின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை சின்னத்தங்கம் தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா சின்னத் தங்கம் தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், கந்தையா, சின்னையா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஸ்ரீஸ்கந்தராஜா (ஓய்வு நிலை வங்கியாளர், இலங்கை வங்கி), திருமதி வசந்தா (கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்), ஸ்ரீகாந்தா (சைவவித்திய விருத்திச்சங்கம்), ஸ்ரீதரன் (நூலகம் சித்த மருத்துவத்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), சாந்தகுமாரி, ஸ்ரீசந்திரகுமார் (ஆசிரியர், யாழ். முத்துத்தம்பி மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத்தாயாரும் திருமதி வசந்தா (ஓய்வு நிலை நூலகர் யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்), இராமநாதன் (அதிபர், அரியாலை ஸ்ரீபாரதி வித்தியாலயம்), பாலராணி (அதிபர், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), ஜெகநாதன் (பனோரமா ஓடியோ, வீடியோ, கல்வியங்காடு), செல்வராணி, ரஞ்சினி ஆகியோரின் அன்பு மாமியும் ஜெயரூபினி, தர்மிகன், லக்சிகா, நிவேதனன், சிந்துஜா, சர்மிலன், அக்சிதி ஆகியோரின் அருமைப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2018) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் வெள்ளைப்பிள்ளையார் கோயிலடியிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்,
தி. ஸ்ரீஸ்கந்தராஜா (மகன்).

## சிவஸ்ரீ விஸ்வநாதசர்மா இராமமூர்த்திக் குருக்கள்



தோற்றம் 12.09.1946 மறைவு 12.03.2018

கீரிமலையைப் பிறப்பிடமாகவும் இளவாலையை வதிவிடமாகவும் கொண்ட சிவஸ்ரீ விஸ்வநாத சர்மா இராமமூர்த்திக் குருக்கள் நேற்று (12.03.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வநாதசர்மா - இராசலக்ஷ்மியம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இரத்தின சபாபதி ஐயர் - இராமலக்ஷ்மியம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், பராசக்தியம்மாவின் அன்புக் கணவரும், வரலஷ்மி, குகதாசேஸ்வரசர்மா, ஹம்சரூபவதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், இரத்தினதாசசர்மா, புஸ்பலதா, சக்திதரக் குருக்கள் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ரூபலக்ஸ்மன், ராமலக்ஸ்மன், அபிநயா, பிறேமன், சாஹித்தியசர்மா, ஸம்ருதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2018) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சேந்தாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சித்திரமேழிச்சந்தி, இளவாலை.

தகவல்:குடும்பத்தினர்.

(CS/14706)(11,17) 077 515 5398, 076 398 4671

2012ஆம் ஆண்டில் நடிகர் சசிகுமார், லட்சுமி மேனன் நடிப்பில் வெளிவந்து, வெற்றி பெற்ற படம் 'சுந்தரபாண்டியன்'. இந்தப் படத்தின் மூலம் எஸ்.ஆர்.பிரபாகரன் இயக்குநராக அறிமுகம் ஆனார். இதையடுத்து, 'இது கதிர்வேலன் காதல்', 'சத்ரியன்' உள்ளிட்ட படங்களை இயக்கினார். தற்போது அவர் சுந்தரபாண்டியன் 2 படத்தை இயக்கவுள்ளார் என்றும் இந்தப் படத்திலும் சசிகுமார் நடிக்கவுள்ளார் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.




# சுந்தரபாண்டியன் 2

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** யாரிடமும் நிதானித்து பேசுவது நல்லது. தொழில் வியாபாரம் வளர்ச்சிக்கு புதிய அணுகுமுறை உதவும். பணியாளர்கள் பணிச்சுமையால் அவதிப்படுவர்.

**இடபம்:** மனதில் குழப்பம் ஏற்பட்டு விலகும். நல்லோரின் ஆலோசனை நன்மை தரும். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணிகளை நிறைவேற்றுவது நல்லது.

**மிதுனம்:** நண்பரிடம் சொந்த விஷயம் பேசுவீர்கள். நண்பர் மூலம் தேவையான உதவி கிடைக்கும். உற்சாகமுடன் செயல்பட்டு தொழிலில் வளர்ச்சி இலக்கை அடைவீர்கள்.

**கடகம்:** நீங்கள் எதிர்பார்த்த நல்லசெய்தி வந்து சேரும். நண்பர்களிடம் சந்தோஷத்தை பகிர்ந்து கொள்வீர்கள். தொழில்வியாபாரத்தில்வளர்ச்சிப்பணிஎளிதாக நிறைவேறும்.

**சிங்கம்:** மாறுபட்ட கருத்து உள்ளவரிடம் விவாதம் பேச வேண்டாம். தொழில்வியாபாரத்தில் இலக்குநிறைவேற கூடுதல் அவகாசம் தேவைப்படும்.

**கன்னி:** பொறுப்புணர்வுடன் அன்றாடப்பணியில் ஈடுபடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் அளவான பணவரவு கிடைக்கும். முக்கிய தேவைக்காக கொஞ்சம் கடன் பெறுவீர்கள்.

**துலாம்:** கடந்த கால உழைப்புக்குரிய நற்பயன் கிடைக்கும். தொழில், வியாபாரம் செழித்து.பணவரவும் நன்மையும் அதிகரிக்கும். சேமிப்பு கூடும்.

**விருச்சிகம்:** வழக்கத்திற்கான மாறான திடீர் பணி குறுக்கிடலாம். தொழில் வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். இலாபம் சுமாரான அளவில் இருக்கும்.

**தனுசு:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மகிழ்ச்சி நிறைந்த மனதுடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்தநிலை விலகும்.

**மகரம்:** விடாமுயற்சி எதிலும் தேவை. பொது விவகாரத்தில் நிதானமுடன் பேசுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் உள்ள அனுகூலம் பாதுகாக்கவும். சுமாரான பணவரவு கிடைக்கும்.

**கும்பம்:** நட்பின் பெருமையை எண்ணி மகிழ்வீர்கள். எதிர்கால வாழ்வில் நம்பிக்கை அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்:** சான்றோர்களின் அன்பும், ஆசியும் கிடைக்கும். திட்டமிட்ட செயல்கள் புதிய அணுகுமுறையால் நிறைவேறும். தொழில் வியாபாரத்தில் ஆதாயம் உயரும்.

**கோழியின் கிறுக்கல்!!@Kozhiyaar**



குறட்டை போல்தான்
தவறுகளும்!!
செய்பவருக்கு அது
தெரிவதேயில்லை!!!

**அழகிய கவிதை @SaranyaaaRaj**



அம்மாவிடம்
கஷ்டங்களைச் சொல்லும்
போது கடவுளுக்குப் பயம்
வந்துவிடும் இன்று நாம்
தொலைந்தோம் என்று...!!

**amudu @amuduarattai**



எதையும் உருவாக்குவது
கடினம், அழிப்பது எளிது
என்ற தத்துவம்,
தொப்பைக்குப் பொருந்தாது.

**வெண்பா@urs_venbaa**



ஆட்டை வெட்டுவது
அரக்க குணம்
அதை வாங்கிப் பகிர்ந்து
உண்பது இரக்க குணம்

**முகிலன்™@MJ_twets**




குழந்தைகளின்
குறைந்த பட்ச கோபம்
"நான் சாப்பிட மாட்டேன்.!"



twitter




**வீரமா இருக்கும்**
**ஆண்களை விட**



**வீட்டு வேலை செய்யும்**
**ஆண்களைத்தான்**
**பெண்களுக்குப் பிடிக்கும்**

# சிரி

**ஆசிரியர்:** கும்பகர்ணன் மாதக்கணக்கில் தூங்கினான். இது என்ன காலம்?

**மாணவன்:** நுளம்பே இல்லாத காலம் சேர்...!

"உங்க மனைவிய செல்லமா எப்பிடிக் கூப்பிடுவீங்க..?"
"கூகுள்" எண்டு
"ஏன்?"
"நான் எங்க இருந்தாலும் கண்டுபிடிச்சிடுவா..."

# சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | | 6 | | 7 | | 8 | |
| 3 | | | | | | | | 2 |
| | | 4 | | | | 7 | | |
| 9 | | | 7 | | 2 | | | 5 |
| | 4 | | | 1 | | | 3 | |
| 1 | | | 3 | | 6 | | | 8 |
| | | 9 | | | | 4 | | |
| 8 | | | | | | | | 9 |
| | 3 | | 9 | | 1 | | 5 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 1 | 3 | 6 | 7 | 5 | 4 | 8 | 9 |
| 7 | 9 | 4 | 1 | 8 | 2 | 3 | 6 | 5 |
| 5 | 8 | 6 | 3 | 9 | 4 | 1 | 2 | 7 |
| 1 | 3 | 2 | 7 | 6 | 9 | 5 | 4 | 8 |
| 6 | 7 | 5 | 8 | 4 | 1 | 9 | 3 | 2 |
| 8 | 4 | 9 | 2 | 5 | 3 | 6 | 7 | 1 |
| 3 | 6 | 1 | 9 | 2 | 8 | 7 | 5 | 4 |
| 4 | 2 | 7 | 5 | 1 | 6 | 8 | 9 | 3 |
| 9 | 5 | 8 | 4 | 3 | 7 | 2 | 1 | 6 |

நேற்றைய விடை

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளை யும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கி றார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை.



## செய்தித்தாள் படிப்போம்

செய்தித் தாளைப் படிப்பது
சிறந்த பழக்கம் அறிந்திடு
மெய் பொய் நிலைமை மேவியே
மெத்தச் சொல்லும் உணர்ந்திடு

நாளும் வெளி வந்திடும்
நான்கு திசையும் உரைத்திடும்
தாளில் உலகைக் காட்டிடும்
திறனை வியந்து படித்திடு

அழகு எளிமை வர்ணமென
அருமை உருவில் பல விதமாய்
பழமை புதுமை வகைப்பட்டு
பகரும் செய்தி தத்திடும்


வியக்க வைக்கும் விஞ்ஞானம்
விந்தையாகும் மெய் ஞானம்
நயக்க வைக்கும் இலக்கியங்கள்
நாளும் தந்திடும் தாள்களே

விரும்பும் நல்ல விளையாட்டு
வேடிக்கை வினோதக் களிப்பூட்டு
அரும்பும் நல்ல அறிவாக்கம்
அருமைத்தாளே உருவாக்கும்

கலைகள் நயக்கச் செய்திடும்
கதைகள் கவிகள் பேசிடும்
மொழியின் பெருமை உணர்ந்திட
தாளின் துணையே பெரிதாகும்

பொழுதைப் போக்கவும் படித்திடணும்
புதுமை பார்க்கவும் படித்திடணும்
விழுதாய் வாழ்வை உயர்த்திடவே
விரும்பித் தாளைப் படித்திடு

## ஆட்டுக்குட்டியின் தந்திரம்



காட்டை அண்டிய மலையடிவாரத்தில் இடையர்கள் சிலர் தங்கள் ஆட்டு மந்தைகளுடன் கூடாரம் அமைத்துத் தங்கியிருந்தனர். ஆட்டுமந்தைகளைப் பகலில் மலையாடிவார புல்நிலங்களில் மேயவிடுவதும் இரவில் மாறி மாறி ஒருவர் அவற்றைக் காப்பதுமாக இருந்தனர்.

அந்த வேளையில் அந்தப் பக்கமாக நரியென்று வந்தது. ஆடுகளைப் பார்த்ததும் நாவில் எச்சில் ஊறியது. அங்கே இருந்த புதர் மறைவில் அது மறைந்திருந்தது. சமயம் பார்த்து ஒரு ஆட்டுக்குட்டியைக் கவ்விக் கொண்டு அங்கிருந்து ஓடியது. இடையர்கள் எவரும் இதனைக் கவனிக்கவில்லை. சற்றுத் தூரம் ஓடிய நரி 'இனிப்பயமில்லை' என்று ஆட்டுக் குட்டியைக் கீழே போட்டது. குட்டி நடுங்கியபடி நரி முன் நின்றது. இனித் தப்பிக்க முடியாது" எனப் புரிந்து கொண்டது. இருப்பினும் ஒரு முயற்சி செய்து பார்க்க எண்ணியது.

நரியிடம் பேச்சுக்கொடுத்தது. "நரியாரே! இன்று நான் உங்களுக்குக் உணவாகப் போகிறேன். எனக்கு ஒரு கடைசி ஆசை உள்ளது. அதை நீங்கள் நிறைவேற்றுவீர்களா?"எனறு கேட்டது. "சரி சீக்கிரமாகச் சொல். எனக்கு நன்றாகப் பசிக்கிறது. உன்னை நான் விருந்தாக்க வேண்டும்"என்றது நரி. "நரியாரே நான் இறப்பதற்கு முன்னர் உமது இனிமையான பாடலைக் கேட்க வேண்டும் எனக்கு ஆசையாக உள்ளது"என்றது. ஆட்டுக்குட்டி "என்னது... என் குரல் இனிமையாக இருந்ததா? என்னை விளையாடுகிறாய்?" என்று முறைத்தபடி கேட்டது நரி. ஆட்டுக் குட்டியோ விடவில்லை.

"நரியாரே! உமது பெருமை உமக்குத் தெரியவில்லை. என்னைப் போன்ற இரசிகர்களுக்கே தெரியும்?"என்றது. "உண்மையாகவா சொல்கிறாய்?" என்று கேட்டது நரி. "உண்மையைத் தான் சொல்கிறேன். நரியாரே! எனக்காக ஒரே ஒரு பர்டல் பாடக் கூடாதா?" என்று கெஞ்சுவது போல நடித்தது. இப்போது நரி தன்னையிட்டுப் பெருமைப்பட்டுக்கொண்டு பெரிதாக ஊளையிட்டது. ஆட்டுக்குட்டிக்கு நம்பிக்கை பிறந்தது. "இனி நாம் தப்பி விடலாம்"என்று நினைத்தது. "ஆஹா அருமை... அருமை நரியாரே இன்னொரு பாடல் பாடுங்களேன்"என்றது நரி மீண்டும் ஊளையிட்டது.

சற்றுத் தொலைவில் இருந்த இடையர்களும் நரியின் ஊளையிடலைக் கேட்டனர். அண்மை தூரத்தில் நரி ஒன்று உள்ளது எனப் புரிந்து கொண்டனர். தம்மிடமிருந்த ஆடுகளை எண்ணிப் பார்த்தனர். ஒரு ஆடு குறைவாக இருந்தது. "இது நரியின் வேலையாகத்தான் இருக்கும்"என்று புரிந்து கொண்டனர்.

நரியின் ஊளைச்சத்தம் கேட்ட பக்கமாக ஓடினர். நரி அங்கே கண்ணை மூடிக்கொண்டு தொடர்ந்து ஊளையிட்டுக்கொண்டிருந்தது. இடையர்கள் நரியை நெருங்கினர். ஆட்டுக்குட்டி நிம்மதிப் பெருமூச்சு விட்டது. இடையர்கள் தங்கள் கைகளில் இருந்த பலமான தடிகளால் நரியையைப் புடைத்தனர். நரி கதறிக் கொண்டே ஓடியது. இடையர்கள் அதனை விரட்டி விரட்டி அடித்தனர் ஒருவழியாக நரி தப்பி காட்டுக்குள் சென்று மறைந்து கொண்டது.

ஓரிடத்தில் உட்காந்து நரி "ஒரு சிறிய ஆட்டுக்குட்டி என்னை எப்படித் தந்திரமாக ஏமாற்றிவிட்டது? தந்திரத்துக்குப் பெயர்பெற்ற நானே ஆட்டுக்குட்டியிடம் ஏமாந்து போனேனே?"என்று எண்ணி தனக்குள் வெட்கமடைந்தது.



## புள்ளிகளை இணைத்து படத்தை முழுமை செய்வோம்



## உழவுத் தொழில்



நெல்லை முதன்மையாகக் கொண்ட தானிய வகைகளைப் பயிரிடும் தொழில் உழவுத் தொழிலாகும். இந்தத் தொழிலை விவசாயம், கமத்தொழில் என்றும் கூறுவர். 'பசிவந்திடப் பத்தும் பறந்திடும் என்பார்கள். அந்தப் பசியைப் போக்கி வயிராற உணவளிக்கும் தொழிலாக உழவுத் தொழில் விளங்குகிறது.

பண்டைக் காலம் முதலே மக்கள் உழவுத் தொழிலைச் செய்து வருகிறார்கள். உழவுத் தொழிலைச் செய்வதற்கு நீர் மிக அவசியம். ஆதலால் ஆரம்பகாலத்தில் நீர் உள்ள இடங்களான ஆறு, குளங்களை அடுத்த பகுதிகளில் மக்கள் குடியேறி பயிர் செய்ய ஆரம்பித்தார்கள். ஆதி மனிதன் முதலில் வேட்டையாடியும் பின்னர் மந்தை மேய்த்தும் இறுதியில் ஆற்றங்கரைகளில் பயிர் செய்ய ஆரம்பித்த பின்னரே நாகரிகத்தில் முன்னேறினான் எனக் கூறப்படுகிறது. தற்போது ஒரு வருடத்தில் இரண்டு முறை அல்லது மூன்று முறை பயிர் செய்யப் படுகிறது. இவை அனேகமாக பருவமழையை நம்பி நடைபெறுவனவாகும். மற்றயது ஆறுகள் குளங்களிலிருந்து வயல்களுக்கு நீரைப் பாய்ச்சி பயிர் செய்தலாகும்.

உழவுத் தொழில் செய்பவர்கள் உழவர்கள் விவசாயிகள் என அழைக்கப்படுவர். இவர்கள் மாரி காலத்தில் தமது வயல் நிலங்களை எருதுகள் பூட்டி கலப்பையாலோ அன்றேல் இயந்திரங்களாலே உழுது பசளையிட்டு பண்படுத்துவர். நீரைத் தேக்க வயல்களில் வரம்புகள் கட்டி விதை விதைப்பர். வேறு இடத்தில் பதியம் இட்டு முளைத்த நாற்றுக்களையும் பிடுங்கி நாற்று நடுவர்.



பயிர்கள் வளரும் போதுகளை பிடுங்கு வர். பசளைகள் இடுவர். கிருமிநாசினிகள் தெளிப்பர். நெல் மணிகள் முற்றிப் பழுத்ததும் அருவிவெட்டி மாடுகளைக் கொண்டு சூடு மிதித்து நெல் மணி வேறு பதர்வேறாக்குவர். இக்காலத்தில் சூடு மிதித்தலுக்கு இயந்திரங்கள் பயன்படுத்தப் படுகின்றன.

சுத்தப்படுத்தப்பட்ட நெல்மணிகள் மூட்டைகளாக சாக்குகளில் கட்டப்பட்டு நெற்களஞ்சியங்களுக்கும் சந்தைகளுக்கும் கொண்டு செல்லப்படும். உழவர்கள் இவ்வாறு சேற்றில் இறங்கி பயிர் செய்யாவிட்டால் நாம் சோற்றில் கை வைக்க முடியாது.

உழவுத் தொழிலின் முக்கியத்துவத்தை திருவள்ளுவர் தனது திருக்குறளில்

**உழுதுண்டு வாழ்வாதே வாழ்வர் மற்றெல்லாம்**
**தொழுதுண்டு பின் செல்பவர்''**


என்று பாடியுள்ளார்.

பாரதியாரும்

**''உழவுக்கும் தொழிலுக்கும்**
**வந்தனை செய்வோம் – வீணில்**
**உண்டு களித்திருப்போரை நிந்தனை**
**செய்வோம்''**

என்று பாடியுள்ளார்.

## கைப்புதிர்



| | | |
|---|---|---|
| 1. துன்பத்தில் வரும் கை | - | அழுகை |
| 2. பெண்ணைக் குறிக்கும் கை | - | மங்கை |
| 3. சிவனின் தலையில் இருப்பது | - | கங்கை |
| 4. இளைய சகோதரி | - | தங்கை |
| 5. பெண் தெய்வம் ஒன்று | - | துர்க்கை |
| 6. தலையில் தோன்றுவது | - | வழுக்கை |
| 7. சிறிய தெருவைக் குறிப்பது | - | ஒழுங்கை |
| 8. முருகன் கோவில் கொண்ட இடம் | - | திருத்தணிகை |

(18 ஆம் பக்கத்தொடர்ச்சி)

# குடாநாட்டில் தொடங்கியது...

பந்தயத்தில் சிறந்த அடைவுகளைப் பெற்றவர்கள்.




எஸ்.கே.சர்மா




கே.டினேஸ்




பி.பிராங்கோ




ஏ.துசான் ஆரோன்

ை ய ச்

சேர்ந்த எஸ்.காந்தரூபனின் புறா நான்காவது இடத்தையும் அல்லைப்பிட்டியைச் சேர்ந்த எஸ்.பிரியதர்ஸ னின் புறா ஐந்தாவது இடத்தையும் பெற்றுக்கொண்டன.

முதல் தடவை என்பதால் குறிப்பிட்டளவு புறாக்களே பந்தயத்தில் ஈடுபட்டன என்றாலும், எதிர்காலத்தில் வடக்கு மாகாணம் முழுவதற்கும் இந்தப் பந்தயத்தை விரிவாக்கும் போது பெரும் எண்ணிக்கையான புறாக்கள் பந்தயத்தில் கலந்துகொள்ளும் என்று பபுகயா உறுப்பினர் அன்ரன் தெரிவித்தார்.

'இந்த விளையாட்டைச் சரியாக ஆடவேண்டும் என்றால், அதை நேர்த்தியாகச் செய்யத் தெரிந்திருக்கவேண்டும். புறாக்களுடன் முழு ஈடுபாட்டுடன் அதிக நேரத்தைச் செலவிட வேண்டும். மற்றைய வேலைகளுக்கு மத்தியில் பகுதிநேரமாக பந்தயப் புறா வளர்ப்பிலும் ஈடுபடுவதென்பது சவாலானது. இப்போதுதான் பந்தயங்களை இங்கு ஆரம்பித்திருக்கிறீர்கள் என்பதால், முதலில் மிக வேகமாகப் பறக்கும் புறாக்களை அடையாளம் கண்டு அவற்றிலிருந்து சிறந்த பரம்பரை வரிசையை உருவாக்குவதில் நீங்கள் அக்கறை காட்டவேண்டும்.

அப்போதுதான் சிறந்த பந்தயப் புறாக்களை யாழ்ப்பாணத்தில் உருவாக்க முடியும். வெற்றி, தோல்விகளுக்கு அப்பால் சிறந்த பரம்பரை வரிசையை உருவாக்குவதிலேயே யாழ்ப்பாணத்தில் உள்ள புறா வளர்ப்புக்காரர் கள் எல்லோரும் ஒற்றுமையோடு கவனம் செலுத்தவேண்டும்.

இப்போது வரைக்கும் அத்தகைய சிறந்த. பரம்பரை வரிசை ஒன்று இலங்கையில் இல்லை. தமிழ் நாட்டில் புறாச் சேது என்பவரிடம் அத்தகைய சிறந்த பரம்பரை வரிசை உண்டு என்று அறிகிறோம். அதுபோன்றதொரு நிலையை இங்கும் உருவாக்குவதில் முதலில் கவனம் செலுத்தப்படவேண்டும்" என்றார் மருத்துவ நிபுணர் சுரேஸ்குமார்.

புறா வளர்ப்புத் தொடர்பில் அறிவியல் விளக்கம் மற்றும் நுட்பங்கள் பற்றியும் அவர் விளக்கினார்.

வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும் புறாப் பந்தயக் கழகங்களை உருவாக்கும் ஆர்வம் உள்ளவர்கள் பபுகயாவுடன் தொடர்பு கொண்டால் ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்க தாம் தயாராக இருக்கின்றனர் என்று அன்ரன் தெரிவித்தார்.

தேவையானவர்கள் ஆர்.பி.சி. ஜெவ்னா (rpcjaffna) என்கிற முகப்புத்தகக் கணக்கு ஊடாகத் தொடர்பு கொள்ளலாம் என்றும் பபுகயா உறுப்பினர் அன்ரன் தெரிவித்தார்.

ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1449
சீட்டிழுப்பு திகதி 12.03.2018

வெற்றி இலக்கங்கள்
06 22 29 40 G

அடுத்த வியாழக்கிழமை ஜக்பொட்
ரூ. 18, 034, 348/=

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## fz z Bm Q ryp



யா / புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் மகா வித்தியாலய ஸ்தாபகர்
**வேலாயுதர் விஸ்வலிங்கம்** அவர்களின்
மகளும் பாடசாலையின்
பழைய மாணவியும் முன்னாள்
ஆசிரியரும் ஆகிய

**திருமதி மீனாட்சிப்பிள்ளை சிங்கராஜா**

அவர்கள் காலமான செய்தி அறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பாடசாலைச் சமூகத்தின் சார்பில் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள்**
**யா/புங்குடுதீவு ஸ்ரீசித்தி விநாயகர் மகா வித்தியாலயம்.**

## மரண அறிவித்தல்

# திருமதி மீனாட்சி சிங்கராஜா

**(ஓய்வுபெற்ற ஆசிரியை, புங்குடுதீவு)**



புங்குடுதீவு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மீனாட்சி சிங்கராஜா (ஓய்வுபெற்ற ஆசிரியர் நேற்று (12.03.2018) திங்கட்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதர் விசுவலிங்கம் (புங்குடுதீவு மேற்கு, பெரிய புலம் பிள்ளையார் கோயில் ஸ்தாபகரும் புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் மகா வித்தியாலய ஸ்தாபகரும்), இராமநாதர் வேலாசிப்பிள்ளை தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற வேலணையைச் சேர்ந்த கணபதி செல்லையா, கந்தையா தங்கம்மா அவர்களின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்லையா சிங்கராஜாவின் (இலங்கை புகையிரத திணைக்கள கட்டட மேற்பார்வையாளர்) அன்பு மனைவியும் ஜெயராஜா (லண்டன்), ஜீவராஜா (லண்டன்), அருள்ராஜா (லண்டன்), சுபராஜா (பதிவாளர் திணைக்களம், மத்திய பதிவேட்டு அறை, மாளிகாவத்தை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கௌசலா (கௌரி - லண்டன்), சாந்திமாலா (லண்டன்), சுமித்திரா (லண்டன்), உமையாள் (இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு) ஆகியோரின் மாமியும் கீர்த்தனா (லண்டன்), சஜீவன் (லண்டன்), அபிஷா (லண்டன்), கிருஷா (லண்டன்), விஷ்ணுகாந், ஹரிஷ்பவன், லோசனா (கொழும்பு) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு (அத்தியட்சகர் பால்சபை, யாழ்.மாவட்டம்), சிவகாமிப்பிள்ளை (சிங்கப்பூர்), சோமஸ்கந்தன் (தபால் அதிபர், புங்குடுதீவு), சிவயோகம்மா, நடராசா (தலைமைக் கூட்டுறவு பரிசோதகர், யாழ். மாவட்டம்), மங்கையற்கரசி மற்றும் ஓய்வுபெற்ற வைத்திய கலாநிதி, கனகரட்ணம் (வத்தேகம), பர்வதபத்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான அமுதகௌரி, பொன்னம்பலம் (நிர்வாக உத்தியோகத்தர், கட்டட திணைக்களம், சிங்கப்பூர்), முருகேசு (உடையார், புங்குடுதீவு), நமசிவாயம் (திடீர் மரண விசாரணை அதிகாரி, புங்குடுதீவு) மற்றும் தடாதகைப்பிராட்டி (ஓய்வுபெற்ற பட்டதாரி ஆசிரியை, வத்தேகம), காலஞ்சென்ற சிந்துராஜா (பிரபல வர்த்தகர் கொழும்பு) ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு (பொலிஸ் உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்), மங்கையற்கரசி மற்றும் பரமேஸ்வரி, காலஞ்சென்ற கோபாலபிள்ளை (பிரபல வர்த்தகர்) ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற கமலாதேவியின் சகலியும் சண்முகநாதன் (ஹரன் ஸ்ரூடியோ, ஹரன் தியேட்டர் உரிமையாளர்), பாலசிங்கம் (பிரபல வர்த்தகர்) ஆகியோரின் சகோதரியும் மகாலட்சுமியின் (வேலணை) சகலியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்சிசை, மஹிந்த மலர்ச்சாலையில் இன்று (13.03.2018) செவ்வாய்க்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நாளை (14.03.2018) புதன்கிழமை மு.ப. 10.00 மணிக்கு நடைபெற்று கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**சி.சுபராஜா (மகன்)**
**075 524 4050**

## கொக்குவில் வளர்மதி முன்பள்ளி
## பதவி வெற்றிடங்கள்

**1) முன்பள்ளி ஆசிரியர் 2) சுத்திகரிப்பு பணியாளர்**

1) அனுபவமும் ஆற்றலும் தராதரமும் கொண்ட முன்பள்ளி கற்கையில் டிப்ளோமா அல்லது அதற்கொத்த தராதரம் பெற்றவர்கள் (கலைத்துறை விளையாட்டு, நாடகம் போன்ற முன்பள்ளி கற்றலுடன் தொடர்புடைய ஆற்றல்கள் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.)
2) சுத்திகரிப்புப் பணி செய்வதற்கு பெண் ஒருவர் தேவை.
மேற்படி பதவிகளுக்கு அதற்குரிய தராதரம் கொண்டவர்கள் விண்ணப்பிக்கலாம். திறமைக்கேற்ப சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.
EPF, ETF செலுத்தப்படும்.
கீழ்க்காணும் முகவரிக்கு தங்கள் விவரங்களுடன் விண்ணப்பத்தில் தங்கள் தொலைபேசி இலக்கத்தையும் குறிப்பிட்டு 20.03.2018 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும்.
நேர்முகத்தேர்வு விவரம் தொலைபேசி மூலம் அறியத் தரப்படும்.

**முன்பள்ளி இணைப்பாளர்,**
**கொக்குவில் வளர்மதி முன்பள்ளி,**
**சம்பியன்லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

## கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் (புதுக்கோயில்) பரிபாலனசபை

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் பரிபாலனசபையின் அனுமதியின் பிரகாரம் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் (25.03.2018) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு கோயில் மண்டபத்தில் நடைபெறும். கோயில் யாப்பு பிரமாணம் 11 இற்கு அமைய சந்தாப்பணம் செலுத்திய அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகம் தரும்வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

### நிகழ்ச்சிகள்

1. தேவாரம்
2. தலைவர் உரை
3. சென்ற வருடாந்த பொதுக்கூட்ட அறிக்கை அங்கீகரித்தல்.
4. பொருளாளரின் அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்பட்ட கடந்த வருட வரவு, செலவு அறிக்கையை அங்கீகரித்தல்.
5. புதுவருடத்துக்குரிய நிர்வாகசபை அங்கத்தவர்களைத் தெரிவு செய்தல்.
6. பிற விடயங்கள்.

**பரிபாலனசபையினர்,**
**கொக்குவில் கிருபாகர**
**சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்.**

(CS/14715)(11,17)

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்:3006 திகதி:12.03.2018
திங்கட்கிழமை
நீலம்
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து / போனஸ் இலக்கம் / அடுத்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
07 46 58 66 A 47 34,050,585/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 194
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2018.03.12
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 57,592,445/-
வெற்றி இலக்கங்கள்
40 44 47 63 V
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

Galaxy Star
வெற்றி வாரம் 244 திகதி 11.03.2018
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
11 18 19 49 59
அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 4,080,276/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space GS என டைப் செய்து
1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 06.09.1946
ஆண்டவன் அடியில் 22.02.2017

அமரர்
# ஜெயமாலினி ஜெகதீசன்

ஓடி மறைந்தது ஓராண்டு வாடி நிற்கின்றோம் நாம் இங்கு
எம் முள் இறையாகி என்றென்றும் வாழ்ந்து
எமக்கு நல்வழி காட்டிவிடுவீர்............

யாக்கரு வீதி,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

கணவர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உடன்பிறப்புக்கள்.

# பங்குச்சந்தை உறுதியான பெறுபேற்றைக் கண்டுள்ளது

*2017ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப் பதிவு*

**பங்குச்சந்தை உறுதியான பெறுபேற்றைக் கண்டுள்ளதென கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையம் தெரிவித்துள்ளது. இந்த உறுதியான பெறுபேறுகள் 2017ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப் பகுதிக்கான பதிவாக அமைந்துள்ளன.**

இதன்படி அனைத்துப்பங்கு விலைச்சுட்டிகள் (ASPI) 8.35 வீத உயர்வையும், 'எஸ் அன்ட் பி எஸ். எல் 20' (S&P SL 20) விலைச்சுட்டிகள் 11.67 வீத உயர்வையும் பதிவு செய்துள்ளன. 2017ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டுக் கொள்வனவுகள், 2016 ஆம் ஆண்டுக் காலப் பகுதியை விடவும், இரு மடங்காகக் காணப்படுவதுடன், இந்த அதிகரிப்பானது, முதல் அரையாண்டு வெளிநாட்டு கொள்வனவுகளில் அதிகூடிய வரலாற்றுப் பெறுமதியாகவும் அமைந்துள்ளது.

அதேவேளை 2016 ஆம் ஆண்டு 0.383 பில்லியன் ரூபாவாக காணப்பட்ட தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் 2017 ஆம் ஆண்டின், ஜூலை மாதம் வரையான காலப்பகுதியில் 22.2 பில்லியன் ரூபாவாகப் பதிவாகியுள்ளன. தவிர பெப்ரவரி மாதத்தின் முதலாம் வாரம் தொடக்கம் 24 வாரங்கள் தொடர்ச்சியாக தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சல்களையும் பதிவுசெய்துள்ளது.

2016ஆம் ஆண்டில் மந்தமான பெறுபேற்றைப் பதிவு செய்த கொழும்பு பங்குப்பரிவர்த்தனை, 2017ஆம் ஆண்டு முதல் அரையாண்டு காலப்பகுதி வரையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை கண்டுள்ளது. இதன்படி அனைத்துப்பங்கு விலைச்சுட்டி (ASPI) 8.35 வீத உறுதியான வளர்ச்சியைப் பதிவுசெய்து ஜூலை 12 ஆம் திகதி 6,748.15 புள்ளிகளாகக் காணப்பட்டது. பெரும் மூலதனம் மற்றும் திரவத்தன்மை நிறைந்த பண்புசார் பட்டியற்படுத்தப்பட்ட 20 நிறுவனங்களை உள்ளடக்கிய 'எஸ் அன்ட் பி எஸ்.எல் 20' விலைச்சுட்டி 11.67 வீத வளர்ச்சியை முதல் காலண்டில் பதிவு செய்து ஜூலை 12 ஆம் திகதி 3,904.45 புள்ளிகளாகக் காணப்பட்டது.

2016 மற்றும் 2015 ஆண்டுகாலப் பகுதிகளில் முறையே 9.66 வீதம், 5.54 வீதம் வருடாந்த வீழ்ச்சியை வெளிப்படுத்திய அனைத்துப்பங்கு விலைச்சுட்டிகள் 2017 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்து கொண்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு ரூபா 737.2 மில்லியனாகக் காணப்பட்ட நாளாந்த சராசரி புரள்வானது, 2017ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலச் சராசரியாக 912.7 மில்லியன் ரூபாவை பதிவாக வெளிக்காட்டி மொத்த வியாபார நடவடிக்கைகளையும் துரித மடையச் செய்துள்ளது. (ஒ)

## மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தனிநபர் வருமானம் 0.21 வீதம் வீழ்ச்சி

*மத்திய வங்கி வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்களில் சுட்டிக்காட்டு*

இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தனிநபர் வருமானமானது கடந்த 15 ஆண்டுகளுக்குப் பின்பாக வீழ்ச்சியைச் சந்தித்துள்ள தகவல் தரவை இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்கள் வெளிப்படுத்தியுள்ளன.

மத்திய வங்கி வெளியிட்டுள்ள 2016ஆம் ஆண்டுக்கான அறிக்கையின் பிரகாரம், கடந்த ஆண்டு இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தனிநபர் வருமானமானது 8 டொலர்களினால் அதாவது, 0.21 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

அதேவேளை இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தனிநபர் வருமானம் இறுதியாக 2001ஆம் ஆண்டிலேயே வீழ்ச்சியடைந்திருந்தது. இந்தச் சந்தர்ப்பத்திலே குறிப்பாக, 31 டொலர்கள் வீழ்ச்சியைச் சந்தித்து, தனிநபர் வருமானம் 838 டொலர்களாகப் பதிவாகியிருந்தமை நோக்கத்தக்கது. கடந்த ஆண்டு தனிநபர் வருமானம் 3 ஆயிரத்து 835 டொலர்களாகப் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

## தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் அசைவு மாதிரி

| வருடம் | மாதம் | சுட்டெண் | சுட்டெண்ணுக்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | புள்ளிக்குப் புள்ளி பணவீக்கம் (%) |
|---|---|---|---|---|
| 2017 | ஜனவரி | 119.3 | 1.1 | 6.5 |
| | பெப்ரவரி | 119.9 | 0.5 | 8.2 |
| | மார்ச் | 119.5 | -0.3 | 8.6 |
| | ஏப்ரல் | 121.0 | 1.3 | 8.4 |
| | மே | 121.8 | 0.7 | 7.1 |
| | ஜூன் | 123.4 | 1.3 | 6.3 |
| | ஜூலை | 122.4 | -0.8 | 6.3 |
| | ஓகஸ்ட் | 122.3 | -0.1 | 7.9 |
| | செப்ரெம்பர் | 123.3 | 0.8 | 8.6 |
| | ஒக்ரோபர் | 124.8 | 1.2 | 8.8 |
| | நவம்பர் | 126.4 | 1.3 | 8.4 |
| | டிசெம்பர் | 126.6 | 0.2 | 7.3 |
| 2018 | ஜனவரி | 125.8 | -0.6 | 5.4 |

## வணிக நிறுவனங்களுக்கான பாதுகாப்புச் சேவை அறிமுகம்

*சிறி லங்கா ரெலிகொம் நடவடிக்கை*

உலகளாவிய ரீதியிலே இணையப் பாதுகாப்புத் தீர்வுகளை வழங்கும் போட்டிநெற் மற்றும் வணிகங்கள், செல்லின சந்தைப் பிரிவுகளுக்கான 'டி.டி.ஓ.எஸ்' பாதுகாப்பில் முன்னணியிலுள்ள நெற்ஸ்கவுட் இன் பாதுகாப்பு பிரிவான 'அர்பர் நெற்வேக்ஸ்' உடன் இணைந்து சிறி லங்கா ரெலிகொம் வணிக நிறுவனங்களுக்கான பாதுகாப்புச் சேவைகளை அறிமுகப்படுத்தியுள்ளதாக கூறப்படுகிறது.

இதன்படிரெலிகொம்நிறுவனத்தின் நிர்வகிக்கப்பட்ட பாதுகாப்பு சேவைகள் இலங்கையிலுள்ள பெரிய, நடுத்தர மற்றும் சிறிய வணிக நிறுவனங்களுக்கான பல் செயற்பாட்டுத் தீர்வுகளை வழங்கவுள்ளது.

இது குறித்து கருத்துரைத்துள்ள சிறி லங்கா ரெலிகொம் இன் வணிகதீர்வுகள் பிரிவின் பொது முகாமையாளரான எம் ஐ டீன,

"தகவல் பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள ஆபத்துக்கள் முன்னெப்போது மில்லாத வகையில், குறிப்பாக வணிகச் செயற்பாடுகள் மீதாக அதிகரித்து வருவதால் ஒரு பல்செயற்பாட்டு வலையமைப்புப் பாதுகாப்பு கட்டமைப்பின் தேவை மிகவும் அவசியமாகிறது. தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் தீர்வுகள் வழங்குநரான ரெலிகொம், செலவுப்பயனுறுதியுள்ளதும், பாதுகாப்பானதுமான ஆரம்பம் முதல் இறுதிவரையான இணையஇணைப்பை வாடிக்கையாளருக்கு வழங்குவதில் கவனத்தைச் செலுத்துகிறது.

நிர்வகிக்கப்பட்ட பயர்வோல் சேவையும் டி.டி.ஓ.எஸ் பாதுகாப்புச் சேவையும் பழைய புதிய வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கவுள்ளன. தவிர, மின்னஞ்சல் பாதுகாப்பானது கணிணிமுகில் சேவையை அடிப்படையாகக்கொண்டு வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகிறது. வாடிக்கையாளர் இந்தச் சேவையைப் பதிவு செய்ததும், தொடர்ந்து தனது பயர்வோலினை நிர்வகித்துக்கொள்ளமுடியும்" - என்றார். (ஒ)

## சனச அபிவிருத்தி வங்கியின் 'ரெலி கலக்ஷன்' செயற்றிட்டம் ஆரம்பம்

*வாடிக்கையாளர்களுக்கு பின்னூட்டம் வழங்க நடவடிக்கை*

சனச அபிவிருத்தி வங்கியில் இருந்து கடன் வசதியைப் பெற்றுக்கொண்ட வாடிக்கையாளர்களிடம் இருந்து கடன் தொகையை மீள அறவிடும் விருத்தி செய்யப்பட்ட 'ரெலி கலக்ஷன்' என அழைக்கப்படும் புதிய செயற்றிட்டம் ஒன்றை வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த முறை மூலம் வாடிக்கையாளர்கள் தாம் செலுத்த வேண்டிய் தொகை பற்றிய பின்னூட் டலை பெற்றுக் கொள்ளமுடியும். குறித்த திகதியில் கடனை மீளச் செலுத்தத் தவறிய அனைத்து வாடிக்கையாளர்களையும் அடையாளம் கண்டுகொள்வதும், பின்னூட்டல் செய்வதும் இந்த வேலைத் திட்டத்தின் நோக்கமாகக் காணப்படுகிறது.

கடன் தொகையின் மீள் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய திகதியிலிருந்து மேலும் நான்கு நாள்கள் சலுகைக் காலமாக (Grace Period) வழங்கப்படும். பின்னூட்டல் முறை மூலம் ஐந்தாவது நாள் தொடக்கம் வாடிக்கையாளர் செலுத்த வேண்டிய கடன் தொகை தொடர்பாக தொலைபேசி மூலம் ஞாபகமூட்டல் செய்யப்படும். இதற்கு மேலதிகமாக கடனை மீளச் செலுத்தாதமைக்கான காரணங்கள் பற்றியும் அவர்களிடம் கேட்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கடன் தொகையை அல்லது மாதாந்தக் கொடுப்பனவுகளைச் செலுத்த முடியாது வாடிக்கையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அவர்கள் தெரிவிக்கும் காரணங்கள் பற்றியும் கவனம் செலுத்திவரும் வங்கி, அவற்றுக்குப் பொருத்தமான தீர்வுகளையும் வழங்கிவருகிறது.

இந்தப் புதிய செயற்றிட்டம் குறித்து கருத்துத் தெரிவித்துள்ள சனச அபிவிருத்தி வங்கியின் கடன் மீள் அறவிடல் முகாமையாளர்; எஸ்.எச்.எஸ்.ஐ. உதயங்கன, "கொடுப்பனவுகளை மேற்கொள்ளத் தவறும் வாடிக்கையாளர்களுக்கு, இந்தச்சேவை மூலம், முறையான அறிவுறுத்தல்கள் பெற்றுக் கொடுக்கப்படும். உரிய நேரத்தில் தகவல்களைப் பெற்றுக் கொடுத்து கடன் தொகையை முறையாகச் செலுத்தத் தேவையான பின்னணியை ஏற்படுத்திக் கொடுப்பதே எமது நோக்கமாகும்" - என்றார். (ஒ)

# கொய்யாவில் குவிந்திருக்கும் சத்துகள்



கொய்யாவில் உள்ள 'விற்றமின் சி' சத்து, தோடம் பழத்தில் உள்ளதைவிட நான்கு மடங்கு அதிகம். இந்த விற்றமின் 'சி' சத்து உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்வதுடன், நோய் எதிர்ப்புச் சக்தியையும் அளிக்கிறது. நார்ச்சத்தும், குறைந்த சர்க்கரை அளவு கொண்டதாகவும் கொய்யா உள்ளது.

கொய்யாப் பழத்தில் போலிக் ஆசிட், விற்றமின் பி9 இருப்பதால் கர்ப்பிணிப் பெண்கள் கொய்யாப்பழம் உண்ணுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

நன்றாகப் பழுத்த கொய்யாப் பழத்துடன் மிளகு, எலுமிச்சைச் சாறு கலந்து சாப்பிட்டு வந்தால் உடல்சோர்வு, பித்தம் நீங்கும். கொய்யாவுடன் சப்போட்டா பழத்தைச் சேர்த்து தேன் கலந்து சாப்பிட்டால் உடல் வலுப்பெறுவதோடு குருதி சுத்தமாகும்.

கொய்யா இலைகளை சந்தனத்துடன் சேர்த்து அரைத்து, தலையில் பற்றுப் போட்டால் கடுமையான தலைவலி, ஒற்றைத் தலைவலி நீங்கும். இலைகளை அரைத்து தண்ணீரில் கலந்து பருகினால் வயிற்றுவலி, தொண்டைப்புண் போன்ற நோய்கள் குணமாகும்.

மதிய உணவுக்குப் பிறகு கொய்யாப்பழம் சாப்பிட்டால் நன்றாகச் சமிபாடு அடைவதோடு, மலச்சிக்கல் நீங்கும், வயிற்றுப் புண் குணமாகும். குருதி அழுத்தத்தை கட்டுப்படுத்தும் சக்தியும், வயிற்றுப்போக்கு, மூட்டுவலி, அரிப்பு, மூலநோய், சீறுநீரகக் கோளாறு உள்பட பல நோய்கள் கட்டுப்படுத்தும் ஆற்றலும் கொய்யாவுக்கு உண்டு எனத் தெரிவிக்கப்படுகிறது.

சக்கரை நோயாளிகளுக்கு ஏற்ற உணவு கொய்யா. நார்ச்சத்தும், குறைந்த சக்கரை அளவும் கொண்ட கொய்யாவை சக்கரை நோயாளிகள் தாராளமாகச் சாப்பிடலாம்.



# நண்டு வறுவல்

**தேவையான பொருள்கள்**

நண்டு - அரைக் கிலோ
சின்ன வெங்காயம் - 50 கிராம்
தக்காளி - 2
மிளகாய்த் தூள் - ஒரு கரண்டி
உப்பு - தேவையான அளவு
மஞ்சள் தூள்- சிறிதளவு

**வதக்கி அரைக்க:**

உள்ளி பல் - 10
மிளகு - 2கரண்டி

**தாளிக்க:**

நல்லெண்ணெய் - தேவையான அளவு
பெருஞ்சீரகம் - அரைக் கரண்டி
கறிவேப்பிலை, கொத்துமல்லித்தழை - சிறிதளவு

**செய்முறை :**

வெங்காயம், தக்காளி, கொத்தமல்லியை சிறு துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும்.

அரைக்க கொடுக்கப்பட்டுள்ள பொருள்களை சிறிது எண்ணெயில் வதக்கி ஆறவைத்து அரைத்துக் கொள்ளவும்.

நண்டை நன்றாக சுத்தம் செய்து வைக்கவும். சட்டியில் எண்ணெய் விட்டு பெருஞ்சீரகத்தை தாளித்து, வெங்காயம் போட்டு சிவக்க வதக்குங்கள்.

வெங்காயம் நன்றாக வதங்கியதும் தக்காளியைச் சேர்த்து நன்றாக வதக்கவும்.

அடுத்து அதில் அரைத்த மசாலா, மிளகாய்த் தூள், மஞ்சள் தூள், உப்புச் சேர்த்துப் பச்சை வாசனை போகும்வரை வதக்குங்கள்.

அடுத்து அதில் நண்டு, தேவையான அளவு தண்ணீர் சேர்த்துக் கொதிக்கவிடுங்கள். நண்டு வெந்து, மசாலா கெட்டியாகி நண்டுடன் சேர்ந்ததும் கொத்தமல்லித்தழையைத் தூவி பரிமாறவும்.

# பெண்களின் எலும்புத் தேய்மானத்துக்குத் தீர்வு தரும் உணவுகள்



35 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையப் பெண்கள் பலருக்கு முதுகு எலும்பில் தேய்மானம் ஏற்பட வாய்ப்பிருப்பதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். இதற்கு முக்கிய காரணம் கல்சியம் குறைபாடு. தினமும் கல்சியம் நிறைந்த உணவுகளை உட்கொண்டால் இந்தப் பிரச்சினைகளைத் தவிர்க்கலாம்.

தினமும் ஒரு டம்ளர் பால் குடிக்க வேண்டும். உணவில் தயிர் சேர்க்க வேண்டும். உணவில் சோயா, தோடம்பழம், வெள்ளரிக்காய், பாதாம் போன்றவைகளையும் சேர்க்க வேண்டும். தினமும் காலை நேரங்களில் மிதமான வெயிலில் நடப்பதும் நல்லது.

கோப்பி, தேனீர் போன்ற பானங்களை அதிகமாகக் குடிப்பதால், உடலில் உள்ள கல்சியம் குறையும். குளிர்பானங்கள், கல்சியம் சத்தை அழிக்கும் தன்மைகொண்டவை.

பொதி செய்து விற்கப்படும் துரித உணவுகள் மற்றும் நொறுக்குத்தீனி ஆகியவை எலும்புத் தேய்மானத்துக்குக் காரணமாகின்றன.

பெண்களுக்கு ஏற்படும் எலும்புத் தேய்மானத்துக்கு உடற்பயிற்சி மட்டும் செய்யாமல், உணவிலும் கவனம் செலுத்த வேண்டும். எலும்பை வலுப்படுத்த, கல்சியத்தோடு புரதச்சத்தும் தேவைப்படுகிறது. அதனால் புரதம், கல்சியம் அதிகம் உள்ள உணவுகளைச் சாப்பிட வேண்டும். பால், பாலாடைக் கட்டி, பால் பொருள்கள், கீரை வகைகள், காய்கறிகள், மீன், முட்டை, கோழி, குரக்கன், கொள்ளு, பருப்பு வகைகள், பாதாம் மற்றும் அப்பிள், தோடம்பழம், வாழைப்பழம் ஆகியவற்றில் கல்சியம் மற்றும் புரதச்சத்து நிறைவாக உள்ளன. இவற்றில் ஏதேனும் சிலவற்றையாவது தினமும் உணவில் சேர்க்க வேண்டும்.

உணவு, உடற்பயிற்சி மற்றும் வாழ்க்கை முறையை மாற்றிக்கொண்டால் மட்டுமே எலும்பு தேய்மானத்துக்கு தீர்வு காண முடியும்!

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்




| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 1000 | 1000 | 900 |
| நண்டு | 400 | 500 | 500 | 300 |
| கணவாய் | 600 | 800 | 800 | 1000 |
| பாரை | 500 | 650 | 700 | – |
| சுறா | 400 | 700 | 1000 | – |
| சீலா | 400 | 450 | 500 | 400 |
| விளை | 500 | 450 | 500 | 500 |
| முரல் | 350 | 400 | 450 | 400 |
| கும்பிளா | 400 | 350 | 400 | 400 |
| கிளாக்கன் | 800 | 400 | 500 | – |
| ஓரா | 300 | 300 | 500 | – |
| திரளி | 200 | 200 | 200 | 200 |
| நகரை | 200 | 300 | 400 | – |
| சூடை | 150 | 180 | 160 | 200 |
| ஒட்டி | 150 | 250 | 300 | – |
| திருக்கை | 250 | 300 | 400 | 100 |
| மதனம் | 150 | 250 | 250 | 400 |
| கொய் | 150 | 100 | 100 | 100 |
| பாலை | 150 | 300 | 400 | 400 |
| வாளை | 100 | 350 | 500 | – |

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| கத்தரி | 60 | 80 | 60 | 60 | 60 |
| முள்ளங்கி | 50 | 50 | 40 | 60 | 40 |
| மரவள்ளி | 50 | 40 | 35 | 50 | 30 |
| பயிற்றை | 60 | 120 | 70 | 100 | 80 |
| பாகல் | 100 | 200 | 200 | 120 | 120 |
| க.கிழங்கு | – | 60 | 60 | 80 | 40 |
| பெ.வெங்காயம் | 90 | 140 | 90 | 90 | 80 |
| சி.வெங்காயம் | 140 | 150 | 110 | 120 | 120 |
| பூசணி | 40 | 50 | 45 | 50 | 40 |
| தக்காளி | 30 | 60 | 25 | 50 | 40 |
| வாழைக்காய் | 60 | 70 | 60 | 50 | 60 |
| கீரை | 40 | 30 | 40 | 15 | 20 |
| பொன்னாங்காணி | 50 | 30 | 20 | 35 | 20 |
| ப.மிளகாய் | 60 | 120 | 50 | 60 | 60 |
| புடோல் | 80 | 70 | 60 | 50 | 50 |
| கோவா | 40 | 70 | 30 | 60 | 40 |
| வெண்டி | 60 | 100 | 80 | 100 | 80 |
| போஞ்சி | 120 | 150 | 90 | 120 | 80 |
| லீக்ஸ் | 160 | 160 | 140 | 140 | 120 |
| தேங்காய் | 70 | 80 | 90 | 100 | 70 |
| உ.கிழங்கு | 60 | 70 | 80 | 70 | 80 |
| தேசிக்காய் | 80 | 40 | 60 | 60 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 40 | 20 | 15 |
| கறிமிளகாய் | 80 | 180 | 100 | 100 | 180 |
| கரட் | 100 | 140 | 80 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 600 | - | 600 | 400 | 300 |

## இது புதுசு



ஆண்களுக்கான காலணி வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை ஆயிரத்து 500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

## வில்லியர்ஸ் 3 வருடத்தின் பின்னர் சதம்

ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட்டில் தென்னாபிரிக்க அணியின் முன்னணி வீரர் வில்லியர்ஸ் பெற்ற சதம் கிட்டத்தட்ட மூன்று வருடங்களின் பின்னர் அவரால்பெறப்பட்ட டெஸ்ட் சதம் என்ற தகவல் தற்போது கிடைக்கப்பெற்றுள்ளது.

முதலாவது இன்னிங்ஸில் தென்னாபிரிக்க அணி முன்னிலை பெறுவதற்கு வில்லியர்ஸின் சதம் பெரிதும் உதவியது. இந்தச் சதம் அவரின் 22ஆவது டெஸ்ட் சதமாகப் பதிவானது. அதே நேரம் டெஸ்ட் அரங்கில் சுமார் மூன்று வருடகால இடைவெளியின் பின்னர் வில்லியர்ஸ் பெற்றுக் கொண்ட சதமாகவும் அமைந்தது. இதற்கு முன்னர் கடந்த 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில்தான் வில்லியர்ஸ் சதம் பெற்றிருந்தார்.

காயம் காரணமாக கடந்த மூன்று வருடங்களில் பல ஆட்டங்களை வில்லியர்ஸ் தவறவிட்டடிருந்தார். 2015ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் வில்லியர்ஸ் டெஸ்ட் சதங்களைப்பெறாமைக்கு அவரது விலகலும் முக்கிய காரணம் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)





# தெ.ஆபிரிக்காவிடம் ஆஸி. படுதோல்வி

ஆஸ்திரேலியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி இலகுவாக வெற்றிபெற்றது.

போர்ட் எலிசபெத் மைதானத்தில் கடந்த 9ஆம் திகதி இந்த ஆட்டம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 243 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக வோர்ணர் 63 ஓட்டங்களையும், பான்குரொப்ட் 38 ஓட்டங்களையும், பெய்ன் 36 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ரபாடா 5 இலக்குகளையும், நெக்டி 3 இலக்குகளையும், பிளன்டர் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி 382 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக வில்லியர்ஸ் 126 ஓட்டங்களையும், எல்கர் 57 ஓட்டங்களையும், அம்லா 56 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கம்மின்ஸ் 3 இலக்குகளையும், மிச்செல் மார்ஷ், ஹசில்வூட் இருவரும் தலா இரு இலக்குகளையும், ஸ்ராக், லையன் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 119 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நிலையில் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி நேற்றுமுன்தின நாள் முடிவில் 5 இலக்குகளை இழந்து 180 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. மிச்செல் மார்ஷ் 39 ஓட்டங்களுடனும் பெய்ன் 5 ஓட்டங்களுடனும் நான்காம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். 45 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் மார்ஷ். பெய்ன் ஓர் முனையில் நிலைத்து நின்றாலும் மறுமுனையால் இலக்குகள் சரிவடைய 239 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது ஆஸ்திரேலியா.

பந்துவீச்சில் ரபாடா 6 இலக்குகளையும், மகாராஜ், நெக்டி இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றமை கைகொடுக்க தென்னாபிரிக்க அணிக்கு 101 ஓட்டங்களே இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. ஆரம்ப வீரரான எல்கர் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தாலும், ஏனைய வீரர்களின் சுமாரான பங்களிப்பால் 4 இலக்குகளை இழந்து இலகுவாக வெற்றிபெற்றது தென்னாபிரிக்க அணி.

11 இலக்குகளைக் கைப்பற்றிய ரபாடா ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார். (ம)

## ஞானமுருகன் அபாரம்

யாழ்ப்பாணம், மார்ச் 13

தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 55 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணி வெற்றிபெற்றது.

உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புங்குடுதீவு சென். சேவியர் விளையாட்டுக் கழக அணி மோதியது. 6:2 என்ற கோல் கணக்கில் ஞானமுருகன் அணி வெற்றிபெற்றது. (ம-23)


## ரி–20 தொடருக்காக பாகிஸ்தானுக்குச் செல்கிறது தீவுகள்

மேற்கிந்தியத் தீவுகள் அணி, அடுத்த மாதம் பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளது. மூன்று ரி-20 ஆட்டங்களைக் கொண்ட தொடரிலேயே அந்த அணி விளையாடவுள்ளது.

இலங்கை அணி கடந்த 2009ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடியபோது, இலங்கை அணியின் வீரர்கள் பயணித்த பேருந்து மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதற்குப் பின்னர் வேறு அணிகள் பாகிஸ்தானுக்குச் சென்று விளையாடுவதைத் தவிர்த்து வந்தன.

இலங்கை அணி கடந்த சில வாரங்களுக்கு முன்னர் பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டது. பாகிஸ்தானில் மீண்டும் கிரிக்கெட் ஆட்டங்கள் நடைபெறுவதற்கு இது பெரும் திருப்புமுனையாகக் கருதப்பட்டது. இந்த நிலையில் மூன்று ஆட்டங்கள் கொண்ட ரி-20 தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணி அடுத்த மாதம் பாகிஸ்தானுக்குச் செல்லவுள்ளது. (ம)

## ஜோகோவிக் தோல்வி



பன்னாட்டு அந்தஸ்து பெற்ற ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான அமெரிக்கத் தொடருக்கான முன்னாயத்தத் தொடராகக் கருதப்படும், இன்டியன் வேல்ஸ் தொடரில் அதிர்ச்சித் தோல்வியடைந்தார் சேர்பிய வீரர் ஜோகோவிக்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஜோகோவிக்கை எதிர்த்து ஜப்பான் வீரர் டாரோ டானியல் மோதினார். மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதலாவது செற்றை 6:7 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இழந்தார் ஜோகோவிக். அடுத்த செற்றை 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார். முதலிரு செற்களில் இருவரும் தலா ஓர் வெற்றியைப் பெற்றிருந்தமையால் மூன்றாவது செற்றில் வெற்றியைத் தீர்மானிக்கும் நிலை ஏற்பட்டது. அந்த செற்றை 1:6 என்ற புள்ளிகளின் இழந்ததை அடுத்து 1:2 என்ற செற் கணக்கில் அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேறினார் ஜோகோவிக். (ம)

# ரபாடாவுக்குத் தடை விதிக்க வாய்ப்பு

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக நேற்று நிறைவடைந்த இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில், ஆஸ்திரேலிய வீரர்களுடன் மோதல் போக்கைக் கடைப்பிடித்தமைக்காக தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளர் ரபாடாவுக்கு இரண்டு ஆட்டத்தில் தடை விதிக்கப்பட வாய்ப்புள்ளதாகக் கருதப்படுகிறது.

இந்த ஆட்டத்தில் 6 இலக்குகளால் அபார வெற்றிபெற்றது தென்னாபிரிக்கா. தென்னாபிரிக்க அணி வெற்றிபெற ரபாடா முக்கிய துருப்புச் சீட்டாக அமைந்தார். அவர் 6 இலக்குகளைக் கைப்பற்றினார். முதலாவது இன்னிங்ஸில் ஆஸ்திரேலிய அணித் தலைவர் சிமித்தை வீழ்த்தியதை அடுத்து சிமித்துடன் கடும் மோதல் போக்கைக் கடைப்பிடித்தார் ரபாடா. சிமித்தை தனது நெஞ்சால் மோதும் விதமாக அவர் நடந்துகொண்டார்.

இரண்டாவது இன்னிங்ஸில் வோர்ணரை போல்ட் முறையில் வீழ்த்தியதன் பின்னர் வோர்ணரின் முகத்துக்கு நேராகச் சென்று கடும் வார்த்தைப் பரிமாற்றங்களில் ஈடுபட்டார். இவை இரண்டும் பன்னாட்டுக் கிரிக்கெட் சபையின் விதிமுறைகளின் அடிப்படையில் குற்றமாகும். இதுபோன்ற நடத்தைகளில் ஏற்கனவே ஈடுபட்டு எச்சரிக்கையையும் பெற்றுள்ளார் ரபாடா. இதனால் அவருக்கு 2 ஆட்டங்களில் தடை விதிக்கப்பட வாய்ப்புள்ளது என்று கருதப்படுகிறது. (ம)



# ஞானம்ஸ் அணி அரையிறுதியில்

யாழ்ப்பாணம், மார்ச் 13

காசநோய் வைத்தியப் பிரிவினரால் நடத்தப்பட்ட யாழ்ப்பாண மாவட்ட அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் கரவெட்டி ஞானம்ஸ் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

கல்வியங்காடு ஜி.பி.எஸ். மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற காலிறுதியாட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் அணியை எதிர்த்து புத்தூர் ஞானவைரவர் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி ஞானம்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 68 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சேந்திரன் 34 ஓட்டங்களையும், றஜீவன் 26 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கயூரன் 2 இலக்குகளையும், ஜெயதர்சன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஞானவைரவர் அணி 5.2 பந்துப் பரிமாற்றங்களில் 19 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்ததை அடுத்து, 49 ஓட்டங்களால் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது ஞானம்ஸ் அணி. அதிகபட்சமாக ஜெயதர்சன் 10 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் கரவெட்டி ஞானம்ஸ் அணியின் சார்பில் ஜனன் 5 இலக்குகளையும், ஜெசி 2 இலக்குகளையும், சேந்திரன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

(ம-422)

## அரையிறுதியில் கிளிநொச்சி இந்து.

யாழ்ப்பாணம், மார்ச் 13

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

வட்டக்கச்சி இராமநாதபுரம் மகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற காலிறுதியாட்டத்தில் வட்டக்கச்சி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய வட்டக்கச்சி மத்திய கல்லூரி அணி 20.5 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கஜீபன் 33 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் ஆகாஸ் 6 இலக்குகளையும், டெனுராஜ் 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி இந்துக் கல்லூரி அணி 13.2 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி பெற்றது. (ம-23)

## தேசியமட்ட புட்சல் தொடரில்

# சென். பற்றிக்ஸ் மகுடம் சூடியது



யாழ்ப்பாணம், மார்ச் 13

தேசியமட்ட புட்சல் தொடரில் 16 வயதுப் பிரிவில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 'பிளேட்' கிண்ணத்தைக் கைப்பற்றியது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி மோதியது. முதல் பாதியின் முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி முன்னிலை வகித்தது. பற்றிக்ஸ் சார்பாக பதிவான இரண்டு கோல்களையும் றஜிந்தன் பதிவுசெய்தார். இரண்டாம் பாதியில் லியோ, அபிஸ் இருவரும் பற்றிக்ஸின் சார்பாக இரண்டு கோல்களைப் பதிவுசெய்தனர். முடிவில் 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி.


(ம-422)

# கயிறிழுத்தல் போட்டியில் கலைமகள் சம்பியனானது

சாவகச்சேரி, மார்ச் 13

தென்மராட்சிப் பிரதேச செயலக விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கயிறிழுத்தல் போட்டியில், கச்சாய் கலைமகள் அணி கிண்ணம் வென்றது.

தென்மராட்சிப் பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழா சாவகச்சேரி நகரசபை மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. பெண்கள் பிரிவு கயிறிழுத்தல் போட்டியில் கச்சாய் கலைமகள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கைதடி நாவற்குழி சிறிமகாவிஸ்ணு அணி களமிறங்கியது. கச்சாய் கலைமகள் விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது. (ம-9)





# கரப்பந்தாட்டத்தில் மோகனதாஸ் மகுடம்

சாவகச்சேரி, மார்ச் 13

தென்மராட்சிப் பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் மட்டுவில் மோகனதாஸ் அணி கிண்ணம் வென்றது. சாவகச்சேரி நகரசபை மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதி ஆட்டம் நடைபெற்றது. மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக அணியும் பாலாவி வொலிகிங்ஸ் விளையாட்டுக் கழக அணியும் களமிறங்கின.

மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 25:17, 25:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் கிண்ணம் வென்றது மோகனதாஸ் அணி.

(ம-9)



## இன்றைய மோதல்கள்

**நாமகள் வி.கழக கால்பந்தாட்டம்**

தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 55ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன, இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சிறி அம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து அராலி திருமகள் அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வேலணை துறையூர் ஐயனார் அணியை எதிர்த்து கரணவாய் கொலின்ஸ் அணி மோதவுள்ளது.

**நாவலர் வி.கழக தாச்சித் தொடர்**

சுதுமலை நாவலர் விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 8.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தாவடிகாளி அம்பாள் விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து வைகறை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

(ம-23)

# வாதரவத்தை விக்னேஸ்வரா அணி எல்லேயில் சம்பியன்



யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ்ப்பாணக் கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான எல்லே தொடரில், 20 வயது பெண்கள் பிரிவில் புத்தூர் வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலய அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில், வாதரவத்தை விக்னேஸ்வரா கல்லூரி அணியை எதிர்த்து உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய வாதரவத்தை விக்னேஸ்வரா கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட 30 பந்துகளில் 14 இலக்குகளை இழந்து ஓர் ஓட்டத்தைப்பெற்றது. யானுசா இந்த ஓட்டத்தைப் பெற்றுக் கொடுத்தார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணி நிர்ணயிக்கப்பட்ட 30 பந்துகளில் 9 இலக்குகளை இழந்து ஓட்டமெதனையும் பெறாமல் தோல்வியடைந்தது. மூன்றாமிடத்தை யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர்மட அணி பெற்றது. (ம-422)


## வேலை வாய்ப்பு

யாழ். நகரில் இயங்கும் தனியார் விருந்தினர் விடுதிக்கு வாடிக்கையாளர் சேவை பகுதியில் பணிபுரிவதற்கு முன் அனுபவம் உள்ள ஆண் வேலையாள் தேவை.

தங்கியிருந்து பணி புரிபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு - 071 8695 695




## சமி தொடர்பில் விசாரணைகள்

இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் சமி தொடர்பில் கொல்கத்தா பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சமி ஆட்டநிர்ணயச் சூதாட்டத்தில் ஈடுபட்டார் என்றும், இதற்காக அவர் டுபாய் சென்று பாகிஸ்தான் பெண்ணொருவரைச் சந்தித்தார் என்றும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் அவரது மனைவி முறைப்பாடு தெரிவித்திருந்த நிலையில் அது தொடர்பில்விசாரணைகளை ஆரம்பித்துள்ளது கொல்கத்தா பொலிஸ். (ம)

### தாமதமான பந்துவீச்சுக்காக

# சந்திமல்லுக்கு தடை விதிப்பு




தாமதமாகப் பந்துவீசிய குற்றத்துக்காக இலங்கை அணியின் பொறுப்புத்தலைவர் சந்திமல்லுக்கு இரண்டு ஆட்டங்களில் தடை விதித்து நடவடிக்கை எடுத்துள்ளது பன்னாட்டு கிரிக்கெட் சபை.

இலங்கையின் 70ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இலங்கை இந்தியா - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையில் முத்தரப்பு ரி-20 தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் கடந்த 10ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் இலங்கை - பங்களாதேஷ் அணிகள் மோதின.

215 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை நிர்ணயித்தது இலங்கை. இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் இலக்கை எட்டியது பங்களாதேஷ். பங்களாதேஷ் துடுப்பெடுத்தாடிய போது இலங்கை மீது ஏகப்பட்ட அழுத்தங்கள் இருந்தன. இதனால் அணித் தலைவர் உள்ளிட்ட மூத்த வீரர்கள் அடிக்கடி ஆலோசனைகளில் ஈடுபட்டனர். எனினும் தோல்வியைத் தவிர்த்துவிட அவர்களால் இயலவில்லை. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களுக்குள் வீசவேண்டிய பந்துப்பரிமாற்றங்களை விடவும் 4 பந்துப்பரிமாற்றங்களை இலங்கை அணி குறைவாக வீசியது என்று தெரிவிக்கப்பட்டது. அது தொடர்பில் விசாரணை நடத்திய பன்னாட்டுக் கிரிக்கெட் சபை இலங்கை அணியின் தலைவர் சந்திமலுக்கு இரண்டு ஆட்டங்களில் விளையாடத்தடை விதித்தது. ஏனைய வீரர்களுக்கு குறித்த ஆட்டத்துக்கான கட்டணத்தில் இருந்து 60 வீதம் தண்டம் விதிக்கப்பட்டது.

இந்த ஆட்டத்தில் பங்களாதேஷ் அணியும் ஒரு பந்துப்பரிமாற்றத்தை தாமதமாகவே வீசியது. இதனால் அந்த அணியின் தலைவர் மகமதுல்லாவுக்கு 20 சதவீதமும் ஏனையவர்களுக்கு 10 சதவீதமும் தண்டமாக விதிக்கப்பட்டது. (ம)


ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.

www.ambafrance-lk.org

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

## உடனடி தொழில்வாய்ப்பு

யாழ். மாவட்டத்தில் இயங்கும் நொதேர்ண் சென்றல் வைத்தியசாலைக்கு பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. தாதியர்கள் (Nurses)**

பின்வரும் தகைமையுடையோர் விண்ணப்பிக்கலாம். தகுதிக்கு ஏற்றவாறு உரிய தரத்தில் நியமிக்கப்படுவர்.

1. B.Sc Nursing
2. Diploma in Nursing
3. SMI, IVA, NAITA இல் பயின்று 2 வருட துறைசார் அனுபவம்.

**02. உதவி மருந்தாளர் (Assistant Pharmacist)**

1. க.பொ.த. (சா/த) (O/L) இல் (கணிதம், விஞ்ஞானம்) உள்ளடங்கலாக சித்தி அடைந்திருக்க வேண்டும்.
2. க.பொ.த. (உ/த) (A/L) இல் விஞ்ஞானப்பிரிவில் கற்றிருக்கவேண்டும்.
3. 2 வருட துறைசார் அனுபவம்.

**03. மருந்தக களஞ்சிய பொறுப்பாளர் (Medical Store Keeper)**

1. க.பொ.த. (சா/த) (O/L) இல் (கணிதம், விஞ்ஞானம்) உள்ளடங்கலாக சித்தி அடைந்திருக்க வேண்டும்.
2. க.பொ.த. (உ/த) (A/L) இல் விஞ்ஞானப்பிரிவில் கற்றிருக்க வேண்டும்.

**04. ஆண் பரிசாரகர் (Male Attendant)**

1. க.பொ.த. (சா/த) (O/L) சித்தி அடைந்திருக்க வேண்டும்.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பான விண்ணப்பங்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நேரடியாக நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கலாம் அல்லது விண்ணப்பங்களை 19.03.2018 இற்கு முன்னர் தபால் மூலமோ அல்லது மின்னஞ்சல் மூலமோ அல்லது நேரிலோ கையளிக்கலாம்.

**மனித வள முகாமையாளர், நொதேர்ண் சென்றல் வைத்தியசாலை,**
**இல. 342, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.** T.P. : 0212219988
Extension No. 324 MobileNo. : 0777732892. E-mail No. : northernhrm@gmail.com

## தேவை

- கணினி ரைப்பிங், டிசைனர்
- முகாமையாளர்
- றைவர் (லொறி)
- விநியோகஸ்தர்கள் (வீடுகளுக்குச் சென்று விநியோகிப்பவர்)

778, கே.கே.எஸ் வீதி, தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம்.
075 989 5587 (CS/14705) (11,17)

அறிமுகம் - Rs. 250/=

சிக்கன் பிரியாணி

ப்றைட் சிக்கன் - றைஸ் & பைட்ஸ்

Fried Chicken - Rice & Bites

யாழ் பாடியில் 49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

021 222 6868, 077 736 0353, 075 987 5800 (C/58237) (13,17)


## தொடரும் வெற்றிநடை நம்பிக்கையில் ரகீம்

முத்தரப்பு ரி-20 தொடரில் அடுத்தடுத்த ஆட்டங்களிலும் வெற்றிபெற முடியும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளார் பங்களாதேஷ் அணியின் இலக்குக் காப்பாளர் ரகீம்.

முத்தரப்பு ரி-20 தொடரில் கடந்த 10ஆம் திகதி நடைபெற்ற ஆட்டத்தில் இலங்கையை பங்களாதேஷ் வீழ்த்த ரகீம் முக்கிய காரணமாக இருந்தார். 215 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு துடுப் பெடுத் தாடிய பங்களாதேஷ் அணி 2 பந்துகள் மீதமிருக்க வெற்றிபெற்றது. 35 பந்து களில் 72 ஓட்டங்களைக் குவித்து வெற்றிக்குப் பெரிதும் உதவினார் ரகீம். இதனால் பங்களாதேஷ் அணியின் அடுத்தடுத்த ஆட்டங்களின் மட்டில் எதிர்பார்ப்பு நிலவுகிறது. இந்த நிலையில் இவ்வாறு தெரிவித்தார் ரகீம். இலங்கைக்கு எதிரான வெற்றி எங்களுக்கு அவசியமான தேவையாக இருந்தது. தற்போது அனைத்து அணிகளும் புள்ளிப்பட்டியலில் கிட்டத்தட்ட சம பலத்துடனே உள்ளன. அடுத்தடுத்த ஆட்டங்களில் வெற்றிபெற்றால் சாதிக்க முடியும் என்று ரகீம் மேலும் தெரிவித்தார். (ம)


கிரபிக்ஸ் டிசைன் மற்றும் வீடியோ எடிற்றிங் வல்லுனர்களுக்கான

HP Full HD IPS LED Monitors பெற்றுக்கொள்ளலாம்

HP 22ES 21.5 Inches
HP 24ES 23.5 Inches
HP 27ES 27 Inches

3 YEARS WARRANTY *Conditions Apply

Call For Details 0777 667 975

NALIN Information Technologies Pvt Ltd.

NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெற் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.03.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.